உ

தமிழ்ப் பொழில்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் திங்கள் வெளியீடு.

துணர்–௨. அட்சய-மார்கழி. மலர் : ௫, ௬.

கம்பரும் மக்கள் உள்ளமும்.

உலகத்தே மக்கள் தோன்றிய காலத்திலேயே தோன்றி, மக்கள் நாகரீகத்தோடே உடன்வளர்ந்து, மக்கள் பரவியுள்ள இடமெங்கும் பரவிக் கண்டார் மலைக்கும் தன்மையதாய் விரிந்து கிடக்கும் இலக்கியப் பரவையைக் காண்போர்க்குத் தன்கண் பற்பல வேற்றுமைகளுளவாகத் தோற்றுவது இயல்பேயாம். ஒவ்வொரு காலத்திலும், நாட்டிலும் இலக்கியத் தோற்றமுளது. பாரசீகநாட்டில் பழங்காலத்தில் தோன்றிய ஒரு நூலும் சர்மனி நாட்டில் இன்று தோன்றும் ஒரு நூலும், இவ்வாறே பற்பல காலங்களில் தோன்றும் நூற்றொகுதிகளும் இலக்கியமென்னும் பேராழியின் திரைகளேயாகும். ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் வேற்றுமையுண்டாதலும், ஒரு நாட்டிலேயே ஒரு காலத்தினும் மற்றொரு காலம் வேற்றுமையுடையதாதலும் பலரும் அறிந்த உண்மைகளாகும். இவ்வேற்றுமைகொண்டே இலக்கியப் பகுதிகளுள்ளும் வேற்றுமை காணல் எளிதெனினும், ஆழ்ந்து நோக்குவோமாயின், அவையாவும் பொதுவான சில பொருள்களையே வேறுவேறு வகையாகக் கூறுகின்றனவோ என்ற எண்ணம் தோன்றாமற் போவதில்லை. அவ்வெண்ணந்தானும் உண்மைக்கு அண்மையதேயாம்.

அவ்வாறாயின் இலக்கியத் தொகுதியுள் காணப்பெறும் பொதுப் பொருள்கள்தாம் எவையென ஆராய்வாம். உலகத்திலுள்ள இலக்கியங்களனைத்தையும் ஒருவர் நன்குகற்று அவற்றுள் காணப்பெறும் பொருள்களை வேறுபடுத்திக் காட்டக்கூடுமானால், அவையனைத்தையும், ஒருவகையில், இரு பெரும்பிரிவுகளுள் அடக்கக்கூடும். மக்கள் உள்ளத்தே நிகழும் நிகழ்ச்சிகள், தோன்றும் காட்சிகள், நெறிகள் முதலியன ஒருபிரிவாகும். மற்றொன்று புறத்தே உலகில் தோன்றும் தோற்றம், நிகழ்ச்சி நெறிமுதலியனவாம். எந்நாட்டுப்புலவரும், எக்காலத்துப்புலவரும் இவ்விரு பிரிவின்பாற்படும்பொருள்களையே, பற்பலவகையாகத்தனித்தோ கூட்டியோ தங்கள் தங்கள் தகுதிக்கும் திறனுக்குமேற்பக் கூறியுள்ளார்கள். இதனாலன்றோ கல்வியென்னும் பல்கடற்பிழைத்த நம் முன்னோராம் மூதறிவாளர்கள் பொருளை அகம் என்றும் புறம் என்றும் இருபெரும் பிரிவினுள் எளிதிலடக்கிக் கூறினர்.

உள்ள நிகழ்ச்சி, தோற்றம் முதலியவற்றைப் பெரும்பான்மையும் கூறிய புலவர்கள், ஒருவாறு இருவகையினராவர். ஒரு வகையினர் தாம் உணர்ந்தவற்றையும் தம் தொடர்பானவற்றையுமே பிறர்க்குத் தெரிவிப்பவராவர். இவ்வகையினருள் நம் நாட்டுப் புலவருட் சிறந்தோர் கடவுட்டன்மைவாய்ந்த திருவாதவூரர், நம்மாழ்வார், தாயுமானவர் முதலிய அடியார்களாவர். இத்தகைய பெரியார்களது சிந்தையும் செயலும், முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் நின்றிலகும் ஒன்றின்மேற் சென்றனவாகலின், அவர்கள் உளங்கனிந்தருளிய நூற்றொகுதிகள் யாவும் எக்காலத்தும் நிலைத்து நின்று மாறாத இன்பந்தருவனவாயின. எஞ்ஞான்றும் இறைவன்றிருவருளையே அகக்கோயிலுள்ளமைப்பச் செய்த இப்பெரியார், புறத்தே தாம் காணும் பொருள்களையும் தம் அகநிலைக்கேற்பவே கூறுவாராயினர். திருவாதவூரடிகள், "அகலம், கறுமை, ஒளி, மென்மை முதலிய வற்றால் அழகுபெற்ற கண்கள்" என்னும் ஓர் கருத்தை வெளியிடவந்த விடத்துக் கூறும் உவமைகளைப் பார்ப்போமாயின் இவ்வுண்மை நன்குபுலப்படுவதாகும்.

ஈசற்கி யான்வைத்த வன்பின கன்றவன் வாங்கியவென்
பாசத்திற் காரென்ற வன்றில்லை யின்னொளி போன்
[றவன்றோள்
பூசத் திருநீ றெனவெளுத் தாங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த் தையிற்பெரு நீளம் பெருங்கண்களே.

என்ற செய்யுளில் அடிகள் "இறைவனிடத்து யான் வைத்துள்ள அன்புபோல் அகன்றும், அவ்விறைவனால் வாங்கப்பட்ட என் பாசத்தைப்போல் கறுத்தும், அவனது தில்லையையொத்த ஒளி உடையனவாகவும், அவன் தோள்களில் பூசப்பெற்ற திருநீறுபோல் வெளுத்தும், அவனது திருமலரடிகளைப் போற்றும் எமது புகழுரைகள் ஒப்ப நீளமுடையனவாகவும் மிளிர்கின்ற பெரிய கண்கள்" எனக்கூறுகின்றனர். இதனால் இவ்வகைப் புலவர்களது நூற்றொகுதிகள் இவர்கள் உள்ளக் கருத்தையே பெரிதும் தெரிவிப்பன வென்பது தெளிவாம்.

நாம் மேற்கூறிய இருவகையினருள் மற்றொருவகைப் புலவர்கள், மக்கள் உள்ளம், வேறுவேறு நிலைமைகளிலும், தகுதிகளிலும் எவ்வாறு நிலைத்தியங்குமோ, அவ்வாறே எடுத்துக் கூறுவர். உலகத்துள் உயர்ந்த புலவர்களாகக் கருதப்படுகிறவர்களுள், பெரும்பான்மையோர் இவ்வகைப் புலவர்களே யாவார்கள். இவர்களது நூற்றொகுதிகள்யாவும் எக்காலத்தும், எத்திறத்தினர்க்கும் இன்பம் விளைவிப்பனவாகலின், பலராலும் பாராட்டப்படுவனவாகும். எவ்வளவுக் கெவ்வளவு மக்களது வேறுவேறு நிலைகளையும், உளப்பாங்குகளையும், ஏனைய வேற்றுமைகளையும், கற்போர் உள்ளத்துள் பதியும்படி விளக்கமாகவும் உண்மைக்கு மாறுபாடில்லாமலும் கூறுகின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு இவ்வகை நூல்களின் உயர்வும் தெளியப்படும்.

இத்தகைய உயர்ந்த புலவர்களுள், ஒருவராகிய **கம்பர்** என்னும் பெருந்தமிழ்ப்புலவர், மக்கள் உள்ளநிலையை எவ்வாறு உணர்ந்து, யாவரும் தெரிந்தின்புறுமாறு விளக்கியிருக்கின்றனர் என்பதை ஒருவாறு காட்டுவதாக முயலுவதே இச்சிற்றுரையின் நோக்கமாகும். இப்புலவரால் எடுத்தாளப்பெற்ற கடவுளரும்,

அசுரரும், மக்களும் பலராவர். கடவுளரைப்பற்றிக் கூறுங்கா லெல்லாம் கற்போர் உள்ளம் கடவுட்டன்மையதாகவே மாறும் படி கூறுவதும்; அசுரரைப்பற்றிக் கூறுங்கால் மாறுபட்ட, சில, ஆராயத்தக்கக் கருத்துகள் தோன்றச்செய்வதும்; மக்களியற் கையைக் கூறுங்கால் மக்களாய் நாம் பலரும், உணரக்கூடியதுங் கண்டின்புறத்தக்கதுமாய, அறிவு வளர்ச்சிக்கேற்ற பல செய்தி களைக் கூறுவதும் இப்புலவரது பல மாண்புகளுட் சிலவாகும்.

இப்பெரியாரது உள்ளக் கண்ணாடிவழி நாம் பார்க்கும் பல ருள் **குகன்** என்னும் பெயருடைய வேடர் தலைவனைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். இவ்வேடர் தலைவன் கங்கைக் கரையில் பல ஓடங்களை வைத்துக்கொண்டு ஆறுகடப்பதற்குத் துணையாய் நிற் பவன். அரசர்களது ஆணைசெல்லும் எல்லைக்குப் பெரிதும் புறம்பே நிற்கின்றவனாகையாலும், இயற்கை உணர்வேயன்றிச் செயற்கை அறிவு சிறிதுமில்லாதவனாகையாலும், அளவுகடந்த வீரமும், அடிமையுள்ளமு முடையவன். அரசகுமாரனும் இரா மனைக்காண விரும்பி அவனிருக்கைக்குச் சென்ற இக்குகன் அவனைக் கண்டவுடன் நிலஞ்சென்னியுற வணங்கிநின்ற நிலையை நமது புலவர் கூறியுள்ளதைப் பார்ப்போமானால், இன்றும் மக்க ளுள் மிகத்தாழ்ந்தவர்களாகத் தங்களைத் தாங்களே எண்ணிக் கொள்பவர்கள், தங்களால் உயர்ந்தோர் என்று எண்ணப்படுகிற வர்கள்பால் நடந்துகொள்ளும் முறையை ஓவியம் வரைந்தாற் போல் காட்டுகின்றது.

(தொடரும்.)

நீ. க.

உ

உலகவரலாறு

(முற்றொடர்ச்சி)

திருவாளர் ஔவை சு. துரைசாமிபிள்ளையவர்கள்
ஆசிரியர், க. த. சங்கம்.

ஞாயிற்றின் இயற்கையைப்பற்றிப் பல வேறு வகைப்பட்ட ஆசிரியர்கள் கூறியவற்றையும், அவற்றோரன்ன பிறவற்றையும் நாம் ஆராய்ந்து கொண்டே செல்லின், இத்தலைப்பொருள் முற்றுப்பெறல் அரிதாமாகலின், அவ்வாராய்ச்சியை இம் மட்டினிறுத்தி, இக்கட்டுரைத் தொடக்கத்திற்கூறிய பூமியின் சுழற்சியைப் பற்றிச் சிறிது நோக்கிப்பின் அதன்வரலாற்றை யாராய்வோம்.

மேல் நாட்டில் பழங்காலத்தில் லெய்டென் (Leyden) என்னும் பல்கலைக்கழகமொன்றில், பேராசிரியராய் வான்புடிங் காப்ட் (Vonpuddingcoft) என்பாரொருவரிருந்தார், அவர் ஒரு பேராசிரியனுக்குள்ள அமைதிமுற்றும் நிரம்பப் பெற்றவரெனினும் தேர்தல் (Examination) காலங்கள் அறிந்து சோர்துயில் கொள்வார். அதனால், அவர் மாணவர்கள், கற்றற்றிறம் சிறிதும் களியாட்டயர்தல் பெரிதும் பயின்றுவிளங்கினர்.

ஒருநாள், இவர் மாணவர்க்கு நிலவுலகைப்பற்றிய ஓர் விரிவுரை நிகழ்த்துமமையத்து, வாளி (Tub or bucket) யொன்றிற்றண்ணீர் கொண்டு, ஏந்தியகையராய் அதனைநீட்டிய வண்ணம் நேரே பிடித்துச்சுற்றினர். சுற்றுங்கால் வாளியிலிருந்த நீர் கீழேவீழாது, அதனிடத்தேயே நின்றது. இதனை ஓர் காட்டாகக்கொண்டு, அவர் பின்வருமாறுதன் மாணவர்கட்குக் கூறுவாராயினர்.

"இவ்வாளியே பூமியாகவும், அதன் நீரே கடலாகவும் நீட்டிப்பிடித்த கையே பூமிக்கும் ஞாயிற்றினுக்குமுள்ள தொடர் பாகவும், என் சென்னியே ஞாயிறாகவும் கொள்க. யான் வாளியைச்சுற்றுங்காலெழுந்த விரைவின் பயனாக, எங்ஙனம் அதன் கணிருந்த தண்ணீர் கீழேவிழாது நின்றதோ அங்ஙனமே இப்பூவுலகு சுற்றும் நேர்மையால் அதன்கணுள்ள கடனீரும் இருந்த வண்ணமே நிற்கின்றது, எனஅறிக. யான் சுற்றும் நெறியினின் றும் உடனே நிறுத்தினாலும் அவ்வாளியே யாதானுமொன்றால் தடைபெற்றாலும் அதனீர் கைவழியே என்தலைமிசைவிழும். இது உண்மை. இங்ஙனமே, பூமியும் தன் விரைந்த சுழற்சியினின்றும் யாதானுமொன்றாற்றகையப்பெறின், கடனீரும், அதன் பயனாக ஞாயிற்றின்மீது விழும், வீழினும் ஞாயிற்றின் வெம்மையும், ஒளியின் மிகுதியும் எவ்வாற்றானுங்குறைபடா வென்பதைச் சிறிதும் மறவற்க. என்னே: ஞாயிற்றின் வெம்மைக்கு இம்மண் சூழ்ந்தகடனீர் ஆற்றாதாகலின் என்க."

இதனைக்கேட்ட மாணவர்களுளொருவன், தன் ஆசிரியருரைத்தபொருள் எத்துணையுறுதியுடைத்து, எனக்காண்டல் வேட்கைமீதூர்ந்து, வாளியைச்சுற்றிநின்ற, ஆசிரியரது கையை இடைநின்று தடுத்தான். தடுக்கவே அவ்வாளிநீர் அவர் உடல் முழுதும் வீழ்ந்து நனைத்தது, வாளியும் கீழ்வீழ்ந்தழிவுற்றது. ஆசிரியர்க்கும் அடக்கலாகா வெகுளிபிறந்தது. முகங்குருதி பாய்ந்து செக்கர்ச்செவேரெனச் சிவந்தது. உடனே கண் கறுப்ப வீசைதுடிப்ப, அவரது மடித்தவாயினின்றும், வெடித்த சொற்கள் பல வெளிவந்தன. கண்டார் மாணவர்கள். கண்டாரது கருத்தில் பேரச்சந்தோன்றி ஒரு புடைவருத்தினும், மறுபுடை, வாளிநீர்பாய்ந்தும், தங்கள் ஆசிரியர்முகம் தன்னொளிகெடாதிருந்தமைகண்டு, இன்னணமே கடனீர் வீழினும், ஞாயிற்றின்றன்மை திரியா தென்பது முண்மையே எனமனந்தேறிச் சென்றனர்.

இந்நிகழ்ச்சியில், மாணவரது அறியாமைக் குறும்பு ஒரு புடைத் தேற்றமாயினும், நாம் நுணுகிநோக்கி அறியக்கிடப்பன பல்வுள. அவை உயர்ந்தோர் தம் உண்மையறிவானாராய்ந்து

காணும் அரியபொருள்களை, இயற்கை நங்கையும் உடன்கொள்ளாது, அன்வதாமே முதிர்ந்து வருந்துணையும் வேறாய் நிற்பளென்பதும்: இன்னோரன்ன அரியபொருள்கள் அறிவுடையோர் மனக்கண்ணிற்றோன்றி, அவரான்வெளியிடப்பெறுங்கால், அவற்றையேற்கும் ஆற்றலில்லாப் பிறமக்கள்—இயற்கை நங்கையின் இளஞ்சிறாராய இம்மக்கள்—ஏற்காதொழிவதன்றி, அவற்றையும்; வெளியிடுவோரையும் மிகப்பல இடையூற்றுக்குள்ளாக்கித் துன்புறுத்துவரென்பதும்; இதனாலெய்தும் குறை அவ் அறிஞர்களதோ, மற்று, அவர்கள்கண்ட பொருள்களதோவென்பார்க்கு அது அவ்விரண்டிடத்துமன்றாய் இயற்கையின்பாற்றாமெனக் கோடல் வேண்டுமென்பதும்; இவ்வியற்கை நங்கைதான், அவை வெளிவருங்கால், மக்கள் அவற்றை யெளிதிலறிந்து ஏற்காவண்ணம் மயக்குவதோடு அமையாது, அவ் அறிஞர்களுக்கு இன்னலிழைக்குமாறு அவர்களைத் தூண்டுதலும் செய்வாளென்பதும், இங்குக்கூறிய இரண்டு குணங்களின் வயப்பட்ட இவடன் மாயையே மேலேநிகழ்ந்த நிகழ்ச்சிக்கும் காரணமாமென்பதும்; தம் உடற்கும் வாளிக்கும் இடைநின்ற கையே ஞாயிறு பூமி முதலியவற்றின் இடைநிற்கும் தொடர்பென்றும், இத்தொடர்பே உலகம்நின்று நிலவுதற்கு இன்றியமையாப் பொருளென்று மவர் கூறியது உண்மையேயாம் என்பதும்; இதனை அவ்வாசிரியர் வெளியிடுதலுமியல்பே யென்பதும்; இடைநின்ற தொடர்பு தடைப்பட்டழியுங்காலத்துத் தன் மாட்டிழுக்கும் தன்மைத்தாய ஞாயிறு தன் தன்மைதிரியாது நிற்குமென்பதும் இன்னோரன்ன பிறவுமாம்.

இக்கருத்து மெய்க்கருத்தேயென மேனாட்டுப்பெரும் புலவர்கள் அனைவரும் உடன்பட்டனர் இன்றும் உடன்படுகின்றனர். அவர்கள் "நிலத்துக்கும் ஞாயிற்றினுக்குமுள்ள தொடர்பு ஓர் காலத்து அழியும்; அவ்வழிவால் நிலம் தன்நிலை பெயர்ந்து ஞாயிற்றின் கட் பட்டழியும்." என்பதையே இன்னும் எதிர் நோக்கி நிற்கின்றனர். மற்று, அவர்தம் நோக்கத்திற்குமாறாக, இம்மண்ணுலகு தன் தொடர்பை இழத்தலின்றித்தன் நிலைமை மாறாமையும் பெற்று விளங்குகிறது. இவ்வியற்கைப் புலவர்க

ளுடைய கொள்கைகள் முற்றுப்பெறுநாள் எந்நாளோ! இது காரணமாக எழுந்தகொள்கைகளும் புலவர்களும் விண் மீன் தொகையினும் பலரே. என்செய்வர்! தாம் ஆய்ந்தறிந்த உண்மைப்படி உலகம் தன் தொடர்பு கெட்டாலன்றோ அவர்கள் மனம் அமைதிபெறும்! இன்றேல், இப்புலவர்களையும் இயற்கையையும் ஒன்றுவிக்கும் சந்தாம் தன்மையுடைய புலவர்களேனும் வரல் வேண்டும்; அவர்களும் வந்தாரிலர் !!

ஆகவே, தாம் கொண்ட உண்மைப்படி உலகம் நடைபெறுமைகண்ட அவர்கள் உலகநடைப்படித் தம் முண்மைகளைச்செலுத்தி நோக்கினர். அது கொண்டே மேற்போந்த பேராசிரியரும் "பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தொடர்பு கெடின், அவை அக்கேட்டிற்குக்காரண மாயவற்றைத் தொடாது, ஒன்றுடனொன்று அழிந்தொழியு மெனினும், இவ்வுலகம் ஞாயிற்றைச்சுற்றி வருதலென்பதுண்மை" யென ஆண்டுக்கூறுது கூறிப்பின்னரோரமயத்தினன்கு விளக்கினர். அது முதற்கொண்டு, உலகம் பகலவனைச்சுற்றி வருகிறதென்பதும், அச்சுற்றுக்கும் ஞாயிற்றினுக்குமுள்ள தொடர்பும் நெறியும் சுற்றும் பொருளைச்சார்ந்தனவென்பதும் முடிந்த முடிபுகளாயின.

1. உலகின் தோற்றம்.

மேற்கூறியவாற்றான்மண், ஞாயிறு முதலிய உலகங்களின் பொதுவியல்புகண்ட அன்பர்கள் அவற்றின் றோற்றத்தைக்காண அவாவுவரன்றே! அவ்வவாவும் அறிவின்பாலதேயாம். ஆயினும், உலகின்றோற்றத்தைக் காண்டல் செல்லும் நாம் முதற்கண் நம் தோற்றத்தை யறிவோமாவென்பது வினா. அவ்வினாவிற்குப் போதிய விடையளிக்கவல்ல முடிபுகள் இதுகாறும் கிடைத்தில கிடைப்பதுமரிதே. அற்றேல், நம் நாட்டுப்பண்டைய முனிவர்களும், பெரியோர்களும் கண்டாய்ந்தவை என்னையவோவெனின், அவை அவரவர்கள் கொண்டுசென்ற அறிவின்றிண்மைக்கேற்ப அமைந்துள்ளனவேயன்றி, எல்லாமக்களானும் கொள்ளப்பெறவில்லை. இன்னணமே பிறநாட்டார் கூறிய முடிபுகளும் அமைந்

துள்ளன என்க எனவே இருதலையும்தூக்கி நோக்குங்கால் ஒரு வகைமுடிபும்பெறுதல் அரிதாகின்றது. இத்தனையும்நோக்கியோ நம் நாவரையரும் "வந்தவாறெங்ஙனே? போமாறேதோ? மாயமாம் பெருவாழ்வு" எனத் திருவாய்மலர்ந்தது!

இங்ஙனம் நம் தோற்றமே மாயமெனின், நாம் நின்று நிலவும் உலகின் தோற்றமும் மாயமேயாம். ஆயினும், நம்நாட்டுப் பெரியோரது கொள்கையோடு பிறநாட்டுப் பெரியோர்களது கூற்றுக்களை நோக்கி மனத்தான் ஆராய்வோம்.

உ

தமிழ்த்தாய் வாழ்க.

தமிழர் வீரம்.

(முற்றொடர்ச்சி.)

சாமி, சிதம்பரன் எழுதியது.

இவ்வாறு பாரியின் ஆற்றலைக் கபிலர் கூறக்கேட்ட மூவேந்தர்களும், அப்பாரியின் ஆற்றலுக்கு அஞ்சிப் போர்செய்ய முடியாதவர்களாகவும், நாணத்தால் சென்று இறக்க இயலாதவர்களாகவும், இருந்தமையால், மீண்டுந் தமது நாட்டை யடைந்தனர். அதுமுதல் பாரியின் புகழ் மேன்மேலும் வளர்ந்தது. மூவேந்தர்களின் பெருமை குறைவதாயிற்று. இந்த நிலையில் பாரி தனது ஆட்சிக்குட்பட்ட முந்நூறு ஊர்களையும் இரவலர்களுக்குக் கொடுத்துவிட்டான். பாரியும் அவனது உயிர்த்துணைவராகிய கபிலருமே மிகுந்திருந்தனர் அவனது பறம்புமலையும் இரவலரால் கொள்ளப்படாமல் பாரியின் உரிமையாகவேயிருந்தது, மீண்டும்

மூவேந்தர்களும் அழுக்காறென்னும் பகைவனால் தூண்டப் பெற்றுப் பாரியுடன் பொருதற்காகப் பறம்புமலையைச் சார்ந்தனர். அதுகண்ட கபிலர் அவர்களைப்பார்த்துக் கூறுகின்றார்:—

"ஓ சேரசோழபாண்டியர்களே, முன்வைத்த காலைப்பின் வைக்காமல் போர்செய்யுந்திறமுடைய சேனைகளுடன்; நீங்கள் மூவரும் ஒன்றுகூடிப் பாரியை எதிர்ப்பீர்களாயினும், உங்களால் வெற்றிபெறவியலாது, பாரியின் பறம்புமலையைக்கைப்பற்றவுமியலாது. குளிர்ந்த இந்தப்பறம்புநாடு முந்நூறு ஊர்களையுடையது. அம்முந்நூறு ஊர்களையும் இரவலர்கள் பெற்றுக்கொண்டனர். யாமும்பாரியுமே மீதமாக வுள்ளோம். பறம்புமலையும் மிகுந்திருக்கின்றது. நீங்கள் பாரியின்மீது பாடல்பாடிக்கொண்டு புலவர்களைப்போல வருவீர்களாயின் விரும்பியவற்றைப் பெறலாம்" என்றுகூறினர். இதனை

> கடந்(து) அடுதானை மூவிருங்கூடி
> உடன்றனிர் ஆயினும் பறம்புகோளற்(கு) அரிதே;
> முந்நூ(று) ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு;
> முந்நூ(று) ஊரும் பரிசிலர் கொண்டனர்;
> யாமும் பாரியும் உளமே
> குன்றும் உண்டு நீர்பாடினிர் செலினே. (பு—நா 110)

என்றபாடலாற் காண்க.

இத்தகைய சிறப்பையும் ஆற்றலையும் உடைய நமது தமிழ் வள்ளலைத் தமிழ்வீரனென்று கூறுதற்குத்தடையென்னை? ஈண்டு நமது புலவர் பெருமானாகிய கபிலர் வீரத்தையும் சிறிது நோக்க வேண்டும். கபிலர் ஒரு குறுநிலமன்னரையடுத்திருந்த இரவலர். அவ்வாறிருந்தும் முடியுடை மூவேந்தரிடத்துத் தமது நண்பன் திறத்தைச் சிறிதும் அஞ்சாது எடுத்துக்கூறினர். இதுமட்டோ? நீங்களும் இரவலர் போலச் சென்று எமது கோமானிடம் கையேந்தி நில்லுங்கள் என்று கூறினர். இதுதான் பண்டைக்காலத் தமிழ்ப் புலவர்களின் வீரமாகும். இது போன்ற செய்கைகளையெல்லாம் யாம் தமிழர் வீரம் என்று கூறுகின்றேம், கூறுதற்கு ஏதேனும் தடையுண்டோ?

இனி, பல்யாக சாலை முதுகுடுமிப்பெரு வழுதி என்ற பாண்டியமன்னன் வீரத்தை நோக்குவோம். இவன்புகழும் வீரமும் அளவிடற் கரிதாயிருக்கின்றன. இப்பாண்டிய மன்னன் காலத்தில் ஆரியர்கள் நமது நாட்டில் மிகுதியாகக் குடிபுகுந்திருக்க வேண்டுமென ஊகிக்க இடந்தருகின்றது. இம்மன்னன் ஆரியர்களை மிகவும் பேணி அவர்களுக்கு வேண்டிய உதவிகள் யாவும் செய்திருக்கவேண்டுமென்றுங்கொள்ளலாம். இம்மன்னன் ஆரியர்கள் வேதத்தில் கூறப்பட்டுப் பல யாகங்களை நிறைவேற்றியதனால் **பல்யாக சாலை** என்ற சிறப்புப்பெயரையும் தன் இயற்பெயருடன் இணைத்துக்கூறும் இயல்புடையவனாயினான். தமிழர்க்கும் வேள்வியென்பதொன்றுண்டு; அதனையே மிகுதியாகச்செய்தமையால் அப்பெயர் பெற்றான் என்று கூறுதற்கியலாதோ வெனின், இயலாது. யாகசாலை என்ற வடசொல்லே பெயராக வந்திருக்கின்றமையால் **வடநாட்டாருடையவேள்வி**யைத்தான் செய்திருத்தல்வேண்டும். ஆயினும் இவன் வீரத்திற் சிறிதும் குன்றாதவனாயிருந்திருக்கின்றான். இவன் தன்பகைவர்களுக்கு அளவற்ற கொடுமைகளைச்செய்திருக்கின்றான். நல்லோருக்கு நன்மையே செய்தான். அறப்புரிவதில் மிகவும் சிறந்து விளங்கினான். மேற்கூறியவற்றை, இவனைப்பற்றிக் **காரிகிழார், நெட்டிமையார்** என்னும் புலவர்கள் பாடியிருக்கும் பாடல்களை நுணுகியாராய்ந்தால் நன்கு அறியலாம். காரிகிழார் என்பவர் இவன் புகழையும் ஆற்றலையும் கூறுவதைநோக்குவோம்.

"நீ பகைவருடைய கோட்டைகள் பலவற்றையும் கைக்கொள்வாய்; கைப்பற்றப்பட்ட கோட்டைகளில் உள்ள, அழகுபெறச்செய்த நல்ல பொருள்களை நீயே உரிமையாக்கிக்கொள்ளாமல் இரவலர்களுக்குக் கொடுத்துவிடுவாய். உனது வெண்கொற்றக்குடை, முனிவர்களால் வணங்கப் பெறும், மூன்று கண்களையுடைய சிவபெருமான் திருநகரை வலஞ்செய்கின்ற காலத்தில் தாழ்க. (வேறு எவ்வமயத்திலும் தாழாதிருப்பதாக) பெருமையிற் சிறந்தவனே! நினது முடி நான்கு வேதங்களையும் அறிந்த பார்ப்பனர்கள் பொருள் வாங்குவதற்காக ஏந்திய கையின் எதிரே வணங்குவதாக. (வேறுயாரையும் வணங்காதிருப்பதாக)

இறைவனே! நினது மாலை பகைவருடைய நாட்டைச் சுடும் போது, தீநாற்றமுடன் எழுந்தபுகையினால் வாடுக.. (வேறு எப் பொருட்டினாலும் வாடாதிருப்பதாக) நினது சினம், உன் மனைவி களுடைய மகிழ்ச்சி பொருந்திய அழகிய முகத்தைக்கண்ட போது தணிவதாக. (பகைவர் மாட்டுத் தணியாதிருப்பதாக.) வெற்றிகளை யெல்லாம் வென்று உரிமையாக்கிக் கொண்டகுடுமி யென்னும் பெயரையுடையவனே! நீ இவ்வுலகில் குளிர்ந்தஒளியை யுடையமதிபோல் அண்டினவர்களுக்கு நன்மை புரிந்துகொண் டும், சுடுகின்ற ஒளிபொருந்திய பகலவனைப் போல் பகைவர்களுக் குத் தீது புரிந்து கொண்டும் நிலை பெற்று வாழ்வாயாக' என்று காரிகிழார் கூறியிருக்கின்றார். இதனை—

... ... ஆர் எயில்பலதந்து
அவ்வெயிற்கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசில் மாக்கட்கு வரிசையின் நல்கிப்
பணியியர் அத்தை நின்குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ்செயற்கே;
இறைஞ்சுக பெரும! நின்சென்னி, சிறந்த
நான் மறைமுனிவர் ஏந்துகை எதிரே;
வாடுக, இறைவ, நின்கண்ணி, ஒன்னார்
நாடுசுடு கமழ்புகை எறித்த லானே;
செலியர் அத்தைநின் வெகுளி வாலிழை
மங்கையர் துளித்த வாண் முகத்(து) எதிரே;
ஆங்க,

வென்றியெல்லாம் வென்(று) அகத்(து) அடக்
தண்டா ஈகைத் தகைமான் குடுமி!
தண்கதிர் மதியம் போலவும், தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னுக பெருமநீ நிலமிசை யானே. (பு—நா 6)

என்ற பாடலால் அறியலாம். மேற்கூறியவற்றால் இவன் வீரச் செயல் வெளிப்பட்டுக்கிடக்கின்றதன்றோ?

இம்மன்னவன் போர் செய்யும்போது தன்னோடு எதிர்த்து நிற்பதற்குத் தகுதியுடைய வீரர்களோடுதான் போர் புரிவான். போருக்குத்தகுதியற்றவர்களுடன் போர்புரியமாட்டான். இவன் வேற்று வேந்தன் நகரின்மீது படை யெடுத்துச் சென்று செருச் செய்யத்தொடங்கும்போது, தான்போர்செய்யப்போந்திருக்கும் செய்தியைப் பறைசாற்றித் தெரிவிப்பான். அதனால் போர்செய் யத்தகுதியற்றவர்களை ஊரை விட்டகலும்படிசெய்வான். இதுவே அறவழியிற் போர்புரிவதாகும். இச்செய்கையை நெட்டிமை யார் என்னும் புலவர் கூறியிருக்கின்றார். அதனைக் காணப்புகு வோம்.—

"ஓ பசுக்களே! பசுவின்தன்மையையுடைய பார்ப்பனர் களே! பெண்களே! பிணியுடையவர்களே! மூதாதையர்க்குச் செய்யவேண்டிய கடன்களை வழுவாமல் செய்வதற்காகப் பொன் போன்ற "புதல்வர்"களைப் பெறுதவர்களே! இப்பொழுது எனது அம்பை விரைவாகச் செலுத்தப்போகின்றேன்; ஆதலால் நீங்கள் உங்களைக் காப்பாற்றிக்கொள்ளத் தகுந்த இடத்தை நாடிச்சென்றுவிடுங்கள்; என்று அறநெறியைச் சொல்லுந் தன் மையையும், அதற்கேற்ற வீரத்தையும் உடையவனே! பகைவர் களைக் கொல்லும் யானைகள்மேல் உயர்த்தப்பட்ட கொடிகள் விசும்பை மறைக்கும் படையையுடையவனே! குடுமி என்னும் பெயரையுடைய எமது அரசனே! நீ நீடூழி வாழ்வாயாக." என்று நெட்டிமையார் கூறியிருக்கின்றார். இதனை:—

ஆவும், ஆன் இயல் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடை யீரும், பேணித்
தென்புலம் வாழ்நர்க்(கு) அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்,
எம்அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்,என
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய! குடுமி! (பு, நா 9)

என்ற பாடலால் அறிக.

இனி மற்றொரு மன்னவனாகிய கிள்ளிவளவனை ஆலத்தூர் கிழார், வெள்ளைக்குடிநாகனார், மாறோக்கத்துநப்பசலையார், ஆவூர்மூலங்கிழார், கோவூர்கிழார், இடைக்காடனார், ஆடு துறை மாசாத்தனார், ஐயூர் மூடவனார், நல்லிறையனார், எருக்காட்டூர்த்தாயங்கண்ணனார் முதலிய புலவர்கள் பாடியிருக்கின்றனர். அப்பாடல்களால் இவன் வரலாற்றை அறியலாம். இவன் உறையூரைத் தலைநகராகக்கொண்டு சோழநாட்டை ஆட்சிபுரிந்தான். கொடையினும் வீரத்தினும் மேம்பட்டு விளங்கினான். ஒருகாலத்தில் சேரமன்னனுடன் பொருது வெற்றி கொண்டிருக்கின்றான். இவன் வீரத்தின் சிறப்பை ஆவூர்மூலங்கிழார் என்னும் ஒருவர் வாய்மொழியாலேயே நன்கறியக்கிடத்தலின் அதனைமட்டும் கூறிநிறுத்துகின்றேன்.

"பெரியசேனையையுடைய வீரம்பொருந்திய அரசனே! நீ வெகுண்டு பார்க்கும் இடங்களில் தீத்தவழும். நீ விரும்பிப் பார்க்குமிடங்களில் பொன்விளங்கும். அன்றியும் பகலோன் மாட்டு நிலவுவேண்டுமென்று விரும்பினால் அவ்வாறே நிலவை உண்டாக்குவாய். வெண்மையான மதியினிடத்தில் வெயில் உண்டாகவேண்டுமென்று விரும்பினால் அவ்வாறே உண்டாக்குவாய். இத்தகைய வீரமுடன் விளங்குகின்றாய்" என்று கூறுகின்றார். இதனை

வியன்தானை விறல் வேந்தே!
நீ, உடன்று நோக்கும்வாய் எரிதவழ
நீ, நயந்து நோக்கும் வாய் பொன்பூப்பச்
செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்
வெண்திங்களுள் வெயில் வேண்டினும்
வேண்டியது விளைக்கும் ஆற்றலை (பு. நா. 38.)

என்ற பாடலாற் காண்க. இனி வேறு வீரர்களிடஞ்சென்று அவர்கள் தன்மையை அளந்தறிவோம்.

(தொடரும்.)

வரலாற்று மொழிகள்.

நாய்க்கர்.

திருவாளர் சி. சோமசுந்தர முதலியார் அவர்கள், கரந்தை.

இனித் தன் பொருளையும், தன் வரலாற்றையும் தானே உணர்த்தவல்ல மொழிகளுள் நாய்க்கர்என்பதும் ஒன்றேயாகும். நாய்க்கர் என்பது இக்காலத்து வடுகர் என்று பெரும்பாலும் தெலுங்குபேசும் ஒரு வகுப்பாரால் தம் இயற்பெயரோடு கூட்டி யுரைக்கப்படும் சொல்லாக இருக்கின்றது. தமிழில் நாய்க்கர் என்ற சொல் தெலுங்கு விகுதி புணர்த்தி நாயடு என்றும் வழங்கப்படுகின்றது. அஃதன்றித் தெலுங்கு பேசும் மக்கள் தங்கள் தந்தையை அல்லது மூத்தாரைக் கூறுமிடத்து நாயனு என்று கூறுகின்றார்கள். இஃதன்றி தமிழ் மக்களுள்ளும் சிலர் நாயகர் என்றும் நயினர் என்றும் அழைக்கப்படுகின்றனர். பின்னது நாயனரின் மரூஉவென நன்கு விளங்கும். மலையாளிகள் தங்களை நாயர் என்று கூறுகின்றனர், இச்சொற்களெல்லாம் தலைவன் என்னும் பொருளையே தருமென்பது சொல்லாமலே விளங்கும். இச்சொற்கள் எல்லாம் தமிழ்ச் சொல்லடியாகப் பிறந்ததா என்று சற்று ஆராய்வோம். ஆரியத்தில் நாயக என்பது தலைவன் என்ற பொருளுடன் இருக்கின்றது. அதுபற்றி மாத்திரம் மேற்காட்டிய சொற்களெல்லாம் ஆரியத்தினின்று பிறந்தன என்று நிலைநிறுத்தல் சாலாது. இச்சொற்களை ஊடுருவிப்பார்க்கின் இச்சொற்களின் முதல் நாய் எனக்காணும். அம்முதல் வடமொழியென்றுகூற ஒரு சிறிதுமிடமில்லை. ஒருவாறுகூறினும் தலைமையென்னும் பொருளுடன் இயைபு காட்டக்கூடியதோர் பொருள் பெறக்கூடிய முதல் அல்லது தாதுவாகக் கொள்ளுவதற்கு ஒரு சிறிதும் இடம் கொடுப்பதாகக் காணேம்; பின்னர் நாயென்னும். தமிழடியாகப் பிறந்த சொல்லெனக்கொள்ளின் தலைவன் என்னும் பொருளொடு பொருந்துமாறெங்ஙன்? என்ற வினு நிகழ்தல்கூடும். ஆயன் என்பது எங்ஙனம் ஆக்களைஉடைய

வினைக்குறிக்க வந்ததோ அங்ஙனமே நாயன் என்பது நாய்களை உடையவனைக் குறிக்கஎழுந்ததுஎனின் இழுக்கின்று. மிகப்பழங் காலத்து மாந்தர் நிரையோம்பலாலும் வேட்டுவத்தொழிலாலும் வாழ்ந்தனர் என்பது தமிழ்மக்கள் "ஆயர்வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்—ஆவயின் வரூஉம் கிழவருமுளரே" என்று தமிழ்த் தொல்லாசிரியராகிய தொல்காப்பியர் கூற்றால் நன்கு விளங்கும். வேட்டுவத்தொழிலுக்கு அப்பண்டைக்காலத்தில் நாய்கள் இன்றியமையாது வேண்டியனவாகயிருந்தன என்பதை யொருவரும் இக்காலத்தும் மறார். வேட்டுவத் தொழிலுக்கு இன்றியமையாது வேண்டிய நாய்களை உடைமைபற்றி வேட்டுவனை நாயன் அல்லது நாயகன் என்று கூறுதல் இயல்பே. நாய்களை உடைமைபற்றி தலைவன் என்ற பொருளுடன் நாயகன் என்னும்சொல் ஆளப் பட்டிருத்தலை தொல்காப்பியம் உவமவியல் நச்சினார்க்கினியர் உரையிற்காட்டிய

"நாயகர்க்கு நாய்கள்போ னட்பிற் பிறழாது
கூஉய்க் குழாஅ முடன்கொட்டு—மாய்படை
பன்றி யனையர் பகைவேந்த ராங்கவர்
சென்றெவன் செய்வர் செரு." (312.)

என்னும் செய்யுள் நன்கு விளக்கும்.

நாயகன் என்னும்சொல் பொதுவாக தலைவன் என்னும் பொருளுடன் வருவதை ஆன்றோர்செய்யுளில் பரக்கக்காணலாம். நாயன் என்னும்சொல் தலைவன் என்னும் பொருளில் வருவதை "நாயனை அடியானேவும் காரியநன்று" என்ற பெரியபுராணஅடி நன்குவிளக்கும். அதுபற்றியே தொண்டின்றலைமைபற்றிப்பெரிய புராணத்தில் கூறப்படும் தொண்டர்களை 'நாயன்மார்' என்று கூறும்வழக்கு இற்றைக்கும் உள்ளது. இப்பொழுதும் போர் வீரரைக்குறிப்பதற்கு நாயிக் என்று ஆங்கில ஆட்சியில் வழங்கி வருகின்றது. இது நிற்க, நாயகர் அல்லது நாயக்கர் என்னும் சொல் தமிழ்மக்களில் ஒருவகுப்பினரை மாத்திரம் குறிப்பதற்கு காரணம் என்னை என்றாராய்தல்வேண்டும். நாயகர் என்னும் பெயரைத் தம்முரிமைப் பெயராக வைத்துக்கொள்பவர், படைத் தலைவர் என்ற பொருளை உள்ளடக்கிய "படையாட்சிகள்" என்ற

மறுபெயரால் அழைக்கப்படுவர். இரு பெயருக்கும் உள்ள பொருட் பொருத்தம் தெற்றென விளங்கும். நாயக்கர் என்னும் சொல்லை தம்முரிமைப் பெயராக வைத்துக்கொள்பவர் வடுக வகுப்பினரென்று முன்னரே குறித்திருக்கின்றோம். அதற்குக் காரணம் அவ்வகுப்பினர் பெரும்பாலும் பழங்காலத்தில் வேட்டுவர்களாக இருந்தமைதான். "கொடுகு வெஞ்சிலை வடுகவேடுவர்" எனத் திருமுருகன்பூண்டித்தேவாரத்து வன்றொண்டர் பணித்ததும் இதற்குச்சான்று பகரும். அவர் நாய்கள்கொண்டு வேட்டையாடும் தொழிலையுடையவரென்பதைக் குறித்தற்கே "கதநாய் வடுகர்" என்று அகநானூற்றில் கூறப்பட்டிருக்கின்றது. மீண்டும் ஆளுப. வடுகர்க்கு நாய்களை உடைமைபற்றி நாய்க்கர் என்ற பெயர் வந்த காரணம்பற்றிப்போலும் நாயை ஊர்தியாகவுடைய வைரவக் கடவுட்கு வடுகன் என்ற பெயர் நிகண்டிற் காணப்படுதலும். "வடுகனை வணக்கஞ்செய்வாம்" எனக்கந்தபுராணமுதலிய ஆன்றோரிலக்கியங்களிற் காணப்படுதலுங் கருதத்தக்கது. இவ் வடுகர் என்றதுதான் அவ்வகுப்பாரை ஏன் குறித்தது என்ற கடாநிகழ்தல் கூடும். வடவர் என்றதின் திரிபு வடுகர் என்க. தமிழ் நாட்டின் வடஎல்லையில் இருந்ததால் அவர் அங்ஙனம் அழைக்கப்பட்டனராதல்வேண்டும்.

திருவாளர் பா. வே. மாணிக்கம் நாயக்கர் அவர்களுடைய அஜ்ஞாநத்தின் ஆய்வுரைகளும், அவைகளுக்கு அஜ்ஞாநக் குறிப்பும்.

1-வது ஆய்வுரை.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர், திருவாளர். த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் எழுதியது.

இவ்வரிய கட்டுரை நூலைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 7-8-வது ஆண்டின் திருவிழாவில் அரங்கேற்றிய நாள்முதல்

அதனை அச்சேற்றி வெளியிடவேண்டுமென இந்நூலாசிரியரை மிகப்பலர் வேண்டினோம். அதற்கு அவர்கள் மனமுவந்து ஒப்பினார்கள். அச்சிட்டுவந்த உடன் எனது நண்பர் **கணபதிப்பிள்ளை** அவர்கள் ஒரு (a) பதிப்புரை எழுதித் தருகவென என்னைப் பணித்தனர்; ஒருப்பட்டேனெனினும் உடனே எழுத மனந் தேறவில்லை. இந்நூலில் நிறைந்திருக்கும் தத்துவப் பொருள் களைத் தெரிவதற்குவேண்டிய அறிவு ஆற்றல்கள் இல்லாமை ஒன்று, இந்நூலை ஒருமுறை இருமுறை படிப்பதற்கு அவகாச மில்லாமை ஒன்று, முக்கியமாகத் **தாயுமானவர், பட்டினத் தடிகள், இராமலிங்க சுவாமிகள்** முதலிய பெரியார்களை (b) இழித்துக் கூறியிருக்கும் நூலை வெளியிடுதல் அடாது எனச்சிலர் கூறிய தடையொன்று ஆகிய அறியாமை, சோர்வு, மயக்கங்க ளாகிய அஞ்ஞானப் பகுதிகளால் இதுகாறும் காலந்தாழ்த்து அயர்ந்திருந்தேன். முற்றமுடிந்தநூல் வெளியாவது அடியேனால் தடைப்படுவது நேரிதன்றென எனது நண்பர்கள் அடிக்கடி நினைவுறுத்துவதால் இனியும் தாழ்க்காது எனக்குத் தோன்று வனவற்றை எழுதித்தருகிறேன்.

இந்நூலாசிரியர் பலமொழிகளையும் நுணுகிஆராய்ந்து தமிழ் மொழியே சிறந்ததெனவும், ஒலியிலக்கணத்தின் உண்மையியல் கள் யாவும் தமிழ் மொழியினிடத்தே அமைந்துள்ளனவெனவும், அதனானே அழியாமாட்சிபெற்றதெனவும் தமிழின் சிறப்பையும், தமிழரின் உயர்வு, அவர் நாகரிகத்தின் சிறப்பு முதலியவற்றையும் ஆராய்ச்சியுடன் கேட்டோர் வியக்குமாறு ஊர்தொறும்சென்று பல படியாக நாட்டிவரும் **பெருந்தமிழ்த் தொண்டர்**. அறிவு நூல்களைக் கற்றுத்துறைபோன நிபுணர். எடுத்த கொள்கைகளை எளிதில் **நாட்டவல்ல நாவலர்**. இத்தகைய பெரியார், சங் கத்தின் திருவிழாவில் மெஞ்ஞான விளக்கம் பெறுவதற்கெனக் குழுமியிருந்த தமிழன்பர் பேரவையின் திருமுன்னர், அஞ்ஞா னத்தை உருவகப்படுத்தி நிறுத்தித் தானே முற்பட்டவனென் றும், மேம்பட்டவன் என்றும் தன்னுடைய ஒப்புயர்வற்ற உரிமைகளையும் தன்மைகளையும் சீர்தூக்கிச்சொல்லி மெஞ்ஞானம் பலகாரணங்களால் இழிந்தவன் என்று அவையேறி வழக்குரைக்

கச்செய்தது அனைவர்க்கும் பெருவியப்பை விளைத்தது. பசுக்கள் யாவையும் அநாதியாக ஆணவமலத்தில் கட்டுண்டு கிடத்தலும், அக்கட்டையறுப்பதற்கு இறைவன் பெருங்கருணையால் தநு கரண புவனபோகங்களாகிய அஞ்ஞானப் பொருள்களைப் பசுக் களுக்குத் தந்தருள, அவை அவற்றின் உபகாரத்தால் சிறிது சிறிதாக மெஞ்ஞான விளக்கம் தோன்றப்பெற்று, இந்த நிலையில் அஞ்ஞானமெஞ்ஞானங்களில் மாறிமாறிச்சுழன்று, மெஞ்ஞானம் பெருகப்பெருக இந்திரன், திருமால், பிரமன் முதலானோரின் பதமுத்திகளை அடைந்து முடிவில் வீடுபேற்றை அடைதலும் ஆகிய உண்மைகளை இகழும் முறையில் புகழ்ந்தும் புகழும் முறையில் இகழ்ந்தும் எழுதியிருப்பது யாவரும் பாராட்டத் தக்கதொன்று.

புகழ்வதுபோன்று இகழ்வதும் இகழ்வதுபோன்று புகழ் வதும் புலனெறி வழக்கின்துறைபோய பண்டைப் புலவர்கள் கொண்டமுறை என்பதனைத் தமிழ் இலக்கியங்களைப் பயின்றவர் நன்கறிவர். கொடைமடங்கூறிப் புரவலரைப் பாவலர் புகழ்வது பண்டைப்பெருவழக்கு. அங்ஙனமே வசைச்செய்யுட்களைத் (c) **தொல்காப்பியனார் அங்கதமென** வகுத்துப் போந்ததும் வெளிப்படை. பிற்காலத்தில் **நிந்தாஸ்துதி (வசைப்புகழ்)** எனத் தனிப்பாடல்களும், **ஏசல்கள்** எனப் பெயரிய சில பாச் செய்யுட்களும், **அவிவேக பூரண குருகதை**போன்ற சில உலாச்செய்யுட்களும் தோன்றுவனவாயின. என்றாலும் **பதிபசு பாசங்களாகிய முப்பொருள்**களையும் அவற்றின் தன்மைகளையும் தெள்ளிதின் விளக்குதற்கு ஏற்ற உரைச்செய்யுளில் இம்முறை யினை அமைத்து நூலியற்றும் பெரும்புலவர் (d) இதுகாறும் தமிழுலகில் தலைப்பட்டாரில்லை. இத்தகைய பெருமை இந்நூலை இயற்றித்தந்த **எல்லாம் வல்லசித்தராகிய** எமது நண்பர் திருவாளர். **பா. வே. மாணிக்கம் நாயக்கர்** அவர்களுக்கே உரியதாகும்.

இந்நூலின்முடிவில் ஆசிரியர் அவர்கள் தோற்றுவாய் செய் துள்ள பிற்பகுதியைத் தமிழில் வெளியிடுவார்களென வேண்டு

கிறேன். இந்நூலைத் தமிழன்பர்கள் நுணுகிப்படித்து மெய்ஞ் ஞானப் பயன்பெற்று உய்வார்களாக.

த. வே. உமாமகேசுவரன்.
21—10—22.

1-வது ஆய்வுரைக்கு

அஞ்ஞானக் குறிப்பு:—

1. (a) கரந்தைத் தமிழ்ச்சங்கத்துப் பதிப்பாக வெளி வந்த அஜ்ஞாநத்தின் முதற் பதிப்பிற்கு இதனைப் பதிப்புரையாக வச்சங்கத்தலைவர், திருவாளர், த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் வரைந்தனுப்பினராயினும் இஃது, அச்சுவடி யொடு தோன்றாமல், வேறொன்றாய பதிப்புடன் வந்தது முதற் பதிப்பைக் கண்ணுற்றோர் குறித்திருக்கலாம்.

2. சங்க வெளியீடாகவரும் பதிப்பில் சங்கத்தார் பொதுக் கருத்துக்களைப் புலப்படுத்துதல் பொருந்துமேயன்றித் தலைவர் தம்மொருவர் கருத்தைச் சங்கத்தின் பொறுப்பில் வெளியிடல் பொருந்தாமையின், இது, பதிப்புரையாக வெளிவரல் நிறுத்தப் பெற்று, திருவாளர். த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர் களுடைய ஆய்வுரையாகக் கொள்ளப்பெற்றது.

3. (b) தாயுமானுர் முதலாயினேரை இழித்துக்கூறிய தாகப் பலருக்குத் தோன்றிய மயக்கம் ஏற்புடையதே. அத் தகைய மயக்கமூட்டும் வன்மையிலதேல் இவ் வஜ ஞா ந க் கட்டுரை மந்திரப்பெருமையிற் குன்றும். கூத்த நூல் போலிய இவ்வஜ்ஞாந மந்திரத்தில் மேய்ஜ்ஞாந வடிகளை, இறையாக வும் (பதி), கழகங் குழுமியோரை யுயிர்களாகவும் (பசுக்கள்), பா. வே. மாணிக்க மென்பானைப் பற்றாகவும் (பாசம்), தோற்று வித்துப் பற்றாக (பாசம்) இட்ட கோலத்திற்கேற்ப இறைத் (பதி) தன்மையோரை இழித்துப் பேசிய கூத்தமாட்சியிற் களிக்காது, பா. வே. மாணிக்கமென்பான் தான் தாயுமானுர் முதலா

யோரை இழித்துக் கூறினனெனத் தோன்றிய மயக்கம், ஒரு கூத்தில் ஆண்மகனொருவன் பெண்ணுடை யுடுத்து மாதவி யெனப் பெயர்புனைந்தும் மற்றொருவன் ஆணுடையுடுத்துக் கோவலனெனப் பெயர் பூண்டும் ஒருவரை யொருவர் தழுவ, என்ன! இந்தப் பையனுக்கு இன்னொரு பையன் காதலனா! இவர்களைப் பீனல் கோட் 377-வது செக்ஷன்படி ஏன் சார்ஜ செய்யப்படாது என்று மருளுந் தன்மைத்து. அப் பா. வே. மாணிக்க மென்பானும் யான் (அஞ்ஞாநம்) புகாவிடின் அவ்வஜ்ஞான மந்திரத்தைக் கிளக்கவல்லனோ. அல்லன்! அல்லன்!! அல்லனே யல்லன்!!!

4. (c) ஆய்வுரைகாரர் இவ்வஜ்ஞான விலக்கியம் எவ்விலக்கணத்த தெனவாயும் முயற்சியில், கோடைமடங்கூறல், அங்கதம், வசைப்புகழ், (நிந்தாஸ்துதி), ஏசல், அவிவேக பூரண குருகதைகளோடு ஒப்பிட்டு அவைகளின் மிஞ்சிய தீதென நன்கு மதிக்கின்றனர். ஆயினும், இவ்வைந்த னிலக்கணமும் ஒன்றன்று; இவ் வஜ்ஞாநமந்திர விலக்கணமும் ஒப்பிட்டவைந்தனு ளொன்றன்று.

"அங்கதந் தானே யரிறபத் தெரியிற்
செம்பொருள் கரந்த தெனவிரு வகைத்தே"

எனத் தோல்காப்பியனுர் அங்கதத்தின் வகைகூறும் சூத்திரத்தின்கீழ் உரைகாரர் "கொடைமடங் கூறுதல் வசைபோன்று புகழெனப்படும் அஃது அங்கதமாகா தென்பான் அரிறப வென்று னென்பது. பிறவும் அன்ன" என்று கொடைமடங் கூறல் அங்கத மாகாதெனக் காட்டியுள்ளனர்.

அன்றியும், அங்கதத்தின் இருவகைகளை விளக்குவான்,

"செம்பொருளாயின் வசையெனப் படுமே"

என்றும்,

"மொழிகரந்து சொல்லினது பழிகாப்பாகும்"

என்றும் சொல்லிய சூத்திரங்களான் அங்கதம் செம்பொருளாயின் வசையெனவும், மொழிகரந்த தாயின் பழிகாப்பங்கத மெனவும் கூறலின் இவ்விரண்டும் வசையே கூறுவனவன்றி

இசையை உட்கிடையாக வேனும் கூறுவன வன்றெனல் வெளிப்படை. இவ்வஜ்ஞானத்தில் செம்பொருளாக வசையிருப்பினும் உட்கிடை உண்மைகள் வேறுகலின் அங்கத விலக்கணம் இதற்குப் பொருந்தா.

5 **வசைப்புகழ்** (நிந்தாஸ்துதி) எனிபதும் அஜ்ஞானத்தின் ஒரு சார்பிற்குப் பொருந்துமேயன்றி, **புகழ்வசை** (ஸ்துத்யநிந்தை) வருமிடத்துப் பொருந்தாது.

6. **ஏசல்** என்பது இல்லாதனவற்றை உள்ளனபோலேற்றிப் பொய்ம்மையாக ஏளனம் செய்வது. **மோர்க்குழம்பு லாலி** வருமாறு:—

(1) ஆமைவடை மோர்க்குழம்பு எங்களண்ணி
அமிர்தமாகச் சமைத்து
ஆனமட்டுந் தின்றுவிட்டு எங்களண்ணன்
அங்கராக்கில் துடைக்கும் லாலி லாலேயலாலி.

(2) வெண்டைக்காய் மோர்க்குழம்பு எங்களண்ணி
விதம்விதமாய்ச் சமைத்து
வேணமட்டுந் தின்றுவிட்டு எங்களண்ணன்
வேஷ்டியிலே துடைக்கும் லாலி லாலேயலாலி.

3) கத்திரிக்காய் மோர்க்குழம்பு எங்களண்ணி
கருத்துடனே சமைத்துக்
கண்டமட்டுந் தின்றுவிட்டு எங்களண்ணன்
கமுசிலே துடைக்கும் லாலிலாலேயலாலி.

(4) புடலங்காய் மோர்க்குழம்பு எங்களண்ணி
புதுமையாகச் சமைத்து
புகுந்தமட்டுந் தின்றுவிட்டு எங்களண்ணன்
புஸ்தகத்தில் துடைக்கும் லாலி லாலேயலாலி.

(5) சுண்டைக்காய் மோர்க்குழம்பு எங்களண்ணி
சொகுசாகச் சமைத்து
சுரண்டியெல்லாந் தின்றுவிட்டு எங்களண்ணன்
சோமனிலே துடைக்கும் லாலி லாலேயலாலி.

(6) பூசனிக்காய் மோர்க்குழம்பு எங்களண்ணி
புங்கூழுடன் சமைத்து
போட்டுவிட்டு மெத்த மெத்தப்
பொறுமையுட னிருக்கும் லாலி லாலேயலாலி,

இத்தகைய பொய்ப்பாராட்டல் இவ்வஜ்ஞாநத்தில் இலது. உண்மைவிற்சியே முற்றிலும் விரவியுள்ளது.

7. பேதைமை முதிர்ச்சியையே குருவாகவும், பேதைமையின் பகுதிகளான மடமை முதலிய தன்மைகளேயே மாணவர்களாகவும் உருவகப்படுத்தி யெழுதிய அவிவேக பூரண குருகதை ஒருவாறு இவ்வஜ்ஞாநத்தோடு ஒக்குமெனினும் அது கூத்தநூல் முறையிலு மிலது; இயற்கையுண்மைகளே (தத்துவங்களே) விளக்கலுமிலது; ஆங்கிலக்கட்டுக் கதைகளே (Novels)ப் பின்பற்றி வரையலானது; இவ்வஜ்ஞாநமோ அவ்வாறின்று.

8. (d) ''பதிபசுபாசங்களாகிய முப்பொருள்களேயும் அவற்றின் தன்மைகளேயும் தெள்ளிதின் விளக்குதற்கு ஏற்ற உரைச்செய்யுளில் இம்முறையினே அமைத்து நூலியற்றும் பெரும்புலவர் இதுகாறும் தமிழுலகில் தலைப்பட்டாரில்லை'' என ஆய்வுரைகாரர் கூறுவது முற்றிலும் உண்மையாகாது. உரைநடையில் நூல் இலவேனும் பாவினத்தில் நூல்கள் பல உள்ளன. ஆகலின், இவ்வஜ்ஞாநத்திற்குத் தனிப் பெருமை உரிபதன்று. பிரபுலிங்க லீலையென்னும் நூல் இயற்கை யுண்மைகளேயே (தத்துவங்களே) உருவகப்படுத்திக் கதையாக்கலாயதொன்று ஆனல், அதில் வசவண்ணர், சித்தராமர், கோரக்கர் முதலிய உண்மையிலிருந்த மாந்தர் உருவகமாந்தர்களோடு வினையியற்றியதாகிய பொய்புனைந் துரைத்தலின் வரலாறு விரவிய கட்டுரைக் கதையாயது (Historical Novel). அன்றி. மமகாரம் அல்லாமை, மாயை, விமலம் முதலிய இயற்கைக் கோட்பாடுகளே (தத்துவங்களே) உண்மையில் உருவெடுத்திவ்வுலகில்வந்து விளையாடி மறைந்ததாக நம்பியுள்ளோரும் உளர். அஃதுண்மையெனக் கொளின் இந்நூல் வரலாறு கூறிய தொன்றாகும். அஜ்ஞாநத்தோடு பொருந்தாது.

9. அடிகள் **வேங்கடாசல சுவாமிகள்** அருளிச்செய்த **ஆறுதார விலாசமென்னும்** கூத்துநூல் இயற்கை யுண்மைக ளாக ஒரு சாரார் கொண்டவைகளையே (தத்துவங்களை) கூத்தர் களாக முற்றிலும் உருவகமாக்கிய தொன்று. கட்டுக்கதை யொன்றுங் கலவா வியல்பினது. ஆயினும், ஆங்காங்கு இயற்கை யுண்மைகளினின்றும் வழுக்கிச்செல்வது. அதனால், பிந்திரவன் மையின்றி மறைந்துறையும் ஓர் நூலாக இருக்கின்றது.

10. அவித்தியா புரத்தில் **மாநதராஜன், புத்தி, ஆங் காரம், சித்தம்,** என்னும் மூவர் மந்திரிகளுடன் அரசாண்டு, **பிரவிர்த்தி, நிவிர்த்தியென்னும்** இரண்டு மனைவிகளை மணந்து அவ்விருவர்களும் ஒன்றிவாழ, அவர்களுக்கு முறையே **மோசன் விவேகன்** என்னும் இரண்டு குழவிகள் பிறந்து ஓரிடத்தில் ஒரு காலத்தில் வளர்ந்து, கல்வி பயின்ற பின்னர், **மாநதன்** தன் தந்தையைச் சிறையிலிட்டனனென்றது தெரிந்த, **விவேகன்** குற்றங்கூற, **மாநதன்** சினந்து **விவேகனையும்** அவன்தாய் **நிவிர்த்தியையும்** காட்டகத்திற்குத் துரத்திவிட, **விவேகன், நல்வினை, தீவினை,** என்னும் இரண்டு சீடர்களுக்கும் உபதேசம் செய்ய அவர்கள் வாசியோகம் பயின்று சிவசூட்சமம் கண்டார்க ளென்றும், இறுதியாக **விவேகயோகி** ஆறுவரையேறி மூலக் கணபதி முதல், பிரமன், மால், உருத்திரன், மகேசுரன், சதா சிவன் ஆகிய அறுவர் தரிசனம் செய்து அதன்மேல் பராசத்தி தரிசனமும் செய்து அமர்ந்தன னென்றும் கூத்தை முடிக் கின்றனர்.

11. இவர் கூத்தில், **பிரவிர்த்தியும் நிவிர்த்தியும்** ஒன்றி வாழுகிறார்கள். சக்களத்திச் சண்டைகூடப் போடுவதில்லை. **பிர விர்த்தி** யணிந்திருப்பது போலவே **நிவிர்த்தியும்** விலை மதிக்க வொண்ணு மணியணிகள் அணிந்திருக்கின்றாள். பிள்ளைபெற **நிவிர்த்தி** முக்குகிற முக்கிற்குச் சரியாகத் தான் **பிரவிர்த்தியும்** முக்குகிறாள்; **விவேகனோடு மோசன்** இவர் கூத்தில் சண்டை சச்சரவுசெய்வதில்லை; **விவேகனும் மோகனைப்போலவே,** க்ரத்ன கிரீடங்களும், புயகரிருதிகளும், வாகு வலயங்களும், மற்றநவரத்

தினஆபரணங்களும் தன்னுச் சபைக்கு வருகிறுன். காட்டிற்குப் போவென்றுல் நிவிர்த்தி ஐயையோ வென்றேலமிட்டு ஒப்பாரி பிடிக்கின்றுள். நல்வினை, தீவினையாகிய இரண்டுசீடர்களும் ஒரு மாதிரி உபதேசம் பெற்று ஒரு மாதிரியே சித்தி யடைகிறுர்கள்; வியேகயோகி ஆறுதார வரைகள் ஏறி,

மூலமா மாறு தார முச்சுட ரதனைக் கண்டேன்
ஞாலமாம் வீணை தண்டில் நான்முக னருளைக் கண்டேன்
கோலமாங் கண்டந் தன்னில் குருமகேச் சுரனைக் கண்டேன்
மேலுமாக் கினையி னின்று மெய்மக மேருக் கண்டேன்
நாலுமார் கலையுங் கண்டு நண்ணறி வதனைக் கொண்டேன்
பாலுமோர் வெண்ணெய் நெய்போல் பரிசினஞ் சதா சிவத்தில்
நாலுமாய் வெளியுங் கண்டு நானதி சயித்திட் டேனே.

என்கிறதோடு நில்லாமல் பரவெளி கண்டமோன நிலையினர் பராசத்தியுடன் தொன தொனவென்று ஓயாமல்பேசியதோடும் நில்லாமல், தான் நிவிர்த்தியின் மகன் விவேகன் என்பதையும் மறந்து, பிரவிர்த்தியின் வம்சப் பிரபலர்களான

"பிரமக்ஷத்திரிய வைசிய பிரசைகள் சபையோர் வாழி
தரும சூத்திரரும் வாழி சமயத்தோர் யாரும் வாழி
வர்மத்தை நீக்குந் தெய்வ வானில்வாழ் தேவர் வாழி."

என்று வாழ்த்துங் கூறிடச் செய்து ஆசிரியர் வேங்கடாசல சுவாமிகள் மங்களஞ் சொல்லி முடிக்கின்றனர்.

12. இவ் வாழ்த்திற்கு வேறுக,

வருவ வெல்லாம் வந்தபடி வாழி
போவ வெல்லாம் போனபடி வாழி
உள்ள வெல்லாம் உள்ளபடி வாழி
இல்ல வெல்லாம் இல்லபடி வாழி
நல்ல வெல்லாம் நல்லபடி வாழி
தீய வெல்லாம் தீயபடி வாழி
வல்ல வெல்லாம் வல்லபடி வாழி
அல்ல வெல்லாம் அல்லபடி வாழி

என்று பாடி யிருப்பரேல் இயற்கை யுண்மைகளோடு பொருந்தியேனு மிருக்கும்.

பொருந்தாக் கூத்துப் போகத் தரும் வழியில் இவ்வாறு தார விலாசம் போயது எதிர் நோக்ககில்ல தொன்றன்றே!!!

பிரபோத சந்த்ரோதய மென்னும் நூலிலும் இத்தகைய வுருவகம் பரக்கக்காணலாம்.

13. இந்த நூல்களை யன்றியும்,

"முள்ளின் நுனியிலே மூன்று குளம் வெட்டி வைத்தேன்
இரண்டு குளம் பாழு வொன்றில் தண்ணீரே யில்லை"

என்பது போன்றும்,

14. " தானு தானு தெந்த னுனு
தெனதெந்தினு தெந்தினு தெந்தி னுனு "
பாபஞ் செய்யாதிரு மனதே—நாளைக்
கோபஞ் செய்தே யமன் கொண்டோடிப் போவான்
பாபஞ் செய்யாதிரு மனதே...

கும்ப கோணத்திலோ ராண்டி—அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டுவந்தா னொரு தோண்டி—அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட் டுடைத் தாண்டி
தானு தானு...

மெய்ஞானப் பாதையி லேறு—சுத்த
வேதாந்த வெட்ட வெளியினைத் தேறு
அஞ்ஞான மார்க்கத்தைத் தூறு—உன்னை
அண்டினோர்க் கானந்தமாம் வழிகூறு தானு தானு...

ஐந்துபேர் சூழ்ந்திடுங்காடு—இந்த
ஐவர்க்கு மைவ ரடைந்திடும் நாடு
முந்தி வருந்தி நீதேடு—அந்த
மூலமறிந்திடிலாமுத்தி வீடு. தானு தானு....

உள்ளாக நால்வகைக் கோட்டை—பகை
ஓடப் பிடித்திட்டா லாளலாம் நாட்டை
கள்ளப் புலனெனுங் காட்டை—வெட்டிக்
கனலிட் டெரித்திட்டாற் காணலாம் வீட்டை
தாண தாண....

என்பனபோன்றும்,

15. "மூலப் பதியடியோ மூவிரண்டு வீடதிலே
கோலப் பதியடியோ குதர்க்கத் தெரு நடுவே
சாலப் பதிதனிலே தழலாய் வளர்ந்த கம்பம்
உந்தன் மேலைப் பதிதனிலே—என் கண்ணம்மா
விளையாட்டைப் பாரேனே!!! ஓஓஓஙா ஓஓஓஙுஓ

முத்துமுகப் படியோ முச்சந்தி வீதியிலே
பத்துவிதம் பரப்பிப் பஞ்சணையின்மே லிருந்து
அத்தை யடக்கிநிலை யாருமில்லா வேளையிலே
குத்துவிளக் கேற்றி—என் கண்ணம்மா
கோலமிட்டுப் பாரேனே !!! ஓஓஓஙாஓஓஓஙுஓ

பையூரிலே யிருந்து பாம்பூரிலே பிறந்து
மெய்யூரிற் போவதற்கு வேதாந்த வீடறியேன்
மெய்யூரிற் போவதற்கு வேதாந்த வீடறிந்தால்
பையூரும் மெய்யூரும்—என் கண்ணம்மா
பாழாய் முடியாதோ!!! ஓஓஓஙா ஓஓஓஙுஓ

கற்றூரு முற்றூருந் தொண்ணூற்றி யாறதிலே
உற்றூரும் பெற்றூரும் ஒன்றென்றே யானிருந்தேன்
உற்றூரும் பெற்றூரும் ஊரைவிட்டுப் போகையிலே
கற்றூரு மில்லாமல்—என் கண்ணம்மா
துணையிழந்து நின்றதென்னே!!! ஓஓஓஙா ஓஓஓஙுஓ

ஆகாப் புலையனடி யஞ்சனங்கள்தான் பேசி
சாகத் தலையறியேன் தன்னறிவு தானறியேன்
வேகாத காலறியேன் விதிமோச மானேனடி

நோகாமல் நொந்தல்லோ—என் கண்ணம்மா
நொடியில் மெழுகானனடி” °°°ணா °°°ஞு°”

என்பன போன்றும்,

16. “ஐந்துதலை நாகமடி—அகப்பேய்
ஆதாயங் கொஞ்சமடி
இந்த விஷந்தீர்க்கும்—அகப்பேய்
எம்மிறையைக் கண்டாலே

தூராதி தூரமடி—அகப்பேய்
தூரமு மில்லையடி
பாராமற் பாரடியோ—அகப்பேய்
பாழ்வினை தீரவென்றால்”

என்பன போன்றும்,

17. “காசினி யெலாங் கடந்து காலோய்ந்து போகாமல்
வாசிதனிலேறி வருவதினி யெக்காலம்—
°°°ணா °°°ஞு°

முப்பாழும் பாழாய் முதற்பாழுஞ் சூனியமாய்
அப்பாலும் பாழா யன்புசெய்வ தெக்காலம்—
°°°ணா °°°ஞு°
சாகாமற் செத்திருந்து சற்குருவின் பொன்னடிக்கீழ்
வேகாமல் வெந்திருக்க வேண்டுவது மெக்காலம்—
°°°ணா °°°ஞு°”

என்பன போன்றும்,

18 “ஆடுபாம்பே தெளிந்தாடு பாம்பே
அந்தரங்கங் கண்டுதெளிந் தாடு பாம்பே
ஊத்தைக்குழியிலே மண்ணை யெடுத்து
உதிரப்புனலிலே யுண்டை சேர்த்தே
வாய்த்த குயவனார் பண்ணும் பாண்டம்
வரகோட்டிற்கு மாகாதென் றாடாய்பாம்பே!
இருவர்மண் சேர்த்திட ஒருவர் பண்ண
ஈரைந்துமாதமாய் வைத்த சூளை

அருமையாயிருப்பினும் மந்தச் சூளை
அரைக்காசுக் காகாதென் ருடாய்பாம்பே!

பரியாசம் போலவே கடித்த பாம்பு
பலபேரறியவே மெத்த வீங்கி
பரியாரி யொருமாது பார்த்தபோது
பையோடே கழன்றதென் ருடாய்பாம்பே!

என்பன போன்றும்;

19. "தாந்திமித்திமித் தந்தக் கோனாரே
திந்திமித்திமித் திந்தக் கோனாரே
ஆனந்தக் கோனாரே—அருள்
ஆனந்தக் கோனாரே

அந்தக்கரண மெனச் சொல்நான் காட்டையும்
அஞ்ஞான மென்னு மடர்ந்தவன் காட்டையும்
சந்தத் தவமென்னும் வாளினால் வெட்டினேன்
சாகாதிருந்திடக் கோட்டையும் கட்டினேன்–(தாந்தி)
மெய்வாய் கண்மூக்குச் செவியெனு மைந்தாட்டையும்
வீறுஞ்சுவை யொளியூ றோசையாங் காட்டையும்
எய்யாம லோட்டினேன் வாட்டினேன் நாட்டினேன்
ஏக வெளிக்குள்ளே யோக வெளிக்குள்ளே—(தாந்தி)

(வேறு)

இருவினையா மாடுகளை யேகவிடுகோனே—உன்
இடக்கு மனமாடொன்றை யடக்கிவிடுகோனே,
அகங்கார மாடுகள் மூன்றகற்றிவிடு கோனே
அவத்தை யெனுமாடைந்தை யடக்கிவிடுகோனே,
ஒருமலத்த னெனுமாட்டை யொதுக்கிக்கட்டு கோனே,
உறையு மிருமலத்தனையு மோட்டிவிடு கோனே
மும்மலத்த னெனுமாட்டை முறுக்கிக்கட்டு கோனே—
முக்கால நேர்மையெல்லாம் முன்பறிவாய் கோனே,
உபாதியெனு மூன்றாட்டை யோட்டிவிடுகோனே-உனக்
குள்ளிருக்குங் கள்ளமெல்லா மோடிப்போங் கோனே,

முக்காய மாடுகளை முன்னங்கட்டு கோனே.
மோசமில்லை நாசமில்லை முத்தியுண்டாங் கோனே,"

என்பன போன்றும்:

இயற்கை யுண்மைகளை (தத்துவங்களை) உருவகப்படுத்தி ஆக்கப்பட்டன, வேறு பல நூற்றுக்கணக்கான பாட்டுகளும் நூல்களும் வழக்கிலிருக்கின்றன.

20. ஆங்கிலத்தில் இத்தகைய நூல்கள் பல விலவேனும் மில்டன் புலவருடைய லலீக்கரோ (L'alegro) இல்பென்சரோசோ (Ilpenseroso) என்னும் செய்யுட்கள் ஒருவகையாக இத்தகையன.

(தொடரும்)

உ

இயல்நூற் குறிப்பு.

திருவையாறு, வடமொழிக்கல்லூரித் தமிழாசிரியர், திருவாளர்
இ. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள்.

நீர்புடைசூழு மிந்நிலவுலகின்கண், எவ்வகைப் பிறவியினும் மிகச் செவ்விதாய்த் தக்க வின்ன தகாதன வின்னவென் றெக்கவுன்னும் மயர்வறு முயர்வுறு மக்கட் பிறவி யெய்தினாரனைவரும், எல்லாம்வல்ல விறைவன் றன்னருட் பெருக்கத்தா லுலகின் பொருட்டுப் பண்டே கண்ட முதனூல் நுவலும் அறமுதனாற் பொருளை முடிவுறவாய்ந்து செய்வதுந் தவிர்வதும் பெறுவதும் உறுவதும் உய்வதும் அறிந்துறுதி யெய்துங் கடப்பாடுடையவர்களேயாவர்.

ஒருவன், ஒருபொருளை யாக்கற்கு முதற்கருவி முதலியன வேண்டுமாறுபோல அன்னார் அவ்வறமுதனாற் பொருளையாய்

தற்குக்கருவியும் வேண்டுமாலோவெனின், வேண்டும். அவையே "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங், கண்ணென்ப வாழு முயிர்க்கு" எ-ம், எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும் எ-ம், எண்ணெழுத்திகழேல் எ-ம் திருவள்ளுவனாரும் ஔவையாரும் இருகண்களெனவும் இகழாது புகழ்ந்து கற்க வேண்டுமெனவு முயர்த்துக்கூறிய தருக்கநூலும் இயனூலுமாகிய இவ்விரண்டுமேயாம். எண்ணென்பதற்குக் கணிதநூலுமாம். அவ்விரண்டனுள் பின்னையதாகிய இயனூலே ஈண்டுக் குறிக்கப் படுவதாகும்.

"எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்து, மெழுத்தறிவார்க் காணி விலையாம்" எனச் சிவப்பிரகாசனார் சிறப்பித்துக்கூறுமாற்றானும், "எழுத்தறியத்தீரு மிழிதகைமை தீர்ந்தான், மொழித் திறத்தின் முட்டறுப்பானாகு—மொழித்திறத்தின், முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து கட்டறுத்து வீடுபெறும் எனப் பயன் கூறுமாற்றானும் இயனூற் சிறப்பு, இத்துணைத் தென்பது கூறலமையுமோ! எழுத்தெனவே யதனோடொற்றுமையுடைய மொழியும் அம்மொழியாற் குறித்துணரப்படும் பொருளும் யாப்பும் அணியும் அடங்கிற்றென்க.

இயல் நூலென்றது எவ்வாற்றானுமிணையற்ற நந்தனித்தமிழ் மொழியின்கண் வழங்குமிலக்கண நூலையே, ஈண்டுக்கொள்க. வடவேங்கடந் தென்குமரியாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து வரைத்தாழருவிப்பொருப்பிற் றென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற் றென்முதுகடவுளராகிய அகத்தியனார் முதன் முதல் இயல் இசை நாடகம் என்னு முத்தமிழ்க் கடலையுமொருங்கே வகுத்துத் தம்பெயரான் அகத்தியமெனப் பெயர்நிறீஇத் தொல்காப்பியனார் முதலிய தம்மாணாக்கர் பன்னிருவருக்குந் தமிழறிவுறுத்தினர். அம்முத்தமிழுள் பின்னையவிரண்டும் முதனூற் பொருளைக்காண்டற்கேற்ற கருவியன்மையி னவற்றை விடுத்துத் தொல்காப்பியனார் முதலிய பேரறிஞர் இயற்றமிழொன்றையே கருவியெனக் கூறினர்போலும்.

ஆகவே, இயனூலுண் முதனூலாய்நிற்பது அகத்தியமும் அதன் வழிநூலாய்நிற்பன தொல்காப்பியம், காக்கைபாடினியம், அவிநயம், நற்றத்தம், வாமனம், புறப்பொருட் பன்னிருபடலம் ஆதியவும் பிறவுமாம். முதனூலாகிய அகத்தியம் முதற்சங்கத்தினும் இரண்டாஞ்சங்கத்தினும் நின்று நிலவியுலாவிய தெனவும் முதற்சங்கத்திலரங்கேறிய வழிநூலாகிய தொல்காப்பியம் இரண்டாஞ்சங்கத்தினும் மூன்றுஞ்சங்கத்தினும்நின்று நிலவி யின்றும் உலவிவருகின்றதெனவும் தமிழறிஞர் கூறுவர். இதுகாலை யுரையாசிரியர்களால், எடுத்தாண்டுக் குறிப்பிடப் பட்டனவாயுள்ள அகத்திய முதலிய நூல்களிற் சிற்சில சூத்திரங்களை, நாம், காண்கின்றோமன்றி யந்நூல் முழுதுங் கண்டோமில்லையே.

ஆதலால், கடலாலும் பகையரயர்களாலும் போற்றுமை யாலும் பெயர்மாத்திர நின்று இறந்துபட்ட நூல்களினின்று மெஞ்சிய வியனூல்கள் இவை யென்பதும், ஐம்பெரும் பகுதிகளை முற்றத்தெரிக்கு நூல்களிவை யென்பதும் சில பகுதிகளை முற்றத் தெரிப்பனவும், ஒவ்வொரு பகுதியை மட்டுந் தெரிப்பனவும் இவையென்பதும், அவைகளியற்றினரு மியற்றுவித்தாருமுறை கண்டாருமாவாரிவரென்பதும், அவைகளிற் காணப்படும் வேறுபாடுகளிவை யென்பதும், அவ் வேறுபாடுகடானு மெப்பொருட்டாலாயின வென்பதும் இயனூற் பயிற்சி முற்றிய தமிழறிஞர்கள் ஆய்ந்தறிந்து வெளியீடு செய்வார்களாயி னுலகிற் குறுபயன் விளைக்கு மென்பதொருதலையே.

அஃதற்றாக, இயனூற்பயிற்சி முற்றுச் சிற்றறிவுடையேன் இயனூற் குறிப்பென்னுந் தலைப்பெயரிட்டு வரைந்து வருகின்ற கட்டுரைக்குத் தமிழுணரும் பெரியார் அருட்பெருக்கஞ் செய்து பொறை செய்வாராக.

இயல் நூல்.

இயல் நூலாவது, "வழக்கெனப்படுவதுயர்ந்தோர்மேற்றே நிகழ்ச்சியவர்கட்டாகலான" என் மரபியற் சூத்திரத்தான் குறிப்பிக்கப்படும் உயர்ந்தோர் வழக்கத்தினையும் உய்வகை யுணர்த்

துஞ் செய்யுள் வழக்கத்தினையும் இஃதிப் பெற்றியது, இஃதிந் நெறியது, இஃதிவ்வரையறையுடைய தெனவுள்ளவாறுதெரிந்து கோடற் கருவியாம். (வழக்கு, மொழி, பாடை, பேச்சு என்பன ஒரு பொருள.)

அங்ஙனந் தெரிக்கின்றுழி, பொருள் புலப்படு மொழிகள் கொண்டே தெரித்தல் வேண்டும். அம்மொழிகள் ஓரெழுத்தாலாயினும், ஈரெழுத்தாலாயினும் இரண்டு முதலிய பல வெழுத்துக்களாலாயினும் ஆக்கப்பட்டு, பெயர்வினை இடை உரிச்சொற் பொருளைத் தழுவிக்கொண்டு, தனிமொழியுந் தொடர்மொழியும் பிரிக்கப்படுமொழியும் பிரிக்கப்படாமொழியுமென விருதிறத்தவாய் நிற்கும். ஆகவே, எழுத்துக்களும், அவைகளாலாக்கப்படும் மொழிகளும், அம்மொழிகளாலுணர்த்தப்படும் பொருள்களும் ஆயவற்றை முறை தெரிப்பதே இயனூலாம். பொருட் பகுதியினுள் யாப்பு, அணியெனுமிருபகுதிகளுமடங்கு மாற்றைப் பின்னர்ப்புலப்படுத்துவாம்.

அங்ஙனம், அவைகளை முற்றத் தெரிப்பனவும் தனித்தனி தெரிப்பனவுமாகிய இயனூல்கள் யாவையோ வெனின், அவையே மிகப்பழமையவாகிய தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கணவிளக்கம், முத்துவீரியம், தொன்னூல் விளக்கம், நன்னூல், நேமிநாதம், மொழிநூல் இறையனாரகப் பொருள், நம்பியகப் பொருள், மாறனகப் பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கல விருத்தி, யாப்பருங் கலக் காரிகை, தண்டியலங்காரம், மாறனலங்காரம், குவலயாநந்தம், சந்திராலோகம், சிதம்பரப்பாட்டியல், வெண்பாப்பாட்டியல், பன்னிரு பாட்டியல், இலக்கணக் கொத்து, பிரயோகவிவேகம், தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, தொல்காப்பியப் பாயிர விருத்தி (சண்முக விருத்தி) யென்றித் தொடக்கத்தனவாம்.

பெயருஞ் சில சூத்திரங்களு நிற்க விறந்துபட்டன அகத்தியம், அவிநயம், காக்கைபாடினியம், பல்காப்பியம், பன்னிருபடலம், ஐந்திரம், பூதபுராணம், மாபுராணம் அணியியல் முதலிய.

இனி நந்தனித்தமிழ் மொழியின்கண் வழங்கு மிகப்பழமைய தான தொல்காப்பியம் முதல் வழி சார்பெனு மூத்திற நூலு ளெத்திற நூலோ வெனிற் கூறுதும். ஆசிரியர் தொல்காப்பிய னார், மரபியலின்கண் "மரபுநிலைதிரியா மாட்சியவாகி, யுரை படு நூறா மிருவகை யியல, முதலும் வழியுமென நுதலிய நெறி யின்" எ-ம் 'வினையினீங்கி விளங்கியவறிவின், முனைவன்கண்டது முதனூலாகும்' எ-ம், "வழியெனப்படுவததன்வழித்தாகும்" எ-ம் சூத்திரமியாத்து முதனூலுக்கும் வழிநூலுக்கு மியல் வகுத்தன ராகலின், அவர்காலத்தே வழங்கப்பட்டு வந்துள நூல்கள் முத னூலும் வழிநூலுமென விருதிறத்தனவன்றிப் பிறவிலவென்பது போதரும்.

அங்ஙனமாயின், பிற்காலத்தியனூற்புலவர் முதல்வழி சார் பெனு முத்திறத்திற்கு முறை தெரிக்கின்றனரேயெனின், முத னூலில், வழிநூல் சார்புநூல்கட்கும், வழிநூலில் சார்புநூலுக் கும் இலக்கணம் பெறுமையால், சார்புநூலில், "இருவர் நூற்கு மொரு சிறைத் தொடங்கித், திரிபு வேறுடையது புடைநூலா கும்" எனச் சார்பிலக்கணமுங் கூட்டி விளக்கினரென்க.

இங்ஙனமாக நூலிலக்கணம் பெறப்படுமாயின், வார்கடற் பெய்த வயிற்றினோனாகிய வான்றவமுனிவரன் வகுத்த முத் தமிழே முதனூலும் அன்னோன் மாணாக்கர் வகுத்தனவே வழி நூலும் அன்னோர் நூல்கொடு பின்னோர் முறை தெரித்தனவே சார்புநூலுமாகக் கோடலே யேற்புடைத்தாம்.

அகத்தியத்தின் வழிநூலாயும், நன்னூல், இலக்கணவிளக்க முதலிய நூல்கட்கு முதனூலாயும் விளங்குந்தொல்காப்பியமெனு மிப்பேரியனூல் கண்டார்:—

"வீங்குகடலுடுத்த வியன்கண் ஞாலத்துத் தாங்கா நல்லி சைத் தமிழ்க்கு விளக்காகென, வானோரேத்தும் வாய்மொழிப் பல்புகழ், ஆணைப் பெருமை யகத்திய னென்னும், அருந்தவமுனி வன் ஆக்கிய முதனூல், பொருந்தக் கற்றுப் புரைதபவுணர்ந் தோர், நல்லிசை நிறுத்த தொல்காப்பியன்" எனவும், "மன்னிய

சிறப்பின் வானோர் வேண்டத்-தென்மலையிருந்த சீர்சான் முனி
வரன்-றன்பாற்றண்டமிழ் தாவின் றுணர்ந்த-துன்னருஞ் சீர்த்தித்
தொல்காப்பியன்", எனவும் "பூமலிநாவன் மாமலைச் சென்னி-
யீண்டிய விமையோர் வேண்டலிற் போந்து-குடங்கையின் விந்த
நெடுங்கிரி மிகைதீர்த்து—அலைகடலடக்கி மலயத்திருந்த-இருந்த
வன்றன்பா லியற்றமி ழுணர்ந்த-புலவர் பன்னிருவருட்டலைவனா
கிய தொல்காப்பியன்" எனவும் "மதிவெயில் விரிக்குங் கதிரெ
திர் வழங்காது, உயர்வரை புடவியி னயர்வுற வடக்கித்-தென்புவி
வடபுவி யின்சமமாக்கிக், குடங்கையினெடுங்கட லடங்கலும்
வாங்கி, யாசமித்துயர் பொதி நேசமுற்றிருந்த-மகத்துவமுடைய
வகத்திய மாமுனி தன்பாலருந்தமி ழின்பாலுணர்ந்த-வாறிரு
புலவரின் வீறுறு தலைமை-பொல்காப் பெருந்தவர் தொல்காப்
பியமுனி" எனவும், "வடவேங்கடந் தென்குமரி-யாயிடைத்
தமிழ் கூறுநல்லுலகத்து-வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச்-செந்தமிழியற்கைச் சிவ
ணிய நிலத்தொடு-முந்துநூல்கண்டு முறைப்பட வெண்ணிப்-புலந்
தொகுத்தோனே போக்கறு பனுவல்-நிலந்தருதிருவிற் பாண்
டிய னவையத்-தறங்கரை நாவி னான்மறைமுற்றிய-அதங்கோட்
டாசாற் கரிறபத் தெரித்து-மயங்கா மரபின் எழுத்துமுறை
காட்டி-மல்குநீர் வரைப்பினைந்திர நிறைந்த, தொல்காப்பியன்'
எனவுஞ் சிறப்பித்துக் கூறப்படும் புனிபுங்கவரேயாவர். இப்
பெரியார் சமதக்கினி முனிவர் புத்திரரும் திரண தூமாக்கினி
யெனும் பெயருடையரும் ஆவர் என்பது நச்சினார்க்கினியருரை
யானறியக்கிடக்கின்றது. தன்னாசிரியரொடு மாறுகொண்டு நூல்
செய்தாரெனுங்கதை, யதங்கோட்டாசாற்கரிறபத் தெரித்து
என்றதனாலறியக்கிடக்கும் என்றவ்வுரையாசிரியர் பொருத்திக்
காட்டுவது புனைந்துரையாமோ யுண்மையுரையாமோ தெரிந்
திலது.

இப்புலவர் பெருமானை, காழிக்கடுத்த காப்பியக்குடியெனு
மூரிற் பிறந்தவரெனவும், காவ்யம் என்பதன் மரூஉ காப்பிய
மென்று கொண்டு பழமையான கவிகுலத்திற் றோன்றினவரென
வும் கூறுவர். கவி என்பது சுக்கிரன் என்னும் அசுரகுருவாம்.

அவன் குலத்திற்றோன்றினவரியாவரும் காவ்யரேயாயினும் பல் புகழ்நிறுத்தபடிமையோனாகலினிப்பெருமாற்கேயப்பெயர்வாய்ந் தது எனவும் பகர்வர். இம்முனிவார், பன்னிருபடலத்தொரு பகுதியும், இப் பேரிலக்கணமும் செய்தவராவர்.

தொல்காப்பியம் இது கருத்தனால் வந்த பெயர்: தொல் காப்பியனாற் செய்யப்பட்டதாகலின். அகத்தியம் காக்கைபாடி னியம், நற்றத்தம், வாமனம் என்பனவுமன்ன. இந்நூல் எழுத் ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்று பெரும் பகுதிகளையும் நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புண ரியல், தொகை மரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கி யல், குற்றியலுகரப்புணரியல்; கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடை யியல், உரியியல், எச்சவியல்; அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், மெய்ப்பாட்டியல், பொருளியல், உவமவியல் செய்யுளியல், மரபியல் என்னுமிருபத்தேழு சிறுபகுதிகளையும் பாயிரமுட்பட 1613 சூத்திரங்களையுமுடையது. 1612 என்றும் 1610 என்றுங் கூறுவர். ஒவ்வொரு பெரும் பகுதிக்கு முறையே ஒன்பதொன்பது இயல்களாகக் கொள்க.

(தொடரும்)

உ

செந்திலாண்டவன் றிருவருள் சிறக்க.

குமரகுருபரவடிகளும், அவர் நூல்களும்.

திருவையாறு, வடமொழிக்கல்லூரித் தமிழாசிரியர்,
திருவாளர் இ. கோவிந்தசாமிப்பிள்ளையவர்கள்.

நீராடைதரித்த நிலமகள்பால் பல்வகைச் செல்வத்தாலும், சீர்திருத்தமுற்ற மொழிகளாலும் பொலிவுறு நாடுகள் பலவே. அப்பலவற்றுள்ளும், குணகுடகடல் குமரிவேங்கடமெனு நான் கெல்லைக்கண்ணதாகிய தனித்தமிழ்நாடு மிகச்சிறப்புந்தலைமையும்

வாய்ந்ததென்பது நுண்மாண் நுழைபுலமிக்க பெரியானைவர்க்கு மொப்ப முடிந்ததே. அத்தனித்தமிழ் நாட்டகத்து நாஞ்செய் தவப்பயனாகத் தோன்றிய புலவர் பெருமக்களும் பலரே. அப் பெரும் புலவர்களே நாற்பொருட்டிறத்தை நலம்பட விரித்து நூலு முரையுங்கண்டனர். அன்னார் சரிதமும் புலமையும் தமிழ்ப் பெருமக்களுணர்வது மொரு கடப்பாடாகும். என்னையெனின், ஒவ்வொராசிரியர் ஒவ்வொரு கோட்பாடுபற்றி நூலுமுரையுஞ் செய்துளார்களாகலின். இன்றேல் நூலாசிரியன் கருத்தொன்று மாராய்வான் கருத்தொன்றுமாக முடிவெய்துமென்பது மொரு தலையே.

நிற்க, அப்பெரியார்களுடைய சரிதக்குறிப்புக்கடானும் இக் காலத்தில் நமக்கு அவ்வவர் செய்த நூல்களானும், தனிப்பாடல் களானும், கன்ன பரம்பரையானும், காலம், இடம் முதலிய விளக்கமின்றிப் புலப்படுகின்றன. காலத்தால் முற்பட்ட பெரி யார் வரலாறுகளைப் பிற்காலத்தார் புனைந்துரை வகையானும் பிறவகையானும் பெரிதும் முரண்பாடுறக் கோவைசெய்துளார் கள். அவைகள் ஐயப்பாட்டிற் கிடந்தாநிற்குமென்பதீண்டுமிகை யாம். தாம்பெற்றபேற்றை யிவ்வையகந்துய்க்கச்செய்த வப்பெரி யர்தாமும், சிலநாட்டுப்புலவர் தங்கடங்கள் வரலாறுகளைக்குறித் துப் பொறித்திருப்பதைப் போன்று கால முதலியவற்றைக் குறித்துவைபாமையு மொருபெருங்குறையே. அக்குறைக்கொரு சாரார் அப்புலவர்கள் நோக்கம் வேறென்றும் அச்சரித முதலிய வற்றால், நாமெய்தும் பயன் சிறிதன்றிப் பெரிதன்றென்றும் வாய்க்கு வந்தவா பகராநிற்பர். அன்னார் கூற்றெல்லா மொருபுற நிற்க, புலமிக்கவரைப் புலமை தெரிதல் புலமிக்கவர்க்கே புலனு மன்றி, யப்புலமைவாயா எம்மனோர்க்கியலா தெனவுணர்ந்தும், பெரும்புலமை நிறைந்த விப்பெரியார் சரிதமு நூலுங்காண முயலுமெற்குத் தமிழ்ப்பெருமக்களாயினோர்ப் பெருங்கருணைத் திற முன்னிற்பதாக.

குமர குருபர வடிகள்.

இப்பெரியார் பிறைநறையிதழியைப் பீடுறவணீஇய பெம் மான் அடியவருப்பானறுபாணன் காடல்புரிந்த புத்தமுதேய்க்கு

முத்தமிழோங்குஞ் சீலர்மேவு மால வாயதனைத் தன்னகத்து டைய பாண்டி நாட்டின்கண்ணே பொருநையாற்றுறைவளங் கெழுமிய திருக்கயிலாய புரமெனும் பெரும் பதிதன்னில் வேளாண்மரபில், இல்லறம் வழாஅதே நல்லறம் ஆற்றுஞ் சண்முக சிகாமணி யெனுஞ் சீரிய பெயருடைக்கவியரசினரும் பவமறு கற்பிற் சிறந்த சிவகாம சுந்தரியம்மையுஞ் செய்நல்வினைப் பெருக்கத்தால் செந்திற்பதிவாழ் கந்தன்றிருவருளாற்றோன்றி, ஐயாண்டுகாறும் பேசாதொழியக்கண்ட பெற்றவர், துயருறு முளத்தொடு சீரலைவாய்த்தேவன் றிருமுன் றஞ்சேயொடு சென்று,ஒருமண்டலத்துள் இப்பிள்ளைமொழியாதொழியினிறந்து படுவேமெனுமனவுறுதியொடு நோற்றலையரிதினிலாற்றிவரக்கடை நாளியாமத்தில் முருகப்பெருமான் பெருங்கருணையொடு கனவில், குழவியாகிய தம்முன் றோன்றிக் குமரகுருபரனெனும் பெயர் சூட்டி நாவதனிலாறெழுத்தும் பொறித்தலும், இருமுது குரவர் பெருமகிழ்வுறுமா பிறப்பினி லியற்கையாயமைந்த மூங்கைத்தன்மை நீங்கப் பெற்றுப் பல்வகையாப்பும் பாங்குறத் தொடுக்குஞ் சொல்வன்மை, எப்பொருட்கு முன்னவனே முன்னின்றான் முடியாத பொருளுளவோ வென்ற பெருமொழிக்கிலக்காயெய்தி, சைவத்திருமறைச் சாரமனைத்தும் பொதுளிய ‘கந்தர் கலிவெண்பா’ வென்னு நூலொன்றுபாடி யறுமுகப்பெருமானறு மலரடிகளிற் சாத்தி யன்பொடுதுதித் தறிவின்குரவனை யருள்கெனவேண்ட, நின்னுரைதடைப்படுமிடத்தே தகவுடைக்குரவன் கிட்டுவன்கொள்கென உருவிலாமொழியுரைக்க (வான்மொழி கூற) மாயோன் மருகனை வாயார வாழ்த்தி வணங்கிப் புறவிடை பெற்று வடநாட்டுத் திருப்பதிகாணும் பேரவாவொடு தந்தை தாயரைப் பணிந்து விடைபெற்றுக்கொண்டு மதுரைப் பெருமாட்டியார் மீது பிள்ளைத்தமிழ்பாடி முடித்துப் பின் னாடற்கரிய கூடற்குடவயினுள்ள பரங்குன்றுற்றுப் பன்னிருகரத்தன் பதமலர் நச்சியாண்டேவதிந்தனர்.

அந்நாளிற் கூடலையாடல்செயுந் திருமலைபூபதி, யிச்செய்தியைக் கயற்கணாயகியார் கருணைப்பெருக்கத்தாலுணர்ந்து பெருஞ் சிறப்புடன் போந்து குமரகுருபரரடிகளிற்றாழ்ந்து விண்ணப்

பித்துப் பின்னர்த்தூய்மையாளரையும் தூய்மையாளர் செய்த
பிள்ளைக்கவியையும் பட்டத்தியானை மீதேற்றிக்கொடுவந்துலக
மீன்றவொரு பெருநாயகியார் திருமுன்விடுக்க, முனிவரர் மன
மகிழ்வொடு பிள்ளைக் கவியை யரங்கேற்றுழி வருகைப் பருவங்
கூறுமமயத்து மலைமகளா ரிளந்திருக்கோலமொடு திருமலைநாயகர்
பெருமடி தங்கிக் கேட்டுத் திருவுள மகிழ்ந்து முனிவர்க்கு மணி
வடந்தரித் தவைக்கணுள்ளாரதிசயிப்ப மறைந்தருளினர். பெரி
யாரு மிடையிடையே நிகழ்ந்த பற்பல திருவருட்டிறங்களைக்
கண்டடங்கா வகமகிழ்ச்சிகொண்டு நூலை முற்றுவித்தனர்.

முற்றுவித்த முனிவர்பெருமகனார்க்குப் பல்வகைத் தெய்
வத்தன்மை நிகழக்கண்ட அரயன் திருமலைபூபதி பொன்மணி
முதலியபெருநிதிகொடு காணிக்கைவைத்து திருவடிகளிற்றாழ்ந்து
முகமனுரைமொழிய வவைகளனைத்தையு மேற்றுப் பிள்ளைக்
கவிபெற்றவம்மைக்குக் குறமும் இரட்டைமணிமாலையுஞ் சாத்தி
முளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றிய முழுமுதற்
கடவுளருக்குக் கலம்பகம்புனைந்து அரயன்மாட்டுள்ள வன்பினால்
வள்ளுவர் முப்பானூலைத் தெள்ளிதினுணரும்படி நீதி நெறி
விளக்கமெனுஞ் சீரிய நூலும்பாடிமுடித் தவண் சின்னாட்டங்கி
யப் பாண்டிநாட்டை விட்டரிதினகன்று வடநாட்டுக்கு வந்து,
ஆற்றிடைப்பட்டவாலயங்களை யகமகிழ்வுறவடைந்து வணங்கிக்
கொண்டு, மறுமுறைவழி நடவாதம்முறை தன்முறை வழிகண்டு
நடக்க நீதிபுரிந்த மநுச்சோழற்கருள்புரிந்ததும் அரவகலல்
குலார் பாலாசை நீத்தவர்க்கே வீடுதருவமென்று பன்னூல்
கண்ட பரமனை, பரவைதனூடறணிப்பான் ஆரூரன் நள்ளிருளிற்
சந்து செய்யப்பணித்ததும், முண்மகளிதயமானதும், தன்னிடை
யுதித்தார்க்கே தற்பரநிலையை யருள்வதும், மகனிலாக்குறை
முற்ற மாலவனார் மனத்திற்றோன்றிய கொடைமன்னர் பெரு
மான் (தியாகராயப்பெருமாள்) கோயில் கொண்டருளியதும்,
ஆகிய திருவாரூர்ப்புக்கு வணங்கி யவ்வூர்ப்பெருமாற்குநான்மணி
மாலையொன்று புனைந்து தரித்துப் பின்னர் இருமைப்பயனு
மெளிதி னுய்க்குந் தருமைப் பெரும்பதிசார்ந்து திருக்களியி
னுட்புக்கு, ஆசிலாமறையுணர் மாசிலாமணிப்பெயர்ப்பெருந்தகை.

கடாவிய கடாக்களுக் கேற்றவா விறைபிறுத்துத் தொண்டர் புராணத்து, "ஐந்துபேரறிவுங் கண்களே கொள்ள" என்ற முதற் குறிப்புச் செய்யுட் கநுபவப்பயனை வினவத் தன் வாக்குத் தடைப்படலும், அடிகள், அறுமுகவன் பணித்த வாணையிங் ஙனே சித்தித்ததெனை இருக்கைவிட்டெழுந்து எட்டுறுப்புற வணங்கினர்.

வணங்கின வடிகள் அப்பெருந்தகையாரைப்பார்த்து யான் செய்பிழைகளைப் பொறுத் தாட்கொளல் வேண்டுமென்றிறை ஞ்ச, காசிப்பெரும்பதியிலாயினும் தில்லைப் பெரும்பதியிலாயினு மாறெழுமுந்நாளரிதிற் கழித்து வருகுவையேல், அருளுடைய மொழியை யறிவுறுத்துவேமென அறிவின் குரவ னுணையிடக் கண்ட குமரகுருபரர் அவ்வாணை தலைமேற்கொடு புறப்பட்டுப்புள் ளிருக்கு வேளூரைச்சார்ந்து வணங்கியொருவுமெல்லையில், செவ் வே லுடையான் அருச்சகன் வடிவுகொண்டு பின்போந்து நீங்கற் கரிய நெடுவினையையு நீறச்செய்யு நீற்றைத்தந்து எமக்குப் பிள்ளைத்தமிழ் ஒன்று பாடிச்செல்கென மறையக்கண்ட பெரி யார் வான்மொழி கொண்டு பணித்தாங்கு பிள்ளைக்கவி பாடித் துதித்துக்கொண்டு, என்று வந்தாயென்னுந் திருக்குறிப்பொடு மன்றுளாடுங் கொன்றைத் தாரன் பொன்னடிகண்டு வணங்கி யப்பெருமாற்கு மும்மணிக்கோவையொன்றும், ஒரு புலவன் பொருட்டுச் செய்யுட் கோவை யொன்றும் தந்திறங்காட்டித் தரித்துச் சிவகாமியம்மையாருக் கிரட்டைமணிமாலையுமிலைந்து குறித்தநாட்டங்கித் திரும்பித் தருமைப் பெரும்பதியுற்று, அம் முனிவர் தலைவற்கு மும்மணிக்கோவையொன்று சூட்டித் துதிக்க வத்துதியேற்றுளங்களிகூர்ந்து அருளுரைசாற்றிக்கல்லாடை யக் கவட முதலிய வளிக்கக்கண்ட அடிகள், (சாமிகள்) தனக்குத் திருமலைதந்த விருநிதிகளனைத்தையு மப்பெருந்தகையாளன் றிரு வடிகளில் காணிக்கையாக வைத்து வழிபட, இவைகளை யாம் வேண்டேம் நீ காசிப்பெரும்பதி சென்று இப்பொருள்கொடு, அறம்பலவாற்றுதி யெனப்பணிக்க, அங்ஙனமேயாகவென விடை பெற்றுப்போம்வழியில் காஞ்சிப்பதியிலுள்ள விண்டுதொண்டரா மிண்டர்களும் பிள்ளைப்பெருமாளையங்காரும் கண்டுவந்துவாதிட

அன்னார் கோள்களை பலபடியாகக்கண்டித்து வென்று, காசியை யெய்தி, நாற்பக்கமுங் காடுகளாற் சூழ்ந்துகிடந்த கேதார நாதருக்குக் காடு கெடுத்துச் செப்பஞ்செய்து வணங்கிக்கொண்டு அவ்வூர் கோயில்கொண்ட அவிமுத்தருக்குக் கலம்பகம்பாடித் துதித்துக்கொண்டு நாமகள் மாலை யொன்று நயம்படப்பாடி யவளருளால் இந்துத்தானி மொழி கைவரப்பெற்று ஓரியூர்தி மேற்கொடு, அவ்வூராளும் பாட்சாவென்னு மன்னனைக்கண்டு பல்வகைச் சொற் பொழிவு செய்து கொண்டு வருகையி லவ்வரசனைச் சூழ்ந்த துலுக்கர்களிற் சில ரிவர் சொற்பொழிவி லையங் கொண் டிவருண்மைத் துறவியல்லரெனக் கூக்குரலிட, கூக்குரற் பொருட்டு நெருப்புத்தூணைத்தழுவியும், அவர்களுணுமூணைத் தனக்குக் கொடுக்க முயலுகையில், அவ்வூணைப் பலவகையாகச் செய்தும் அவர்களைத் தம் வயமாக்கியம்மன்னனால், தம்பொருட்டுக் கட்டப்பட்ட திருமடத்திற் பலவறம் ஆற்றி, வைகாசித் திங்கள் தேய்பிறை மூன்று நாளன்று காசியிலேயே, அவ்வகிலேசருடைய மறைபுரை யடிகளிற் கலந்தனர் என்பர் சரித்திர சார பஞ்சகஞ் செய்தார்.

பாண்டி நாட்டிலே பொருநையாற்றின் வடகரையிலே வைகுண்டமெனும் பெரியவளமிகும் பேரூரிலே அருண்மிகவுடைய ஒரு வேளாளன் செய்த பெருந்தவப்பயனாகி மிக்க வழகினையுடையவொரு புதல்வ னூமையாய்த் தோன்றினன், தோன்றினபுதல்வ னையாண்டுவரையும் பேசாமையால் தாய் தந்தையர் தங்குழவியை யெடுத்துக்கொண்டு செந்திற்பதிசென்று செவ்வேளி னற்றாளை வணங்கி யிம் மகனோர் மண்டலத்தினினிய சொற்களை நின்னருளான் மொழியாதொழிகுவனேல் இக்கடலிடையாழ்ந்துயிர் துறப்பே மென்னும் விரதம்பூண்டு ஓர் போதுப் பிலாச் சோறுண்டுறக்கமின்றிக் கடவுளுடைய புகழைவாயார வாழ்த்திவருகையில், குறித்த விறுதிநாள் முன்னிரவிற் றம் சேயொடு முருகன் றிருமுன்சென்ற பயன்சித்தியுறுமோவென வையுறுநிற்கையில் அறுமுகப்பெருமான் பூசையாற்றுவோன் வடிவுகொடு, கையில்வேலெடுத்துக்கொண்டுவந்து அப்பிள்ளையின்

கழுத்தினில்மாலையொன்று போட்டீமைமையைப்போக்கிப் பிறவியச்சந்திர நீறிட்டுக்குண்டிகை நீரைத்தெளித்துப் பழவினையும் பறக்குமாச்செய்து பூவென்னக்கூற ஊமைதீர்ந்த வஃமதலையார் அம்மொழிகொண்டு பஃறொடைவெண்பாவொன்று பாடிப் பரமனை வழுத்துகையி லாண்டுளாரனைவரும் விம்மிதமுற்றனர். உண்மைத்தவத்தினை யுள்ளவாறுழைத்த திருமுதுகுரவர் அப்பெற்றிகண்டு பெருமகிழ்வெய்த வுண்மைநெறியாளர் பலருங் குழுமி யப்புதல்வனார் உருத்திரசன்மனோவென வணங்கித்துதிக்கத் தொடங்கினர்.

மாயோன்மருகன் மாட்சியா னூமைமையொழிந்தவரை உலகெலாம் குமரகுருபரன் எனவழைக்கத் தொடங்கிற்று. அஃது மன்றாடிமைந்தன் றிருவுளமேபோலும். அக்குமரகுருபரன் தவமுயர் பெரியரும், பாவலரும், நாவலரும் உளமகிழ்கூர்ந்து தன்னொடுங்குழுமிவரத் திருமடங்களினுஞ் செந்தமிழ்க்கழகங்களினும் சென்றாண்டுளோர் சிறப்புச்செய்யவேற்றுத் தமிழ்மொழி மாரி பெய்து சிங்கவேறொத்த துங்கனாய்நின்று நிலவினன். அக்காலை யோதாதுணர்ந்த பெரியனென்று உயர்ந்தவரியாரும் அப்பெரியான் மலர்க்கழல் வணங்கி யன்னான் சொன்னெறி கடவாதுநடந்தனர்.

இங்ஙனமாக, குமரகுருபரன் வருதலையுணர்ந்து திருமகளகலாத் தருமபுரமடத்ததிபனாகிய மாசிலாமணிக் குரவன்றனதினிய பரிகலத்தைத் தொன்னையிலெடுத்து வைத்திருங்களென வடிசிலமைப்பானிடங்கூறி யெடுத்துவைக்குமாறாணை செய்து தன்னிருக்கையுற்றனன். இருக்கையினுறலும் குமரகுருபரன் திருமுன் வந்து அக்குரவனைத் திருச்செந்தூர்த் தேவனாகவே வணங்கினன். (எட்டுறுப் புறத்தாழ்ந்தனன்) அச்செயல்கண்டாரனைவருமற்புதங்கொண்டனர்.

அம்மாசிலாமணிக்குரவனு மன்னானைத்தழுவி, கற்றாங்கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய முற்றாவெண்டிங்கள் முதல்வன்பாதமே பற்றாம்வகை பற்றுமாச் செய்து பரிகலத்தையும் சிவவேடத்தையுமக் குமரகுருபரனுக்களித்தனன்.

ஞானிகள், ஆடம்பரமுடைய அறத்தலைவர்களாய் விளங்கினும் அளவிடற்கரிய வடியவர் குழுமிக்கும்பிடும்படி போக நகரினு ஞானிகளாகவே விளங்குவர் என்னு மொழியுண்மையாகப் பெருமகிழ் வெய்தினராக்குமர குருபரனுர்.

இப்பெருஞ் செயல் புரிந்த மாசிலாமணிப்பெயர் ஞானகுருபரன் மேம்பா டுணராச்சிலர் தொண்டர் புராணக் கவிதையொன்றுற்றுழ்வுறச்செய்து அக்குருபரன் பின்னுண்டானெனச் சொல்வர். அப்பெரியாரவ்விடத்திற் பெரும்புகழுடையராய் விளங்கினராவர். குமரகுருபரன் சின்னுட்கழிந்தபின்றை யவ்வாசிரியன் பெருமொழிப்படியே யூர்தொறுஞ் சுற்று முழுப்பினை யொருவிக் காசிப் பெரும்பதியெய்தக் கருதுகையில் மதுரைக்கரசியார் விழைந்தவண்ணமே யம்மையார் மீது பிள்ளைக்கவியொன்று பாடி முடித்துக்கொண்டு, தருமையை விட்டகன்று, மதுரையையெய்தித் திருமலைநாயகனுதவி கொடரங்கேற்றலைச் செய்தல்நலமெனக்கருதியவ்வரயன் கோபுரவாயிலைக்குறுகுதலும் காவலாளிகள் கொடுமொழிகள் பல கடுகிக்கூற முனிவரன் அம்மன்னனுணை கொண்டு பிள்ளைக்கவியரங்கேற்று மவாவினையொழித்துக் கோட்டையின் வடக்குவாயிலினுறங்கினன்.

இஃதிவ்வாறுகப் பாண்டியன்மகளார் திருவருள் சுரந்து அத்திருமலைநாயகன் கனவிற் றேசுறு பூசை மாசற வாற்றும் பட்டன் மகள் வடிவுகொண்டுசென்று, நின்னைக்காண வந்தவடிகள் நின்னைக் காணப் பெறுமையால் மீண்டு மனமாழ்கித் துயில்வதையும், தனது நீண்ட சடாமுடியில் செந்தமிழ்க்கவி வடிவாகிய தன்னைக்கொண்டு மீளநினைத்ததையுஞ் சொல்லியுடனே யவ்வடிகளையழைத்துக் கொண்டுவந்துலகினருய்ய வப்பிள்ளைக்கவியை யரங்கேற்றுதி யென்றுகனன்று கூறிப் பின்னம் முனிவரன் கனவிற் றேன்றி, இலக்குமிவிளங்குமார்பின ஞகிய மன்னன் நின்னையழைத்துச் செல்ல வருவானெனச் சொல்லி மறைந்தனர். மறையக்கண்ட முனிவரனுடனே துயினீப்பவரயன் வந்தடிகளைக் கண்டகமிக மகிழ்வுடன் பணிந்தறிவிற் பெரியார் கண்டானந்த நனியுற அப்பெரியாருக்குப் பல்வகைக்

சிறப்புஞ் செய்தமைத்துக்கொண்டு "சடையிற் கட்டுண்டு கிடப்ப தாந் தன்னொரு சககளத் திரிதன்மை--யுடையு மம்பிகை வடிவ மாம் பிரபந்த மதனையத் தனைநீக்கி--மிடைதரும்பல புலவரும் தவத்தரும் வேதியர் களுஞ்சூழப்--படைகொண்மன்னனு மின் புறச் சந்நிதியினிற் படித்தனன் "அந்தப் புத்தகந் தாங்கியூர் வலம்வரு மானையூர் திபின்சீருஞ்-சந்தக் கோகில மனையமீ னம் பிகை சந்நிதிச் சிறப்புஞ் சேர்த்து-இந்தத் தானத்தி னாறுபாட் டியம்பினு மினிதெனக்கொடுபேசு-மந்தப் பக்குவர் பலருள ராங் ஙனம் வகுப்பதென் னிசைவன்றே" என்ற விச்செய்யுளீண்டா ராய்தற்குரித்தாகலிற் குறிக்கப்பட்டது.

அங்ஙனமாகவே, நாயகரைத் துணையாகக்கொண்டு முனிவ ரர் காப்புப்பருவ முதலைந்து பருவங்களையு மரங்கேற்றி யாறுவது வாரானைப் பருவங்கூறுகையில், அங்கயற்கண்ணியார் பட்டர்மக ளாய் இந்திரனேய்ந்த வெழிலமர் நாயகர்மடியைத் தாபகமாய்க் கொண்டு வீற்றிருந்து, அப்பருவமுற்றிய பின்னர் மறைந்தனர். அங்ஙனமம்மையார் மறைதலும், அரயன் மடியிலமர்ந்த மகளார் மானிட மகளாரல்லரெனக் கண்டுணர் பெரியரிற் சிலரயிர்த் துசாவலும் உண்மைபெறப்படவியந்தனர். மன்னனும்இத்தனைப் பேறு நானெய்தினமையென்னே யெனக்களி கூர்ந்தான். அடி களும் மற்றைய பருவங்களையு மினிதாக வரங்கேற்றிப் பெரு மகிழ் வெய்தினர்.

பின்னர், திருவருட்டிறங்கண்ட திருமலைநாயகர் அப்புலவர் பெருமகனாரடிகளில், பொன்னு நன்மணியுமாடையும் வைத்து வணங்கி யென்னுலியன்றன வாயுள்ள விலைகளை யேற்றருள வேண்டுமென, அப்புலவரும், ஓவரய, நாணற்க, நீயுமலயத்து வசனை யொத்து நலமுற்றனை யென்றின்னுரை கூறி யேற்றுக் கொண்டு அருளேயழகாகவுடைய ஞானகுரவன் பக்கலைச் சார் வேனென்றுரைத்துப் பாண்டிநாடுவிட்டு அகன்று சோணாட்டை யெய்திப் புள்ளிருக்குவேளூரையடைந்து மலைமகளார் நலமுற இடந்தந்தான் றிருவடி திடமுறத் தொழுதகலலும், செவ்வேற் குமரன் என்னையுந் துதித்தேகுதி யென்றலும் தேவாமுதினுந் தெவிட்டாத் தெள்ளமுதாய பிள்ளைத் தமிழைப்பாடித் துதித் தனர். ௬

இன்னணம், பலதலங்களையுஞ் சென்று வணங்கிய காலையில் அவ்வத்தலமுடையார்க்குப் பாமாலை சூட்டிப் பழிச்சாமை யவ்வவர் விழையாமையாற் பாடிலர், விழைந்தார்க்குமட்டுந் தெரியலாய்ந்து தரிப்பர் போலும்!

இப்படியே பலகோயில்கள் புக்கு நெறிப்படியே வணங்கித் தம்முடைய கவி விழைந்தார்க்கே சாற்றுந்தகையினர் தில்லைப் பெரும்பதிபுக்குச் செய்யுட்கோவை யென்றோர் நூல்பாடி யப்பதி விட்டகன்று, யாவருமேத்து மெழிற் காசியம்பதிபுக்கு யவ்வூர்க்கோயில்கொண்ட வகிலேசனைத் தொழுது கலம்பகமொன்றும் பாடித்துதித்தனர். நீதி நன்னெறி விளக்கமும் நாமகள் மாலை முதலிய சில நூல்களுங் கூறினர். அந் நூற்றொகைப்பன்னான்கெனப்பகர்வர் பலர், அவைகட்கு வகை தெரிந்துரைப்பர் சிலர்.

நிற்க, குமரகுருபரர் அக்காசிப்பதியிற்றரும மின்மையும், அயலவர் மொழியும் பரவக்கண்டமையும், கண்டுளநனி கலங்கி இந்துத்தானி நாட்டினிற் றமிழ்மொழிபரவு வதருமையே, நல்லறநடப்பதுமருமையாமோவென்று கருதிக் குருகுலாதிபர் வாழ்ந்த அத்தினபுரியில் அந்நாளாட்சி புரிந்த வீரசேகரனெனுமிலேச்ச மன்னவனைக்கண்டனர்.

கண்ட மன்னன், நீர் யாரென வினவலும் முழுமுதற்கடவுளின் கழறொழும் அடியவரென அவ்வியலுறுந்தொண்டர் அனைவர்க்கும் பொதுவானவரோவென, ஆம் பொதுவானவரேயென, ஆயின், நீவிரெங்களொடு முணவருந்தற் கிசைவீரென மாறுபடுமாற்றம் அறையக்கண்ட முனிவரர் ஓமன்ன! நீங்களுணு முணவுகளியாவெனக் கேட்டறிந்து பன்றியினிறைச்சியறிந்துண்ணாமை யெதன்பொருட்டென வினவலும், மன்னவன் எங்கள் குரவனார் பணிக்கவில்லையென, எங்களிறைவனுமிறைச்சியை யருந்து மாறிசைக்கவில்லையென, அரயன் அகமகிழ்வுற்று ஆனால் யாதேனுந் தெய்விகந்தாங்கள் காட்டல் வேண்டுமென, அடிகளும் இன்றிரவினில், நின்றெய்வமே, என்னையின்னானெனத்தெரித்திடும் எனமறுமொழிகூறி யவனோர்பக்கலில், வென்றிவேலன்றிருவடிகளைக் குறித்துக்கொண்டு தங்கியிருந்தனர்.

யாதொரு தெய்வங்கொள்ளினு மத்தெய்வமாகி யாங்கே வருமவன், அம்மன்னன், நித்தந்தொழு மத்தன்வடிகொடு கனவிற்போய் இக்குற்ற முனிவரன் வேண்டுகோளுக்கிசைந்து விழைந்தன தந்தனுப்புதி வல்லேயென மன்னற்குக் கூறினன். அக்கனக்கண்ட மன்னவன் விடியுமுன்னர், அத்தவமுனிதனைக் கண்டு மக்கதேசிகன் மொழியினல், நின்பெருமை யுணர்ந்தேன், நின்னெண்ணத்தை நிறைவேற்றுவேனென்ன, குமரகுருபரவடிகளுமுடனே மனமகிழ்கொண்டு ஓ அரய, பரமனுமையாளுர் கோயில் கொண்டருளிய காசியம்பதியில் மாசறு மாதவர் பொருட்டுமடங்களறுபத்துநான்குகட்டிக்கொடுத்தவைகட்குரிய வருவாய்நிலங்களும் பெருநிதிகளும் ஆட்களுமுதவிடல் வேண்டுமென, அரயனு மங்ஙனேயாகவெனக் களிமிகவுற்று, எண்ணியாங்கு முடித்துக்கொடுக்க அடிகளும், அத்தேயத்தார் நாணுற மண்பொதுத்தந்தை கண்ட பண்ணுறுமறை நெறிப்படியே அறம்பல விண்ணவர் வியப்ப மண்ணவர் மகிழச்செய்துவந்தனர். அப்படிச்சின்னுட்டங்கி யருந்தவம் பலவாற்றிக்கொண்டு நல்ல தினத்தில் காசியிற் கோயில்கொண்ட வயிரவப் பெருமானுட் பொங்கு கங்கையிற் சிறிய காற்புனல் புகல்போற் கலந்தொன்றுனர் என்பர் புலவர்புராணமுடையார். (தொடரும்).

உ

தமிழ்மக்களும் கப்பற்ருெழிலும்.

திருவாளர் K. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள், தஞ்சை.

ஒரு நாட்டிற்குரிய நால்வகை அரண்களுள் இன்றியமையாததும் முதன்மையானதும் நீரரணேயாகும். வரையறுக்கலாகாத பழங்காலந்தொட்டே நம் தமிழ்மக்கள் இவ்வரணைப் போற்றத்தக்கதெனப்போற்றி வந்தமையினல், தமிழகம் செல்வத்தினும் வாணிப நலத்தினும் சிறப்புற்றிருந்ததென்பது தெளிவு. மற்றும்

தமிழர் நெடுங்கடலைக்கடக்கும் பெருவுரனும் மரக்கலங்களைக் கட்டி வளியினுல் அக்கலங்களை யோட்டும் மிகுதிறனும்உடைய ராயிருந்தனரென்பதும் புலனுகும்.

நெடுமுடியுடைய பெருநிதிக்கிழவராம் சேர சோழ பாண்டியமன்னுர்கள் வலிகுன்றி அரசியலை நடாத்தும் திறமையினை யில்லாதவர்களாய்க் குறுநில மன்னர்களாகப் பல்வேறிடங்களில் நிலவரனும் படைத்துணையுமே உற்றுழியுதவி யெனக் கருதி யிருந்த காலத்து, இந்நீரரணைக் காக்கும் முறைமையினையும் அருமையினையும் ஒழித்தனர் நம் தமிழ்மக்கள்.

படைப்புக்காலத்தில் உலகம் நீரும் நிலனுமாகப்பிரிய, நீர் சூழ் நிலவரையில், பரதவர், நுளையர், கடலர், வலையர், சலவர், திமிலர் என்ற நெய்தனிலமாக்கள் கடற்சார்பினில் வதிந்துவந்தனர். இத்திமிலர் தாம் 'வழக்கதிர் திரிந்தவன் ஞாட்பெருவலை நோன்புரிக்கயிறுகள், புணரியின்கண் திமிர்தம்செய்யும், திமிதிமி, திமிங்கிலகிலம் ஏனைய கடற் பிராணிகளைக் கொல்லும் கூரிய கழுமுள் முதலானவைகளுடன் கம்பிதமில்லாமல் களிப்புடன் கடற்றெய்வ விழாவினைச்செய்து கலனையோட்டுவர். இராக்காலங்களிலும் கண்படை செய்யாது ஒள்ளிய விளக்கங்களைக் கொளுத்திக்கொண்டு, மீன்களின்மேல் வேட்கையினை யுடையவராய் வேலாவயத்தின்கண் வேட்டம் செய்வார். [இத்தகையோர் கட்லில் நெடுந்தூரம் கலன் செலுத்துவதற்கும் பின்பு மனம் துணிபுபெறவே, சாகரத்துக்கப்பாலுள்ள நாட்டாரோடு ஒரு மிக்கக் கலந்துகொள்ள ஏதுஉண்டாக, இவ்விருநாட்டினர்க்கும் கேண்மை பலப்பட்டுவிடுகின்றது. அப்பால் குடியேறுதலினிமித்தமாக இவ்விரு நாட்டினிற்கும், கொள்வனகொடுப்பன் முதலிய வாணிப நன்மையினுல் நாகரிகக்கிளர்ச்சி யுண்டாய்விடுகிறது.]

ஊற்றுநீர்க் கூவலுள் உறையும் மீனனுர்
வேற்றுநாட் டதன்சுவை விடுத்தல் மேயினர்.

[சீவகசிந்தாமணி].

தமிழ்மக்கள் பல்லாயிரம் வருடங்களுக்கு முன் நனி நாகரீக மடைந்தனர் எனக்கூறிப் போந்தனர் சரித்திர நூலாகிய நூலாராயும் நிபுணர்கள். கி. மு. 10ம் நூற்றாண்டில் அரசுசெலுத்திய சாலோமேன் காலத்தில் நம் நாட்டிலிருந்து அவர் நாட்டிற்குச் சந்தனமரங்கள், குரங்குகள், மயில்கள், தங்கம், வெள்ளி, தந்தம், மற்றும் பிற பொருள்களும் கொண்டுபோகப்பட்ட செய்தியைக் குறிக்கப்படுதலால், அக்காலத்தில் இவ்விரு நாடுகளுக்கும் கடல் மார்க்கமாய்ச் சம்மந்தம் ஏற்பட்டிருந்த தென்பது குறிக்கப்படுகிறது. கி மு. 1700ல் ஜோஸப் என்போன் இந்தியாவிலிருந்து வாணிபத்துக்குரிய பல்வேறு சாமான்களை ஈஜிப்த் ஸிரியா, பேபிலோனியா முதலியவிடங்களுக்கு அனுப்பினு னென்பது கூறப்படுகிறது. ஈஜிப்த் மன்னுேர்கள் நம் நாட்டினில் செய்யப்பட்ட மஸ்லீம்துணிகளை உபயோகித்து வந்தார்களென அவர்களது கல்லறையிலிருந்து தெரியவருகிறது. இம் மஸ்லீம் துணிகள் அவுரிச்சாயத்தில் * நனைக்கப்பட்டிருந்தன வென்றும், அவுரிச்செடிகள் நம்நாட்டிலொழிய வேறுநாடுகளில் விளைவுற்றில வெனவும் லாசன் கூறுகின்றுர். அஸ்ஸிரியாவிலும் இந்தியாவிலுமிருந்து தங்கம், பட்டாடைகள், தகரம், நன் முத்துக்கள் முதலியவைகள் இறக்குமதி செய்யப்பட்டன. அஸ்ஸிரியாவினி லாண்ட நான்காம் ஸால் மினிஸர் என்போன் இந்தியாவிலிருந்து யானைகளைக் கப்பல்களிலேற்றித் தந்நகருக்கேகினுன். நம்நாட்டினில்விளைந்தநெல், கோதுமை, முதலியவைகள் பாபிலோனியாவுக்கும், அஸ்ஸிரியாவுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதினுல் அக்காலத்து நம் நாடு எத்தகைய சிறப்புமிக்க நிலைமையினை அடைந்திருக்க வேண்டுமெனக் கருதுக. மற்றும் தென்னிந்தியாவிலிருந்து ரோமநாட்டிற்கு வருடந்தோறும் ஏற்றுமதியாகும் சரக்குகளின் விலை 55000000 செஸ்டர்ஸ் (ரூ 7500000) என்று பிளினி (Pliny) கூறுகின்றுர். கி. மு. 27 முதல் கி. பி. 491 வரை ரோமாபுரி அரசர்களின் இலாஞ்சனமிடப்பட்ட ரோமநாணயங்கள் மதுரையிலும் அதற்கடுத்த விடங்களிலும் காணப்படு

---

* கானக் குமிழின் கனிநிறங் கடுப்பப் புகழ்வினைப்பொலிந்த பச்சையொடு.

கின்றவதனுல், தமிழ்மக்கள் கடல்வழியாக வாணிபத்தை விருத்தி செய்தும் அதனை நன்கு போற்றியுமிருந்தாரென்பது கூறுமல் விளங்குமல்லவா? கி. மு. 3000, முன்னரே சீனுவிற்கும் நம் நாட்டினிற்கும் கடல்வழியாகப் போக்குவரவு வுண்டென அபிப் பிராயப்படுகிருர் Sir Henry Yub என்பார். தமிழ்மக்கள் வாணிபத்தின் முன்னேற்றத்திற்காகச் சீனுவில் குடியேறினரென் றும் ஆங்கு அவர்கள் நாகரீகநிலைமையினை மேம்படுத்தினுரென் றும் கூறுகின்றனர். சாவகநாட்டிற்கும் பண்டைத்தமிழ்நாட்டிற் கும் போக்குவரவு சாதனமுண்டென இவ்வரிகள் தெள்ளிதில் தெளியப்படுத்தும்.

மாநீர் வங்கம் வந்தோர் வணங்கிச்
சாவக நன்னுட்டுத் தண்பெயன் மறுத்தலி
ஞனுயிர் மடிந்த துரவோ யென்றலு
மமரர்கோ ஞணையி னருந்துவோர்ப் பெருது
குமரி மூத்தவென் பாத்திர மேந்தி
யங்கந் நாட்டுப் புகுவதென் கருத்தென
வங்க மாக்களொடு மகிழ்வுட னேறிக்
கால்விசைகடுகக் கடல்கலக் குறுதலின்
மாலிதை மணிபல் லவத்திடை வீழ்த்துத்
தங்கிய தொருநாட் டாஞுங் கிழிந்தன
னிழிந் தோ னேறின னென்றிதை யெடுத்து
வழங்குநீர் வங்கம் வல்லிருட்போதலும்.
[மணிமேகலை]

இதுநிற்க, யவன தேசத்திலிருந்தும் மற்றுமுள்ள தூரமிக்க தேசங்களிலிருந்தும் வாணிபத்திற்குவரும் பல்வகை மாபினர்கள் தென்னிந்தியாவிலே தங்கள் தங்கள் மதவொழுக்க விதிகளின் வழக்கத்தினை அனுசரித்துக் குடியேறிவிட்டனர்.

மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்.
[பட்டினப்பாலை]

மகத வினைஞரு மராட்டக் கம்மரு
மவந்திக் கொல்லரும் யவனத் தச்சருந்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடி.

[மணிமேகலை]

பயனற வறியா யவன ரிருக்கையுங்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
....
கலந்திருந் துறையு மிலங்குநீர் வரப்பும்.

[சிலப்பதிகாரம்.]

இவ்யவனர்கள் புரவிகளையும் மதுபான வகைகளையும் நம்நாட்டில் இறக்குமதி செய்தனர்.

'விழுமிய நாவாய் பெருநீ ரோச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நல்கல னய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவி.'
'நன்யவனர் கலந்தந்த தண்கமழ்தேறல்
பொன் செய்புனைகலந் தேர்ந்து நாளும்.'

சீனம்முதலிய தேயங்களிலிருந்து கற்பூரம், பனிநீர், குங்குமம் முதலியவைகளும், கடாரத்தினின்றும் நுகரப்படும் பொருள்களும் இறக்குமதி செய்யப்பட்டன. இத்தகைய சான்றுகளால் தமிழ்நாடு, சால்டியா (Chaldea) அஸ்ஸிரியா (Assyria) பேபிலோன் (Babylon) ஜூடியா (Judea) பெர்சியா (Persia) ஈஜிப்த் (Eyypt) ஆகிய இவைகள் நாகரிக நிலைமை யெய்தின காலத்திற்கு முன்னரே, நீரரணை உறுதுணையென ஓம்புதனிமித்தம், வாணிபமுறையிற் சிறப்பினையுடைத்தாய், மிக்குயர்ந்த நாகரிக நிலைமையினை யடைந்திருந்தது.

பண்டைத் தமிழ்மக்கள் கடலுக்கு வழங்கிய சொற்கள்:—

நளியிரு முந்நீர். [புறம்]

தெண்ணீர்ப்பரப்பி னிமிழ்திரைப் பெருங்கடல்.

[புறம்]

கூருகிர்க் குவவுத் தோளான் கூம்பெனக் குமிழி பொங்க
ஆர்கலி யழுவத் தாழுங் கலமென லாயிற் றன்றே.
[கம்பராமாயணம்]

தொய்முலை தழுவிய குழவி போலவுந்
தேறுநீர்ப் புணரியொடு யாறுதலை மணக்கும்.
[பட்டினப்பாலை.]

முதலியவாகும்.

கப்பலுக்கு வழங்கப்படும் சொற்கள்:—

(1) முந்நீர் வழங்கு நாவாய்.
[புறம்]

(2) ... . எறிகடல் வாய்மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே.
[திருமொழி]

(3) குலமடமாதரொடு கலமிசைச் சேறலும்
பாசறைச் சேறலும் பழுதென மொழிப.
[நம்பியகப் பொருள்]

(4) கடன்மண்டு தோணியிற் படைமுகம் போழ.
[புறம்]

இக்கப்பல்கள், தண்டுவலித்து ஓட்டப்பெறுவனவாயிருப்பினும் பெரும்பாலும் காற்றினுலோட்டப்பட்டுள்ளன.

'வளிபுடைத்த கலம் போல',
'நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட வுரவோன்.'

மற்றும் சிலமரக்கலங்கள் காற்றையும் புயலையும் ஓர் பொருளாகக் கொளாது விரும்பியவண்ணம் போகத்தக்க இயந்திர சூழ்ச்சி அமைந்துள்ளனவென வான்மீக முனிவர் கூறியிருக்கின்றனர் ('ஸர்வவாத ஸஹாம் நாளம் யுந்த்ரயுக் தாம் பதாகினீம்') கப்பல்களில் நம்தமிழ்மக்கள் எக்காலத்தும் வடக்கினைத்துருவிக் காண்பிக்கும் காந்தவலியினையுடைய இரும்பினல் செய்யப்பட்டுள்ள ஓர் மீன்உருவினை மீனினது எண்ணெயில் மிதக்கவிட்டுள்ள

தாகிய ஓர் திக்குக்காட்டும் இயந்திரத்தை உபயோகித்து வந்தனர்

நம் தமிழ்மக்கள் கப்பல் செய்வதினில் மிகத்திறமை வாய்ந்தவர். 'கலஞ்செய் கம்மியர்' 'கலம் புணர்மாக்கள்' எனவரும் தொடர்களை நோக்குக. இவர்கள் கப்பல்களைக் கட்டுங்காலத்துக் கப்பல்களின் அடிப்பாகத்தில் இரும்பினை உபயோகித்திலர். கடலின்கண் காந்தக்கற்பாறைகள் அவைகளையிழுத்து நாசமாக்குமெனவுன்னியே இரும்பை அடிப்பாகத்தில் உபயோகப்படுத்தாதிருந்தனர். குதிரைமுகவோடம், யானைமுகவோடம், சிங்கமுகவோடம் முதலியவைகளைத் தமிழ்மக்கள் கட்டி ஓட்டினரென்று கீழேவரும் வரிகள் காட்டும்.

'பரிமுக வம்பியும் கரிமுகவம்பியும்
அரிமுகவம்பியும் அருந்துறை யியக்கும்
பெருந்துறை.' [சிலப்பதிகாரம்]

கப்பல்கள் பாய்மரங்களை யுயர்த்தித் தூங்கும்.

இனி, கொற்கை, முசிறி, தொண்டி, புகார் முதலிய பெருந்துறைகளை ஈண்டு நோக்குவாம்.

(1) விளைந்து முதிர்ந்த விழுமுத்தி
னிலங்குவளை யிருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கை. ....
[மதுரைக்காஞ்சி]

(2) ... ... சேரலர்
சுள்ளியம் பேர்யாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி. [அகம்]

'முழங்கு கடன் முழவின் முசிறி யன்ன.
[புறம்]

(3) 'கானலங்தொண்டி.'
'நிலவு மணல் வியன்கானிற்
றெண்கழிமிசைச் சுடர்ப்பூவிற்
றண்டொண்டியோர்'. [புறம்]
.... நீர்
முத்துப்படு பரப்பிற் கொள்கை.
[நற்றிணை]

(4) புகார் காவிரி கடலோடு கலக்கு மிடத்தி லிருந்த ஓர் சிறந்த துறைமுகம். இது கிள்ளிவளவன் காலத்தில் கடலாலழிவுற்றது. இப்புகாரினைச் சிறப்பித்துக்கூறும் பொழு தத்து, கடியலூர் உருத்திரங்கண்ணனார், அதிலுள்ள அங்கங் களைப்பற்றியும், பொறித்த விலாசத்தினையுடையவாய் பொதி செய்யப்பெற்ற அளவிலாப் பண்டங்கள் வெகுதூரம் அடுக்கப் பட்டுக் குவிந்துகிடக்கும் பண்டகசாலைகளைப்பற்றியும், கப்பல் தங்கும் துறைகளைப்பற்றியும், வெகுஅழகாகப் பாடியிருக்கின் றனர்.

நல்லிறைவன் பொருள்காக்கும்
தொல்லிசைத் தொழின்மாக்கள்.
* * *
வைகல்தொறும் அசைவின்றி
உல்குசெயக் குறைபடாது,
வான்முகந்தநீர் மலைப்பொழியவும்
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவு
மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேறவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
யருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்!
[பட்டினப்பாலை]

பரதமக்கள் கொழுமீன்கொள்ளக் கடலிற் சென்று இராக்காலம்குறுகியபொழுதத்து, அவரது உறவோர் கடற்கரையினில் நடுக்கடலில் சென்ற தம்துணைவரது கப்பல்களை அழைக்க பெருந்தீமூட்டுவர்.

நளிகடற்
பெருமீன் கொள்ளுஞ் சிறுகுடிப் பரதவர்
கங்குன் மாட்டிய கனைகதி ரொண்சுடர்."

[நற்றிணை]

இவ்வெள்ளிய விளக்கு பின்னர்ப் பாடை வேறுபட்டதேயத்து நிலையறியாதோடுங் கலங்களை அழைத்தற்பொருட்டு, கடற்கரையினில்அமைக்கப்பட்ட ஓர் கலங்கரைவிளக்க (Light House) மாக வழங்கப்பெறலாற்று.

'வான மூன்றிய மதலை போல
வேணி சாத்திய வேற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்
திரவின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி
யுரவுநீ ரழுவத் தோடுகலங் கரையுந்
துறை.' [பெரும்பாணாற்றுப்படை]

தமிழகத்து வணிகத்தினைக் கடல்வழியாகவும் மிகுவிக்க ஏற்பட்ட மரக்கலங்கள், பின்னர்ப் பெருவலிபடைத்த பகைமன்னர்களை அடக்கியாளும் கடற்படைக்கு உறுதுணையுமாய் விளங்கின. 'நச்சும்பெருமை முச்சங்கத்துட் கடைச்சங்கப் புலவர்கள் அருளிச்செய்த எட்டுத்தொகை' நூல்களும் நம்பெருமுடியினராகிய முந்நாட்டு மூவேந்தர்கள் கடற்படைக்குத் தலைவராகச் சிறந்து விளங்கினரென்பதனைக் கூறும். சேரலாதன் கடலிற் சென்று கடம்பெறிந்து இமையத்தில் வில்பொறித்த செய்தியையும்,

சினமிகு தானைவானவன் குடகடற்
பொலந்தரு நாவாயோட்டி யவ்வழிப்
பிறகலஞ் செல்கலாது

செய்தவன்மையினையும் யாவரே அறியார்? பெரும் பலகைகளை அலைசூழ் அகழிநீரினில் மிதக்கவிட்டு அவற்றின்மீது கடவைகளைச்சார்த்தி நன்கு காவல் செய்யப்பட்ட கோட்டைமீதேறிப்

பொருதல் வல்லார் ஆழியின்கண் தண்டுவலியினுலும், வளியின்னும் ஓட்டப்பட்ட மரக்கலங்களிற்சென்று மாற்றூர் கப்பல்களைத் தம் கைவசமாக்கி, அவரது வலியை நாசப்படுத்தும் மனவலியுடையவராயிருந்தனரெனக்கூறின் பிழைபடுமோ? பகைவரது கொடிகட்டிய மரக்கலங்களைக் கைப்பற்றவரும் எதிர் அரசன் தன் கலன்மீதிருக்கும் படைகளை ஏவ், பகைவர்கள் தங்கள் மரக்கலங்களோடு அவனதுகப்பல்கள் நெருங்காது செய்ய அம்புமாரிபொழிவார். இவ்வம்புமாரியைக் கிடுகுப்படையாரும் கேடகப்படையாரும் தாக்கியும், தடுத்தும் எதிர்நின்று அவரது கப்பல்களின் அருகில் தங்கள் கப்பல்களைச் செலுத்திப் பெரும்போர்புரிவர். பின்னர் மாயப்பொறிகளின் சூழ்ச்சியினுல், முன்னும் பின்னும் மகரம், மயில் முதலியனவைகளினுல் வெட்டப்பட்ட மரக்கலங்களைத் தங்கள் கப்பல்களோடு சேரும்படி செய்து, பகைவரதுகப்பல்களில்ஏணியின் மூலமாகவோ, அல்லது பலகையின் மூலமாகவோ, ஏறிச்சென்று ஆங்குள்ள பகைவர்களுடன் நிலனின்று போர்செய்வதேபோல் போரினைச்செய்து, பாய்மரங்களை அழித்து, பகைமன்னரது கொடியினையும் வாளினையும் சூலத்தினையும் கெடுத்து ஆவரியையும் வில்லினையும் கைப்பற்றிக்கொள்வார்கள். சில வமயத்து, மரக்கலங்களைக் கடலின்கண் அழுத்தியும் கவிழ்த்தும் விடுவர். வெற்றிபெற்ற அரசன் கடலின்கண் தோல்வியுற்ற அரசரது நாட்டிலும் அவனது துணைக்குறுநிலமன்னர் நாடுகளிலும் தன் தானை, யானை, குதிரை, தேர்முதலிய நால்வகைப் படையினையும் அணிவகுத்தனுப்பி, பகைவர்களுண்டேல் அவர்களை அங்கங்கே தாக்கி, தன்வெற்றிக் கொடியை நாட்டுவான்.

ஆகவே இது காறுங் கூறியவற்றுல் ஆழியின் தனியாட்சியும் மரக்கலங்களின் உறுதுணையும், தமிழகத்தையல்லாது ஏனைய கடல்சூழ் நிலனையும் பெருமுடியுடை நம் நாட்டுவேந்தர்கள் அடக்கியாள இன்றியமையாதன வாயிருந்தன வென்பதும், பிறவும் நம்தமிழகத்து வாழ்க்கைநலம் சிறந்தோங்க அவைகள் சீர்பெறு துணைக்கருவிகளா யிருந்தனவென்பதும் குன்றினிட்ட விளக்கம் போல் விளங்குதல் காண்க.

உ
முருகன் துணை.

வள்ளல்கள் வரலாறு.

திருவாளர், ஔவை, சு. துரைசாமிபிள்ளை அவர்கள்
ஆசிரியர், க த. சங்கம்.

உலகத்தில் சிறந்தோங்கும் நாடுகளை மட்டில் எடுத்துக் கொண்டு, அவை அங்ஙனம் சிறந்து ஓங்கிநிற்றற்குக்காரணம் என்னையென்று ஆராய்வார்க்கு அது அந்நாடுகளின் கல்வி செல்வங்களின் உயரிய நிலையேயாம் என்பது நன்குபுலனும். சான்றாக, ஆங்கிலேயத்தீவகமும், அமெரிக்காவுமே முன்நிற்கின்றன. இவ்விரண்டு நாடுகளின் சிறப்பும் அந்நாட்டு மக்களின் கல்வி நலத்தையும், செல்வநலத்தையும் சார்ந்து நிற்றல் வெளிப்படை. அவற்றுள் கல்விநலமாவது மக்கள் கல்வியறிவு நிரம்பியவராயிருத்தல், அது நிரம்பியகாலத்து. மக்கள் தம் இம்மை, மறுமை வாழ்க்கைக்குரிய உறுதிப்பொருள்களைத் தேடிக்கொள்ள முயல்வர். இம்மைக்குரிய உறுதிப்பொருள்களைத்தேடிக் கொள்ளுதலாவது, பொருளீட்டுமாறும், அவ்வாற்றிற்கேற்ற கருவிகளை ஆக்கிக்கொள்ளுமாறுமாம். அறநூல்களையாராய்ந்து, அவற்றிற்குத்தகநின்று, அறவினையாற்றுதலே மறுமைக்காய உறுதிப்பொருளாம். ஆங்கிலேயரும், அமெரிக்கரும் கல்வியறிவு நிரம்பியிருத்தலும், செல்வமிக்குடையரா யிருத்தலும் மேற்கூறியவற்றிற்குச் சான்றாதலும் காண்க. இக்காலத்தில், பிறநாடுகளையொப்ப, நம்நாடு தன்சிறப்புடைமையிழந்து நிற்றல், அவ்விருநலங்களின் குறைபாட்டினுல் என்பது நன்குதோன்றுகின்றது. தோன்றவே, எந்நாடு, எல்லாநாடுகளாலும் பெரிதும் பாராட்டப்படுகின்றதோ, அந்நாடு கல்விநலம், செல்வநலம்ஆகிய இந்நலங்களும் பெற்றுவிளங்குதல் ஒருதலையாதல்பெற்றாம்.

பண்டைக்காலத்தில், எல்லா நாடுகளாலும், "நாடாவளமுள்ள நாடு" எனவும், "பெறலருஞ்சிறப்பும், திருவும் பெற்ற நாடு" எனவும் பெரிதும் போற்றிப் பாராட்டப் பெற்ற நாடாக நம் நாடு சிறந்துவிளங்கியது. சுருங்கக்கூறின், இது பெரும் பொருளாற் பெட்டக்கதாகி "நாடென்ப நாடா வளத்தன நாடல்ல—நாட வளந்தரும் நாடு" என்னும் பொய்யாமொழிக்குப் பொருந்திய சான்றாகநின்றது. அதனாற் பிறதேயத்து மக்கள், தன் கண் வந்து வாழ்தலும், வாழ்வார்க்கு நல்ல பயத்ததாதலும் உற்று, இது விளங்கிநின்றது. எனவே இது ஒரு காலத்தில் உலகத்திலுள்ள நாடுகள் அனைத்தினும் சிறந்து விளங்கிய தென்பதும், அதனால் மக்கள் கல்வி நலமும், செல்வநலமும் ஆரப்பெற்றுத் திகழ்ந்தனர் என்பதும் வெளியாகும்.

கல்விநலங் குன்றாதிருந்த நம்நாடு குன்றியதற்குக் காரணம் கால வேறுபாடேயன்றிப் பிறிதொன்று மில்லை. கல்விநலஞ் சிறந்திருந்த காலத்தில், நம் நாட்டு மக்கள் வழங்கிய மொழி தமிழ் மொழியே. அரசியல் வாணிபம் முதலிய பொருள், அறம் முதலியவற்றை யீட்டுந் துறைகளில் வழங்கப்பெற்ற மொழியும் தமிழ் மொழியே. அத்துறைகளுக்கு வேண்டிய கல்வியறிவைத் தரற்கெனத் தோன்றிய சான்றோர் பலராவர். அச்சான்றோர்கள், தமிழ்மொழியைக் கற்றுத் துறைபோகிய நல்லிசைப்புலவர்களாவர். அவர்கள் தம்மனக்கண்ணிற் றோன்றும் பொருளனைத்தையும் மக்களுக்கு நூல்களின் வழியாகவும், இனியபாக்களின் வழியாகவும் உணர்த்தி அம்மக்களறிவைப் பண்படுத்தினர். அங்ஙனம், அரியதொழில்களையாற்றி, நம் நாட்டுக்கு அழியாப்பொருள்களாக அரிய நூல்களும், அணியாக அருங்கவிகளும் ஆக்கித்தந்தமையே, இன்று நாம் பிறர் முன் நின்றேனும் பேசும் ஓர் நிலையை நமக்குத்தருகின்ற தென்பது நாம் அறிய வேண்டியதொன்று. நிற்க, இச்சான்றோர்கள் பெரும்பாலராய் விளங்கிய காலத்து அவர்களைக் கருந்தனமாகக் கருதிப் புரந்தவர்கள் கணக்கிலடங்கார். எனினும், அவர்க்குள், அரசர் நீங்கிய பொதுமக்களுள் மிக்க கீர்த்தியும் புலவர் பாடும் புகழும் பெற்று விளங்கியபலரில்

ஒரு சிலரே இன்றுகிடைக்கும் பண்டை நூல்களிற் காணப்பெறு கின்றனர். இவர்களுள், மன்னுயிர் மாட்டுப் பேரருளும், அவர் கேட்டவற்றை வரையாது கொடுக்கும் பெருந்தன்மையும் பொருந்திய பெரியோர்களு மிருந்தனர். அவர்களை வள்ளல் களென்பதே வழக்கு. இவர்களுடைய பொதுவியல்பை ஈண்டு ஆராயப்புகின், இவ்வரலாறு விரியுமாதலால், ஒன்று மட்டிற் கூறி மேற் செல்லுகின்றேன். இவ்வள்ளல்கள் நல்லிசைப்புலவர் களுடைய பெருமையும், அவர்களுரைக்கும் நிறைமொழி களினருமையும் நன்கு உணர்ந்து, அவர்களைத்தம் உயிர்த்தோழர் களாகவும், அவர்கள் இயற்றிய நூல்களைத்தம் உயிரினும் சிறந்த பொருளாகவும் போற்றிப்புரந்தனர். இது பற்றி அவர்கள் நாட்டுக்கு உண்மைத்தொண்டு இயற்றிய பெருந் தகைகள் என்பதுவே சிறப்புடையதாம், என்னை: நாட்டின் பெருமை, கல்விநலத்தையும். அந்நலம், சான்றோர்களையும், சார்ந்துநிற்றலின் என்க. எனவே, அச்சான்றோரைப்புரத்தல் நாட்டின் பெருமையை வளர்த்தலாகி, நாம் தேயத்திற்குச் செய்யக் கடம்பூண்ட சீர்த்தொண்டுமாயிற்று என்க.

இவ்வாறு சான்றோர்களைப் புரந்தவள்ளல்களுள், எழு வள்ளல்களின் வரலாற்றினைக் கீழே கூறுகின்றேன். அவர்கள் பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி என்பார்கள்.

---

1. பேகன்.

இவன் இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரமாண்டு கட்குமுன் நம் தமிழ் நாட்டில் விளங்கியிருந்தவன். இவன் வாழ்ந்த நாடு ஒருமலை நாடாகும்: அதன் பெயர் இன்னதென்று புலப்படவில்லை. எனினும் அது ஒரு சிறந்த நாடு என்பதில் ஐய மில்லை. அந்நாட்டில் வாழ்வோர் பெரும்பாலார் குறவர்களாதலின் அவர்கள் தங்களுக்குரிய ஒழுக்கம், தொழில் முதலியவற்றைக் கைகழுவாது காத்துவந்தனர். இக்காலத்துப் பர்மியர்கள் போல, இவன் கீழிருந்த குறமக்கள், மழை வேண்டியகாலத்து,

அதை நோக்கிமேகங்கட்குப்பலியிட்டு விழாவெடுத்து வணங்குவதும், அதுமிகைபடப்பெய்தகாலத்து, "இனி மழை வேண்டிற்றில்லை" என்னுங்கருத்தால், அதனைநோக்கிப்பூசனையியற்றுதலும் செய்வார்கள். இந்நாட்டு மலைச்சாரல்களில் அவர்கள் வயல்கள் வகுத்துத் தினைவித்திப்பயிர் செய்வார்கள். அவர்களுக்கு உணவாவதும் அத்தினையே. இது, பின்வரும், கபிலர் பாடலால் நன்கு விளங்கும்:-

> "மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்
> மாரியான்று மழைமேக் குயர்கெனக்
> கடவுட் பேணிய குறவர் மாக்கள்
> பெயல்கண் மாறிய உவகையர் சாரற்
> புனத்தினை அயிலும் நாட ... ... " (புறம்-143)

இங்ஙனம் குறமக்களின் ஒழுக்கத்தானும் தொழிலானும், பெருவளனெய்திச் சிறப்பு நனியோங்கிய பேகனாட்டிற்கு மணிமுடி போன்ற மாடங்கள்மலிந்த அழகியநகர் ஒன்றைத்தன் இருப்பிடமாக்கொண்டு பேகன் காவற்றொழில் செய்து வந்தனன்.

அந்நகரத்தை நல்லூர் என்பாருமுளர். அதனைச் சுற்றிலும் வெயில் நுழைபுஅறியாக் குயில் நுழை பொதும்பரும், அதன் புறத்தே செருப்புகன்று எடுத்த சேணுயர் நெடுங்கொடி விளங்கும் வானளாவிய மதிலும் இருந்தன. அதற்கருகில் ஆழ்ந்தகரிய நீருற்ற அகழும், கடிமிளையொன்று மறுபுடைவிளங்க இருந்தது. இக்கூறியவற்றோடமையாது, இந்நகரைச் சுற்றிலும், மாயோனன்னமால்வரைத்தொடர்கள் பேரரணாகவும்அமைந்துகிடந்தன. அத்தொடர்களின் சாரலில் உள்ள தினைப்புனக்காட்சி, காண்பார் கண்களுக்கு நல்விருந்தூட்ட, கருவரைவீழ் அருவிகள் தம் இழுமென்னோசையால் அவர் செவிக்குணவளித்துச் சிறப்பிக்கும்.

இங்ஙனம் மாயோன் மார் பெனத்திகழும் நகர்க்கண் உறைந்து, உயிர்காத்தோம்பும் பேகனது சீரும் சிறப்பும் நாம் அறிதல் கூடுமேயன்றி, அவனது பெற்றோர் முதலியோரது வரலாறு ஒன்றும் தெரிதல் கூடாது. எனினும், இவனைக் கூறுந்தோறும்,

சான்றோர்கள், "பெருங்கல் நாடன் பேகன்" எனவும் "வையாவிக்கோப் பெரும் பேகன்" எனவுங்கூறுப. இவனது பெற்றோர் வரலாறு தெரியாமல் ஒழியினும், இவனது குடிவரலாறாயினும் தெரியின் நலம்பயக்கும். அதனையும் பலர் பலவாறாகக் கூறுவர். ஆசிரியர் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் இவனை,

> "வானம் வாய்ந்த வளமலைக் கவாஅற்
> கானமஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
> வருந்திறலணங்கின் ஆவியர் பெருமகன்
> பெருங்கல் நாடன் பேகன் ...." என்பதனானும்

"ஆவியர் பெருமகன்" என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியாரும் "ஆவியர் குடியிற் பிறந்தவன்" எனஉரைகூறுவதனானும் இவன் ஆவியர் குடியிற் பிறந்தவன் என்பது தோன்றும்.

இங்ஙனம் தோன்றும் ஆவியர் பண்டைக்காலத்துக் குறுநிலமன்னர்களின் தொல்குடிகள்பலவினுள் ஒருகுடியினர் ஆவர். நிற்க, இக்காலத்து முருகக்கடவுளின் திருக்கோயில் நின்று திகழும் பழனி, பண்டைப் பொதினியாம் எனவும், அதனை யாண்ட ஆவியென்னும் வேளிர்குல மன்னனது வழிவந்தோரே ஆவியர் எனவழங்கப்பட்டனரெனவும், அவர்வழித்தோன்றலே நம் பெருங்கல் நாடன் எனவும் திரு. ரா. இராகவையங்கார் அவர்களும், திரு. மு. இராகவையங்கார் அவர்களும் கூறுவர்.

இனி, இவர்கூறும் ஆவியென்பான் யாவன் எனின், "ஆவி என்பான் வேளிர்குலத்தலைவருட் பழமையானவரில் ஒருவன். அகநானூற்றில்.

> "வண்டுபடத் ததைந்த கண்ணி யொண்கழல்
> உருவக் குதிரை மழவ ரோட்டிய
> முருக னற்போர் நெடுவே ளாவி
> அறுகோட் டியானைப் பொதினி" எனவும்
> "முழவுறழ் திணிதோள் நெடுவேள் ஆவி
> பொன்னுடை நெடுநகர்ப் பொதினி"

எனவும்வருதலால், இவ்வாவி வேளிர்தலைவனும் சிறந்த வீரனும் பொதினி என்னும் நகர்க்கு உரியவனுமாவன் என்பது உணரலாம்" என்பர் திரு. மு. இராகவையங்காரவர்கள்.

இங்ஙனம் ஆவியர்பெருமகனுய்த்தோன்றிய பேகனது அரிய குணங்கள் எம்மனோரால் அறிந்துகூறும் தகுதியவல்லவனினும், அவனைச்சிறப்பித்துப் பாடப்பெற்றுள்ள சான்றோர்களது செய்யுட்களினின்றும் வெளியாமவற்றை மட்டில் எடுத்துக்கூறுதும். இவன் கற்றோரையாதரிக்கும் கல்வியறிவும், தனக்கெனவாழாப் பேரருளுடைமையும், இரப்போர்க்கு இல்லையென்றது அவர்கள் வேட்டவையனைத்தும் ஈத்துவக்கும் பெருவள்ளன்மையும், மாற்றாரைவென்ற மாயாப்புகழும், மறமும் உடையவன். இவற்றோரன்ன பெறலருங்குணங்கள் வாய்ந்தமை காரணமாக, இவன் புலவர்பாடும் புகழ்கொண்டனன். பரணர், கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் முதலிய நல்லிசைப்புலவர் பெருமக்களை நன்குமதித்து, அவர்கூறும் பொருளுரைகளைப் பொன்னேபோற்போற்றி, அவற்றிற்குத் தக நின்றனன்.

இவனது தனக்கென வாழாப்பேரருளுடைமை பின்வருவ நிகழ்ச்சியிற் றெற்றெனத்தோன்றும்: பேகன், தன்வாழ்நாள் ஒன்றில், மாலையுலாவருங்காலத்தில், ஒரு பெருமரத்தின் உச்சியில், சிறிய கிளையின்மேல் மயிலொன்று தன்கோலக்கலாபத்தை விரித்து ஆடியகவிநிற்கக் கண்டான். இயற்கையிலேயே குளிர்மிகுந்தது அம்மலைநாடு எனினும், அன்று வாடையும் பெருமிதத்துடன்வீச, அக்குளிர் தன் இயற்கையினும் மிகுதிப்பட்டது. தாங்கற்கரிய குளிரையுணர்ந்தபேகன், மயில் அகவுதலைக்காண்டலும், "ஆ! இம்மஞ்ஞைக்குக் குளிரின்மிகை நோய்செய்ததுபோலும்! எத்தகையகுளிர் வரினும் ஏற்றுக்கொள்ளற்குக் கருவியாக யான் போர்வைகொண்டுள்ளேன். இம்மஞ்ஞைக்குப் போர்வையொன்றும் இலது. ஆகலின், இது எவ்வாறு இக்குளிர்க்கு ஆற்றும்; அழகியகலாபம் கொண்டிருப்பினும், இது இக்குளிரைத்தாங்குதல் அருமையே; விரைந்து சேறற்கு

வலியகால்களும், உற்றநோய்ப் பொறுக்கும் உரனும், பிறர்க் குறைத்து மாற்றிக்கொள்ளும் சொல்வன்மையும் பொருந்திய யான், இவற்றுள் ஒன்றுமில்லாத மஞ்ஞையைக்கண்டும், அது வருந்த வாளாவிருத்தல் அறமன்று அதற்குயான் இயற்றவல்ல உதவியாதாகும் ? ''எனப்பலவாறெல்லாம் எண்ணிப் பின்னர்த் தன் போர்வைதந்தாயினும், மஞ்ஞையின் குளிரைப் போக்கு தலே சால்பு என முடிபுசெய்தனன். மற்று, அப்போர்வை தோகைவிரித்து நின்றமயிலுக்குப்போதாது. ஆயினும், அப் போர்வையைத்தந்து, மஞ்ஞையின் குளிரைப்போக்குதலையே தான் செய்யக்கூடிய உதவியாகக்கருதியபேகன், அதனை அம் மஞ்ஞையிருந்த மரத்தின்கண் வைத்துத் தன்னகம்சேர்ந்தனன் ஒரு பெரியமலைநாட்டுத்தலைவன், ஒன்றுக்கும் பற்றாதமயிலொன் றின் குளிருக்காகப்பரிந்து, தன்னையோம்பாது, தன் ஒரேபோர் வையைத் தருதலினும் பேருதவியாதுளது? இவ்வொரு நிகழ்ச் சியே, அவன், ஒரு காரணமின்றியும் பிறவுயிர்கண்மேல் அன்பு செலுத்தி அவற்றிற்கு ஆவனசெய்யும் அருளுடையவன் என் பதை வலியுறுத்தும். இந்நிகழ்ச்சியே, இவனைப்பாடிப்புகழ்ந்த ஒவ்வொரு சான்றோர் செய்யுளிலும் மணியெனத்திகழ்வது. இத னைப் பரணர் பாடலில்,

> "உடாஅ போரா ஆகுத லறிந்தும்
> படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ
> கடாஅ யானைக் கலிமான்பேகன்" எனவும்

> "மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
> படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்
> கடாஅ யானைக் கலிமான் பேக!" எனவும்,

இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனர் பாடிய சிறுபாணாற்றுப் படையில்,

> "வானம் வாய்த்த வளமலைக் கவாற்
> கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
> அருந்திற லணங்கின் ஆவியர் பெருமகன்
> பெருங்கல் நாடன் பேகன்" எனவும்,

ஐயனாரிதனார் பாடிய புறப்பொருள் வெண்பாமாலையில்,

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
ஒல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்—தொல்லை
இரவாம லீந்த இறைவர்போ னீயுங்
கரமவாம லீகை கடன்" எனவும்

வருதல் காண்க.

இனி இந்நிகழ்ச்சியினின்றும் வெளியாகும் இவனது அரிய குணங்களுட் சிலவருமாறு:—

உடாஅபோரா ஆகுதலறிந்தும், மஞ்ஞைக்குப் படாஅம் ஈந்தனன் இப்பேகன் என்றதனால், இவன் தனக்கு எத்துணைத் துன்பம்வரினும், அத்துணையும் பொறுத்துப்பிறர்க்கு உறும் துன்பத்தைநீக்குதலையே பெருங்கடனாகக் கொண்டிருந்தானென் பதும்; எனவே, அவன் தனக்கொன வாழாப் பிறர்க்குரி யாளன் என்பதும்; கலாபம் விரித்துக்களிமயிலகவக்கண்டு, அது அங்ஙனம் செய்தல், குளிர்க்காற்றுமையினால் எனத் தன்னிலையில் அதனை நிறுத்திதான் குளிரான் வருந்தினமையே அதன்வருத்தத் தைத்தெரிவிக்கும் கருவியாகக் கொண்டனன் என்பதனால் இவன் தன்னுயிரேபோல் மன்னுயிரையும் ஒப்பநோக்கும் உளத்தினன் என்பதும்; உற்றநோய் நோற்றலன்றிப் பிறர்க்கு உரைக்கும் ஆற்றல் அம்மஞ்ஞைக்கில்லை யெனவும், அதனைச் செய்யவல்லார் மக்களேயெனவும், அவர்கட்கு அவ்வாற்றலை இறைவன் தந்த ருளியது அஃதில்லாத உயிரையாதரித்தற்கென்னும் செம்பொரு ளையறிந்த பெரும் புலவன் இவன் என்பதும் பிறவுமாம்.

இக்கூறியவாற்றால் அவன் பெரும்புலவன் என்பது முடிந் தவாறுபோல, இவன் வரலாற்றினைவிதந்துகூறும் சான்றோர் செய்யுட்களைநோக்கின், இவன் அவற்றின் உட்பொருளையறிந்து அவற்றைப்பாடிவரும் புலவர்களின் பெருமைக்குத்தகப் பரிசில் நல்கும் திறமுடையவன் என்பது புலனும்; தன்னினும் ஒப்பாரு மிக்காருமாய புலவர்பெருமக்களை உடன் இருத்திப்புரத்தலும் செய்பவன் இவன் என்பது கூறுமலேயமையும். இவன்காலத்தில் இவனாற்புரக்கப்பெற்ற புலவர்கள் பலருட் சிறந்தவர் கபிலர்,

பரணர், வன்பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் முதலியோராவர்.

நிற்க, இவன் இரவலர்க்கீயும் திறத்தைச் சிறப்பித்துக் கூறவல்லவர் இவன் காலத்துச் சான்றோரேயன்றிப் பெரும்புலவர்களுமாவரோ தவிர என்னெப்பார் கூறுதல் இல்லதுபுனைதலும், வெளிற்றுரைகளுமாம். ஆகவே, சான்றோர் செய்யுட்களையே கருவியாகக் கொண்டுபின் கூறுகின்றேன்.

இவன் தன் வாழ்க்கையில் கொண்ட ஒரு பெருங்கொள்கை "எத்துணையாயினும் இரப்போர்க்கு ஈத்தல் நன்று" என்பது. அதனால் இவன்,

"வல்லார் வல்ல கலைஞருக்கும்
மறைநூ லவர்க்கும் கடவு ளர்க்கும்
இல்லா தவர்க்கும் உள்ள வர்க்கும்
இரந்தோர் தமக்கும் துறந்த வர்க்கும்
சொல்லா தவர்க்கும் சொல்ப வர்க்கும்
சூழும் சமயா திபர்க ளுக்கும்
அல்லா தவர்க்கும்"

வேண்டியவற்றை அவரவர்கள் எல்லாம் ஆரநல்கிய அருளாளன் என்பது வெளியாகும். இவனது கொடைச்சிறப்பைமட்டில் கண்டு உவந்த பரணர் "கடல்நீர் உண்டுவந்த கரியமேகம், நீரற்ற குளம்இது; நீரின்றமையாத வயல் நிலமிது நீர்வேண்டுதலில்லாதகளர் நிலமிது எனவும் இன்னோரன்ன பிறவும் ஆராயாது யாண்டும் ஒருதலையாக மழை பொழிவதையொப்ப, இப்பேகன் பல்வேறு வகையினராய்வரும் இரவலர்க்கும் பரிசிலர்க்கும் வரையாது வேண்டிய வேண்டியாங்கு ஈத்து உவந்தனன். இதனால் இவனிடத்துத்தான் பொருளீயப்பெற்றாரை யறியாத மடமையைத் தவிர வேறெத்தகைய மடமையையுங் காண்டல் அரிது "என்பர். அன்றியும், இவன் இங்ஙனம் இரப்போர்க்கு வரையாது கொடுத்து மாயாப்புகழ் தேடிக்கோடல் எப்பொருள் நாடியோவெனும் ஓர் ஐயம்பாவருக்கும் இயற்கையாகவே எழும். அதனையறுத்தலும் தன் கடனும் என்றெண்ணியே இப்

பரணர், "இவனது கைவண்மை, ஏனை ஈவார்விழையும் புகழும், உயரியமறுபிறப்பும் நோக்கியதன்று. மற்று, அது மன்னுயிரைவருத்தும் வறுமையைத் தீர்த்தலையே நோக்கியது," என்றருளினர். இவ்வனைத்தும் நுணுகிநோக்குமிடத்து, இவனது மனம், "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் பெரியார் மூதுக்குறை முதுமொழியின் கருத்தையே கொண்டது என்பது தோன்றும்.

ஆங்ஙனம், இவன் மன்னுயிர்மாட்டுப் பேரன்பு பூண்டு நண்பென்னும் நாடாச்சிறப்பு எய்தினன் எனினும், இவன்கருத்தறியாத மக்கள் வீணே அழுக்காறு கொள்வதியற்கை. அதனால், அவர்கள் இவனோடு பொருதலும்கூடும். ஆயினும், அங்ஙனம் பொரவருவாரைவென்று, தன் அறத்திற்கு ஈறுண்டாகாவாறு காத்துக்கோடற்கு ஏற்ப, இவன் அறனிழுக்கா ஆண்மையும், பகைக்கஞ்சா மறமும், பிறவும் நன்கு கொண்டவன். பகைவருடன் வெகுளிபொரச் செருச்செய்யுங் காலத்திலும், இவன், அப்போர்க்குரிய அறநெறிகளைக்கைவிடான்; மறந்தும் இவன், அவற்றைக்கைவிடும் மடமையெய்தான் என்பதனைப் பரணர் "கொடைமடம் படுதலல்லது, படைமடம் படான் பிறர்பிறர் படைமயக்குறினே" என அழகுபடக்கூறுவர். மேலும், இவனைச், சான்றோர்கள் கூறுந்தோறும் "கடாஅயானைக் கலிமான் பேகன்" (141) எனவும், "அடுபோர்ப்பேக" (146) எனவும், "வரூஉம் என்ப வயங்குபுகழ்ப்பேகன் ஒல்லென வொலிக்கும் தேரொடு" எனவும் கூறுதல் வழக்காதலின், இவன் எண்ணிறந்த மதயானைகளும், மிகப்பல குதிரைகளும், அளவில்லாத தேர்களும், கழற்கால் வீரர்களும் உடையவன் என்பது தோன்றும்.

இவற்றோடமையாது, எல்லாவுயிர்க்கும் ஒப்பஇன்பமூட்டும் இசையில் இவன் மிக்க விருப்புடையவன். இவனைப்பாடிப் புகழ்ந்துவரும் புலவர் பெருமக்கள்,

"களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்
நயம்புரிந் துறையுநர் நடுக்கப் பண்ணி

அறஞ் செய்தீமோ அருள் வெய்யோய்" என்பதனுனும், (145)

சீறியாழ் செவ்வழி பண்ணிநின் வன்புல
நன்னாடு பாட என்னை நயந்து
பரிசில் நல்குவை யீயின், குரிசில்!" (146) என்பதனுனும், இவன் இசைப்புலமையும் மிக்கவன் என்பது வெளியாகும்.

இது காறுங்கூறியவாற்றால், பேகன் எல்லாவுயிர்களிடத்தும் பேரன்பு பூண்டவன் என்பதும்; இவனது அன்பிற்குப் புல்லு மொன்றே புத்தேளிருமொன்றேயென்பதும், தன்நோய் போற் பிறிதின் நோய்போக்கும் பேரறிவுசான்ற பெருந்தகையென்பதும்; கற்றாரைப்போற்றும் காவலன் என்பதும்; மறம் நிகழினும், அறம்வழுவாதவன் என்பதும்; கல்லும் புல்லும் கனிந்துருகப்பாடும் யாழ் வல்லன் என்பதும் நாம் அறியக்கிடந்தன.

(தொடரும்)

வரலாற்றுமொழி யாராய்ச்சி விளக்கம்.

திருவாளர் சோமசுந்தர முதலியாரவர்கள், கரந்தை.

சென்ற ஐப்பசித்திங்கட்டமிழ்ப்பொழிலின்கண் வரலாற்று மொழிகள் என்ற தலைப்பெயரின் கீழ் 'ஒன்பது' என்னும் சொல், காரணம் வெளிப்பட்ட தொடர்மொழி என்றும், பத்திற்கும் எட்டிற்கும் இடையே உள்ள அது பத்தின் முன்னது, அல்லது ஒன்றொழிபத்து என்று பொருள்படுமென்றும், அங்ஙனே பத்துப் பத்தாக வெண்ணுமிடத்து நூற்றின் முன்னது தொண்ணூறு, நூறு நூறாக எண்ணுமிடத்து ஆயிரத்தின் முன்னது தொள்ளாயிரம் என ஆயினவென்றும், அவ்வாறன்றி ஒன்பதும் பத்தும் புணரத் தொண்ணூறும், ஒன்பதும் நூறும் புணரத்

தொள்ளாயிரமும் ஆயின என்னும் பொருந்தாப்புணர்ச்சிவிதிகள் தொல்காப்பியத்தில் இடைச்செருகப்பெற்றிருத்தல் வேண்டு மென்றும், ஒன்றுமுதல் எட்டுவரையும் உள்ள எண்களுக்கும் பத்துக்கும் தனிப்பெயர் இருப்ப, ஒன்பதுக்கு மாத்திரம் பத்தின் தொடர்புள்ள காரணப்பெயர் இருப்பதற்குக் காரணம் தமிழ்மக்கள் ஓர் காலத்து எட்டை இறுதி எண்ணாகக் கொண்டிருந்தனரென்றும், பின்னர் அவர்கள் பத்தை இறுதி எண்ணாகக் கொண்ட காலத்து எட்டிற்கு இடையே உள்ள எண்ணைப்பத்தின் முன்னது என்றுண்டிருத்தல் வேண்டுமென்றும் யாம் கூறியதை மறுக்குமுகத்தானே நண்பர் நாட்டாரவர்கள் எழுதிய கட்டுரையைக் கண்ணுற்றேம். எட்டு இறுதி எண்ணாகவிருந்தது என்பதற்கு யாம் காட்டிய சான்றுகளையே அடிப்படையாகக் கொண்டு நிலைநிறுத்துதல் இயலாததொன்றென்றும், பழய நூல்களிற் றக்க சான்றுகள் காணப்பட்டாலொழிய இக்கொள்கை நிலைக்குமாறில்லை யென்றும் கூறியுள்ளார்கள். தொல்காப்பியர் காலத்திலே ஒன்பது பத்து முதலிய எண்கள் காணப்படுமாயின் அவைகள் காணப்படாது எட்டொன்று ஈரெட்டு முதலிய வழங்கிய காலம் தொல்காப்பியத்திற்கு முன்னென்று அன்றோ பெறப்படுகின்றது. தொல்காப்பியத்திற்கு முந்திய நூற்கள் உளவெனிலன்றோ அந்நூற்களிலிருந்து சான்றுகள் காட்டக் கூடும். ஆதலின் யாம் காட்டிய சான்றுகளைக்கொண்டே உய்த்துணர வேண்டியதன்றி வேறு ஒன்றும் செய்யுமாறில்லை. அன்றியும் எட்டு இறுதி எண்ணாயிருந்ததெனக் கொள்ளிற்றான் ஒன்பது பத்தின் முன்னது அல்லது ஒன்றொழி பத்து என்று பொருள்படும் என்பது இல்லை. தமிழோடு இயைபுடைய தெலுங்கு மொழியில் ஒன்பது தொம்மதியெனவும், தொண்ணூறு தொம்பை என்றும், தொள்ளாயிரம் தொம்மதி நூறெனவும் வழங்கிவருகின்றனவென்றும் தொம்மதி என்னும் சொல்லில் பத்தின் இயைபு காணப்படுகிறதேயன்றி, தொம்பை, தொம்மதி நூறு இச்சொற்களில் முறையே நூற்றின் இயைபும், ஆயிரத்தின் இயைபும் காணப்படவில்லை என்றும் கூறுகின்றார்கள். இவ்விருசொற்களிலும் இயைபு காணாத காரணத்தால் இயைபு

கண்டவிடத்துக் கொள்ளாது விடுத்தல் தருக்கமுறை அன்று. தமிழும் தெலுங்கும் பிரிந்த காலத்திற்குப் பின்னரே பத்தின் பெருக்கெண்களை அவ்வம்மொழி மக்கள் தனித்தனியே அமைத்துக்கொண்டிருத்தல் சாலும். தொல்நூறம், தொல் ஆயிரமும் முறையே தொன்னூறும், தொல்லாயிரமுமாய்ப் பின்னர்த் தொண்ணூறும் தொள்ளாயிரமும் ஆதலைவிடத் தொள்நூறும், தொள் ஆயிரமும் நேரே தொண்ணூறும் தொள்ளாயிரமும் ஆயினவென்று கூறுதல் எமக்கும் உடம்பாடே. அப்பொருளுளதாதலை ஒன்றொழிபத்து என்ற விடத்தும் குறிப்பித்திருக்கின்றோம். அம்முறையே பற்றி தொள்பத்து என்பது தொன்பது என்றாதல் வேண்டும்.

அங்ஙனம் இடரின்றி ஆதல் காண்கிலம். அன்றியும் நாட்டாரவர்கள், தொல் நூறு தொல் ஆயிரம் என்று கொள்ளின் புதிய நூறு புதியவாயிரம் என்னும் கடாக்களை எழுப்பும் என்று ஓர் ஆசங்கை நிகழ்த்துகின்றார்கள். தொள் நூறு தொள் ஆயிரம் என்பன தொள்ளாநூறு தொள்ளாவாயிரம், நிறை நூறு நிறையாயிரம் என்ற கடாக்களை எழுப்பும் என்பதை மறந்தனர் போலும். இவ்வாறே ஒன்பது என்னும் பெயருக்கு வரலாறு கூறுவது இயலாததாகின்றது என்று கூறுகின்றார்கள். மேற்கூறிய முறையில் தொண்ணூறும் தொள்ளாயிரமும் கொண்டு அவற்றிற்கு அடிப்படையான ஒன்பதைக் கொள்ளாத காரணம் அத்துணை வலியுள்ளதாகத் தோன்றவில்லை. இனி நாட்டாரவர்கள் ஒன்பது, மற்றொரு பெயராகிய தொண்டு என்பது சங்கநூல்களிலும் பிற்றை நூல்களிலும் பயின்றிருத்தலால் பழமையான ஒரு சொல்லென்று கொள்ளப்படும் என்றுகூறி "எட்டெனத்தொண்டென" எனவரும் பரிபாடலை எடுத்துக்காட்டுகின்றார்கள். பரிபாடற்றொகை அமிர்து, வச்சிரம், ஆராதனை, சலதாரி, மார்க்கம், சனம், சோபானம், சருமம் முதலிய வடசொற்கள் மலிந்த பிற்கால நூலெனத் தோற்றலின் அதுகொண்டு பழயநூற்கண் எடுத்தாளப்பட்டிருக்கின்றதென்று கூறவியலாது.

ஆயினும் தொல்காப்பியரே செய்யுளியலில்,

"மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே
ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொண்டுதலை யிட்ட பத்துக்குறை எழுநூற்
றொன்பஃ தென்ப வுணர்ந்திசி னோரே." என்று

சூத்திரம் செய்துள்ளார். ஈண்டுத்தொண்டென்பதற்கு உரையாசிரியர் ஒன்பதென்று பொருளெழுதி யிருப்பினும், எழுநூற்றொன்றுமென்ப என்று பாடம் திரித்துத் தொடைகளின் எண்ணை வேறுகொள்வாருளராதலின் தொண்டை ஒன்பதென்றே ஆசிரியர் பொருள்கொண்டனரென்று உறுதியாகக்கூறுதல் இயலாது. இனி நாட்டாரவர்கள் தொண்ணூற்றிற்கும் தொள்ளாயிரத்திற்கும் கூறியவாறே தொண்டு என்பதற்கும் வரலாறு கூறுதல் எளிதாகின்றது என்று கூறித் தொள்பது, தொள்து தொண்து தொண்டெனஆயிற்றென்கின்றார்கள். இதுவும் நலிந்து கொள்ளும் புணர்ச்சியே யன்றி இயல்பாகப்புணரும் புணர்ச்சியன்று. தொல்பத்து தொன்பதாதலைவிடத் தொள்பத்து தொண்டாதல் எளிதன்று. இவ்வாறு தொண்டு என்பது ஒன்பதை உணர்த்துமாயின் தெலுங்கிற்போன்று தொண்டுநூறு அல்லது தொண்ணூறு என்பது ஒன்பது நூறுகொண்ட தொள்ளாயிரத்தை உணர்த்தவேண்டும். அவ்வாறு உணர்த்துதல் இன்று. தொண்டு என்பது வழக்கின்கண் குறைவைக்குறிக்கும் தொட்டி என்பதன் சிதைவு எனத் தோன்றுகின்றது. தொண்டுபத்து என்பதே தொம்பது என்று புணர்ந்து தமிழ் மொழியில் பேச்சு வழக்கில் ஒன்பது என்றும் தெலுங்கில் தொம்மதியென்றும் ஆயினவென்பது தோன்றுகின்றது. தொண்டு பத்தென்பதே பத்துக்குறைந்து தொண்டு எனச் செய்யுள் வழக்கிலும் உலகியல் வழக்கிலும் வந்திருத்தல் கூடுமெனத் தோன்றுகின்றது.

இனி ஒன்பது, பத்து நூறுடன் புணர்வதற்குத் தொல்காப்பியத்திற்காணப்படும் சூத்திரம் இடைப்பெய்ததுஅன்றெனவும் தொல்காப்பியரே கூறியதெனவும் நாட்டாரவர்கள் சாதிப்பதைச் சிறிது ஆராய்வாம். இச்சூத்திரம் என்று யாம் ஒருமையில் எழுதியது "ஒரு பொருணுதலிய சூத்திரத்தானும்" என்ற பொருளிலாதலின் யாம் குறித்துள்ள எண்வகையால் இரண்டு

சூத்திரங்களோடுமன்றி நாட்டாரவர்கள் குறிக்கும் "ஒன்று முதல் ஒன்பான்" என்னும் சூத்திரத்தையும் உள்ளடக்கும் என்க.

"ஒன்று முதலாக வெட்ட னிறுதி
எல்லா வெண்ணும் பத்தன் முன்வரின்
குற்றிய லுகரம் மெய்யொடுங் கெடுமே
முற்ற வின்வரூஉ மிரண்டலங் கடையே"

என்று பத்தென்னும் எண்ணுப்பெயர் நிலைமொழியாக எட்டு இறுதியாக உள்ள எல்லா வெண்ணொடும் புணர்வதற்குச் சூத்திரம் செய்து பத்து ஒன்பதோடு புணர்வதற்குச் சூத்திரம் செய்யாது விடுத்த வாசிரியர் பின்னர் ஒன்றுமுதல் ஒன்பது ஈறாக நின்ற எண்களைப் பத்தோடு புணர்வதற்குச் சூத்திரம் செய்யத்தக்கவேது ஒன்றும் காண்கிலம். ஓர்கால் பத்தின் பின்னர் ஒன்பது புணரின் பத்தொன்பது என்று குற்றுகரம் கெடுதல் தவிர பிற வேறுபாடுகள் இலவாதலின் தனிச்சூத்திரம் செய்யாது விடுத்தார் என்று கொள்வோமெனின்,

"முதலீ ரெண்ணின்மு னுயிர்வரு காலைத்
தவலென மொழிப வுகரக் கிளவி"
"ஆயிரக் கிளவி வரூஉங் காலை
முதலீ ரெண்ணி னுகரங் கெடுமே" என ஒன்றுக்கும் இரண்டுக்கும் தனிச்சூத்திரம் செய்தல் வேண்டா. அன்றியும் முன்மொழிந்து கோடலாகக் கூறிய

"ஒன்றுமுத லொன்பா னிறுதி முன்னர்
நின்ற பத்த னொற்றுக்கெட வாய்தம்
வந்திடை நிலையு மியற்கைத் தென்ப
கூறிய வியற்கை குற்றிய லுகர
மாற னிறுதி யல்வழி யான." என்னும் சூத்திரத்தில் கண்ட ஒன்றுமுதல் ஒன்பது வரையிலுள்ள எண்களின் செய்கை கூறப்புகுந்து "மூன்றனொற்றே பகாரமாகும், நான்கனொற்றே றகாரமாகும், ஐந்தனொற்றே மகாரமாகும்" எனக்கூறிப் போந்த ஆசிரியர் ஒன்பதின் செய்கை கூறாது விடுத்தல் எற்றுக்கோ

என்று வினவுகின்றார்கள். அவர்கள் கூறிய சூத்திரங்களால் மூன்று, நான்கு ஐந்துக்கும் "மூன்றுமாறும் நெடுமுதல் குறுகும்" என்னும் சூத்திரத்தால் ஆறுக்கும் "எட்டனொற்றேணகாரமாகும்" என்னும் சூத்திரத்தால் எட்டிற்கும் செய்கை கூறிவந்த ஆசிரியர் ஏழிற்கு மாத்திரம் என் கூறாது விடுத்தனர் என யாமும் வினவுகின்றாம். ஏழ குற்றியலுகர வீறன்மையின் உருபியலுட் காண்க என உரையாசிரியர் கூறுகின்றனர். ஒன்பதும் அஃதே. ஒன்பது குற்றியலுகரமின்மையின் அது பிற எண்களோடு நிலைமொழியாய் நின்று புணர்வதற்குக் குற்றியலுகரப்புணரியலில் சூத்திரம் செய்ப இயைபு என்னென்று அறியுமாறில்லை. ஒன்பது குற்றியலுகரமாமாறு பின்னர்க்காட்டுதும். இதுகாறும் கூறியவாற்றால் ஒன்பது பிற எண்ணுப்பெயர்களோடு புணரும்புணர்ச்சி குற்றியலுகரப் புணரியலுக்கு வேண்டா விலக்கணம் என்பது பெறப்பட்டது. அன்றியும் "ஒன்று முதலொன்பானிறுதி என்னும் சூத்திரத்தில் கூறியபடி ஒன்றுமுதல் எட்டு எண்கள் அடைகின்றதா என்று சிறிது ஆராய்வாம். வருமொழியாகிய பத்து பஃதாகின்றது. ஒன்பதின் ஈற்றுகரம் குற்றுகரமாக வைத்துக்கொண்டால் அது கெடுதல் வேண்டும். இது கெட்டதின் பின் எஞ்சியது நிலைமொழியில் **ஒன்ப** என்பதும் வருமொழியில் **பஃது** என்பதுமாகும். இவ்விருமொழிகளையும் கொண்டு சிறப்பு விதிச் சூத்திரமாகிய,

> "ஒன்பா னொகரமிசைத் தகர மொற்று
> முந்தை யொற்றே ணகார மிரட்டும்
> பஃதென் கிளவி யாய்த பகரங்கெட
> நிற்றல் வேண்டு மூகாரக் கிளவி
> யொற்றிய தகரம் றகர மாகும்"

என்னும் சூத்திரத்திற்கண்டபடி புணர்த்திக்காட்டுவாம்.

உரையாசிரியர் பொருள் கண்டபடி:—

ஒன்பது என நிறுத்திப்பஃது எனவருவித்து முடிக்குங்கால்

ஒன்பது + பஃது.

நிலைமொழியாகிய ஒன்பது என்னும் எண்ணினது ஒகரத்திற்கு முன்னாக ஒரு தகரவொற்று தோன்றி நிற்கும்.	தொன்பது + பஃது
முன் சொன்ன ஒகரத்திற்கு முன்னர் நின்றனகரவொற்று ணகர வொற்றாக இரட்டித்து நிற்கும்.	தொண்ண்பது + பஃது
வருமொழியாகிய பஃதென்னும் சொல் தன்கண் ஆய்தமும் பகரமும் கெட்டுப் போக	தொண்ண்பது + து
நிலைமொழியில் இரட்டிய ணகரத்தின்பின்னர் ஊகாரமாகிய எழுத்து வந்து நிற்றலை ஆசிரியன் விரும்பும்.	தொண்ணூபது + து
வருமொழியாகிய பத்தென்பதன் ஈற்றின் மேலேறிய உகரம் கெடாது பிரிந்து நிற்பத் தகரம் றகர ஒற்றாய் நிற்கும்.	தொண்ணூபது + று

இவ்வுரைப்படி தொண்ணூறு ஆதற்கு இடைநின்ற பது ஒழிய விதி காண்கிலம்.

மற்றோருரை மேற்கூறியவற்றோடு பகரவாய்த மென்னாத முறையன்றிக் கூற்றினான் நிலைமொழிக்கட்பகரமும் ஆய்தமும் கெடுத்துக் குற்றிலுயகரம் பெய்யொடுங் கெடுத்து என்றிருத்தலின் அவ்வுரைப்படிகொள்ளின் நிலைமொழி ஒன்பது என வைத்துக்கொள்ளின் நிலைமொழிக்கண் ஆய்தம் பெறுமாறில்லை. முன்னுரையில் பஃதென் கிளவியாய், பகரங்கெட என்பதற்கு வருமொழியாசிய பஃதென்னும் சொர்ல் தன்கண் ஆய்தமும் பகரமும் கெட்டுப்போக என்று பொருள்கொள்ளாது நிலைமொழியாகிய பஃது என்னும் சொல்லும் வருமொழியில் ஆய்தமும் பகரமும் கெட பொருள்கொள்ளின் தொண்ணூறு என்றாகும். அப்பொருள்கொள்வதற்கு நிலைமொழியை ஒன்பஃது என வைத்துக்கொள்ளல் வேண்டும். இப்படிக் கொள்ளின் குற்றியலுகரம் மெய்யொடும் கெடுக்கவேண்டியதில்லையாகும். அப்படிக் கெடுக்க வேண்டியதில்லையாகின் "ஒன்று முதலொன்பானிறுதி முன்னர்"

என்னும் சூத்திரத்தில் "கூறிய வியற்கைக்குற்றிய லுகர-மாறொ டொன்பதல் வழியான" என்றிருத்தல் வேண்டும் அன்றியும் நிலைமொழியை ஒன்பஃதென நிறுத்துவதற்குச் சூத்திரமின்மை நோக்கி மயங்கினர் போலும்! அன்றியும் ஒன்பது என்று நிறுத்துவதற்குச் சூத்திரம் யாண்டுக்கண்டனரோ அறியோம். தொல்காப்பிய முழுதும் ஒன்பான், ஒன்பஃது என்று வழங்கப்பெறுகின்றதேயன்றி ஒன்பது என்று யாண்டும் வழங்கக்காணிலம். ஆதலால் "ஒன்பானொகரமிசைத்தகரமொற்றும்" என்னும் சூத்திரத்துக்கு நிலைமொழி ஒன்பஃது என்றே கொள்ளல் வேண்டும். இது காறும் கூறியவாற்றால் இச்சூத்திரத்துக்கு உரையாசிரியர் கூறிய உரை பொருந்தாவுரை யெனத்தெற்றெனப் புலப்படும். ஆதலால் இதுகொண்டு நச்சினர்க்கினியர், இளம்பூரணர் முதலியோர் உரையன்றெனத்தெளிதல் வேண்டுமேயன்றித் தமிழிலக்கண நுட்பங்களை அறிந்த பெரியார் உரைகாண வியலாதுதவறினர் என்று கொள்ளுதல் கூடாது. இச்சூத்திரங்கள் உரைச்சூத்திரங்களாக உரையாசிரியர் சேர்த்திருத்தல் வேண்டும். பின்னுள்ளார் உரைகாண வியலாது தடுமாறினராதல் வேண்டும். "ஒன்றுமுதல் ஒன்பா னிறுதிமுன்னர்" என்ற சூத்திரமும் "ஒன்று முதல் எட்டனிறுதி முன்னர்" என்று தொடங்கியிருத்தல் வேண்டும். உருபியலில்

"ஒன்று முதலாகப் பத்தூர்ந்து வரூஉ
மெல்லாவெண்ணும் சொல்லுங்காலை
யானிடை வரினுமானமில்லை
யஃதென் கிளவி யாவயிற்கெடுமே
யுய்தல் வேண்டும் பஃகான் மெய்யே"

என்னும் சூத்திரத்தால் ஒன்றும் பத்தும் புணர ஒருபஃதாவதோடு ஒன்பஃதும் ஒன்பானும் நேரே கொள்ளாது "சொல்லுங் காலை" என்றதனல் பத்தூர் கிளவியேயன்றி "ஒன்பான் முதனிலை" "ஒன்பாற்கொற்றிடைமிகுமே" என்றாற்போல் வருவனவற்றையும் கொள்க என்று உரையிற் கோடல் போன்று கொள்ளுதலும் வேண்டா.

ஒன்பது குற்றியலுகரமா முற்றியலுகரமா என்பதைச் சற்று ஆராய்வாம். "நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும், குற்றியலுகரம் வல்லாறூர்ந்தே" (மொ. ம. 34) "ஈரெழுத்தொருமொழி யுயிர்த்தொட ரிடைத்தொட, ராய்தத்தொடர்மொழி வன்றொடர் மென்றொட, ராயிருமூன்றே யுகரம் குறுகிடன்" (குற் 406) என்ற இரண்டு சூத்திரங்களால் உயிர்த்தொடர்க்குற்றுகரம் எது என்பது பெறப்படுகின்றது. உயிர்த்தொடர்க்குற்றுகரமாவது ஈரெழுத்தொருமொழியின் விலகி ஈரெழுத்தின் மிக்க குறிலிணை அல்லது குறில்நெடிலால் தொடரப்பட்ட உகரமாதல் வேண்டும். யாம் கூறியது உரையாசிரியர் காட்டும் வரகு என்னும் உதாரணத்தொடு பொருந்துமாறு காண்க. தனிக்குற்றுயிரைத் தொடர்ந்த உகரம் முற்றுகரமாதலன்றிக் குற்றுகரமாகாது. இது "குறிலிணையுகரமல்வழியான" என்ற செய்புளியற் சூத்திர உரையான்நன்கு தெளியப்படும். ஆதலாற் பது என்பதுமுற்றுகரமென்றேகோடும். ஒன்பது என்பதும் அஃதே. ஒன்பது என்ற விடத்து னகர மெய் ஒகரத்தையும் பகரத்தையும் பிளவுபடுத்தலான் குறிலிணை தொடர்ந்த உகரம் அன்றென்க. ஆகலால் குற்றுயிர் தொடர்ந்த குற்றியலுகரமென்றே கோடல் வேண்டும். பின்னும் விளக்குவாம். தமிழ்மொழியெல்லாம், பெரும்பாலும் ஒரு மாத்திரையிற்குறைந்த மெய்யெழுத்து குற்றியலுகரம் முதலியன அலகு பெறுவிடத்து ஈரெழுத்தின் மிகா என்பது "ஓரெழுத்தொருமொழி யீரெழுத்தொருமொழி, யிரண்டிறந்திசைக்குந் தொடர் மொழியுளப்பட, மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே" என்ற சூத்திரத்தை நேரே பொருள் காண்பார் யார்க்கும் விளங்கும். அங்ஙனம் கொண்ட ஒரு மொழிக்கண் இயல்பாக இருமாத்திரையுள்ள நெடிற் பின்னும் வரும் வன்மை ஊர்ந்த உகரம் குறைதல் இயல்பு. இவ்விதிகொண்டு நோக்கின் சில சொற்களை ஆன்றோர் குற்றுகரமென்றும் அன்றென்றும் கூறுதல் எற்றுக்கென்று தெள்ளிதிற் புலனும்.

"நெடிலே குறிலிணை குறினெடிலென் றிவை
யொற்றொடு வருதலொடு குற்றொற் றிறுதியென்
றேழ்குற் றுகரக் கிடனென மொழிப"

எனப் பல்காயனார் கூறிய வகையில் நோக்கினும் ஒன்பது என்னும் அது குற்றுகரமாகாமைகாண்க. நன்னூல் விருத்தியுரை யுடையார் பல்காயனார் கொள்கையை "ஒன்பது முதலாயின குற்றுகரமாகாமையிற் கொள்ளற்பாற்றன்றென மறுத்தல் ஒன்பது குற்றுகரமா அன்றாவெனவாராயுமிடத்து ஒரு சிறிதும் பயன் படாதெனக் கொள்க.

யாம் எழுதிமுடிக்குங்காலை நண்பர் **சோமசுந்தரம்பிள்ளை அவர்கள்** ஒன்பது முதலியவற்றைப் பற்றிய ஆராய்ச்சி பல்லாண்டுகளுக்குமுன் "செந்தமிழ்க்கண் நடைபெற்றுள்ளதாக அறிவுறுத்தினர். அதுகொண்டு செந்தமிழ்த்தொகுதிகளை ஊடுருவிப் பார்க்க, செந்தமிழ்த் தொகுதியில் **கோபிநாதராவ் அவர்கள்** எழுதியதைக் கண்ணுற்றேம். யாம் கொண்ட கொள்கையையும் ஒருசேரக் காட்டித் தெலுங்கு கன்னடம் முதலிய மொழிகளில் இலக்கணநூலுடையார் கொள்கைகளையும் மொழிநூற்கொள்கைகளையும் விரித்துள்ளார். அவை எம்கொள்கையைப்பெரிதும் வலியுறுத்துகின்றனவாயிருக்கின்றன. அவைகளைப்பற்றியும் அவர்கள் முடிபைப்பற்றியும் பின்னும் எழுதுவாம். நாட்டாரவர்களும் அவைகளைப்பற்றியும் இப்பொழுது யாம் எழுதிய கட்டுரையிற் கொண்ட பொருளைப்பற்றியும் தம் ஆராய்ச்சியை வெளியிடுவார்கள் என்ற ஆர்வத்துடன் இருக்கின்றேம்.

உ

சோதி மரம்.

திருவாளர் அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அரசியலார் கல்லூரி, கோயமுத்தூர்.

இது ஒரு மரம். இதைப்பற்றி எழுதத் துவக்குமுன்

உலகனைத்தும் செலவல்ல உயர்பொருட் சீரிய கவிஞன் ஆகிய கம்பன் பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது. அது இராமாயணத்தில், மாரீசன் மானாக வந்தபோது அதன் உடலின் புதுமையைக்கண்டு இலக்குவன் 'இத்தகைய ஒரு விலங்கும் உலகத்தில் உண்டோ? இது ஏதோ ஒரு மாயமாக இருக்கிறது' என்றலும் அவனுக்கு, இராகவன் கூறியதாக வுள்ளது.

'இவ்வுலகினையும், அதிற்றோன்றும் பல்வேறு வகைப் படைப்புப் பொருள்கள் முதலியவற்றையும் உள்ளவாறு நன்குணர்ந்த பல்லான்ற கேள்வி வல்லுநரும், இன்னும் இனைத்தெனப் பொதுவகையானும் அறிந்திராத பல்லாயிரங் கோடிப்படைப்புப் பொருள்களை இவ்வுலகம் உடையதாயிருக்கிறது என்னுங் கருத்தை யடக்கிய

நில்லா வுலகின் னிலைநேர் மையினால்
வல்லா ருமுணர்ந் திலர்மன் னுயிர்தாம்
பல்லா யிரகோ டிபரந் துளவால்
இல்லா தனஇல் லையிளங் குமரா

என்னும் பாடலாம்.

இதன் கருத்தின்படி படைப்புப்பொருள்களில் இம்மரமும் ஒன்றாகும்.

இம்மரம் சில மலைகளிலும், குன்றுகளிலும் முளைத்துவளர்ந்திருக்கும். இராக்காலத்து இருளாயிருக்கும்பொழுது இம்மரம் ஒருஅனற்பிழம்பு போலக் காணப்பட்டுச் சுற்றுமுற்றும் ஒளி வீசிக் கொண்டிருக்கும். பகற்காலத்திலும், நல்லநிலாவையுடைய இராக்காலத்திலும் இது சாதாரணமான ஒரு மரம் போலவே காணப்படும்.

மலைகளிலே வாழ்ந்துவரும் குறவர்களிலும், மலையடுத்த ஊர்களில் வாழ்ந்துவரும் உழவர்களிலும் பலர், இம்மரத்தின்சுடரைக் காணுந்தோறும் ஒன்றோடொன்று உராய்ந்து தீப்பற்றி யெரியு மரங்களில் இதுவும் ஒன்று என எண்ணி யொழிவர்.

யாதேனும் ஒரு காரணத்தினால் இரவிருளில் மலையில் தங்க நேர்ந்தவர்கள் இம்மரத்தின் அருகில் இருப்பரேல் இதன் உண்மையை அறிவர்.

வெள்ளியங்கிரி என்னும் மலை ஒன்று உண்டு. பாரதநாட்டிற்கு வடவெல்லையாய் ஒரு மதிற்சுவற்போல் இமயமலை நிற்பது போலவே, இம்மலை கொங்குநாட்டின் மேலெல்லையாய் ஓர் மதிற்சுவர்போல் நிலவுகின்றது. சிவபரஞ்சுடரே இம்மலை வடிவாக நின்று உயிர் வருக்கங்களை உய்யக் கொண்டருளுகின்றாரென்று கொண்டு இந்நாட்டின் பல பகுதியிலிருந்து மக்கள் வருடந்தோறும் வந்து வணங்கிப் பேறெய்துகின்றனர்.

இது இனைய தாதலை,

வடக்குத் தலைமலையாம் வைகாவூர்தெற்குக்

குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்றம்,

என்னும் கொங்குநாட்டெல்லை குறிக்கும் ஒரு பழைய வெண்பாவாலும்,

> தெங்கொடு பூகஞ் செறிந்து வளங்கள்
> தங்கிய கொங்கு தலைப்பட லுற்றான்
> மங்கல சின்மய மால்வரை கண்டான்
> அங்கண்வ ணங்கி னன்பி னடுத்தான்.

என்னும் பேரூர்ப் புராணத்தாலும் அறியலாம்.

சிவதலங்களனைத்தினும் மிக்கசிறப்புடைத்தலமாகிய பேரூருக்கு இம்மலை மூலத்தானமாகையினால், பேரூர்த்தல புராணங் கூறவந்த புலவர் பெருமான் திருவாடுதுறை யாதீனம் கச்சியப்ப முனிவர் இவ்வெள்ளியங்கிரியைப்பற்றி நன்கு பாராட்டிக் கூறுவர்.

இம்மலையிலே தான் இன்றும் காணலாம்படி இச்சோதி மரம் இருக்கின்றது. இது போன்ற இன்னும் பல வியப்புப் பொருள்களும் இங்கு உளவென்ப.

இதனை:—

எம்மை யாளு மிரசத மால்வரை
மும்மை வையக மூந்தொழு மூன்றுகட்
செம்ம லார்தந் திருவுரு வாதலால்
விம்மி தங்கள் விறந்தன வாங்கரோ.

என்றும்,

"ஓதலுறும் பாற் கிணற்றுக் கீழ்த்திசையி லோசனைமூன் றளவிற்காணும்சோதிமரமுளது"................. என்றும் வரும் பேரூர்ப் புராணம் விம்மிதப்படலச் செய்யுட்களால் அறியலாகும். அன்றியும், சிவபரஞ்சுடர், இம்மலையின் வடிவங்கொண்டதினால் அவர்க்குரிய பொருள்களும் ஏற்ற பெற்றியின் வந்து அமைந்திருந்தன என்று கூறும் மற்றோரிடத்திலும்

செங்கையி னமைந்தொளி திகழ்ந்ததழ லொப்பத்
துங்கவொளி கான்றுவளர் சோதிமர மங்கைத்
தங்குதுடி யின்னொலி தழங்குதல் கடுப்ப
அங்கணமர் வேடரெழு மாகுளியுங் கண்டான்

என்று இம்மரத்தைப்பற்றி அந்நூலாசிரியர் கூறியிருக்கின்றனர். கோயமுத்தூர் நகருக்குக் குழாய்த்தண்ணீரைக் கொண்டுவர இவ் வெள்ளியங்கிரியில் ஆற்றைத்தேக்கும் வேலையின் மேற்பார்ப்போர் (Channel Superintendent) இச்சோதி மரத்தைக் கண்டதாகக் கூறுகின்றார்.

இம்மலையில் வாழ்நராகிய மலைசர் (மலைசார்) களால் இம்மரமிருப்பது கேட்டு, ஒரு இருளில் தங்கி இம்மரம் ஒளி வீசுவதைத் தாம்கண்டதாகவும், உச்சிமலையில் கடவுள் எழுந்தருளியிருக்கும் குகைக்கருகில் ஒரு கோபுரத்தின் முதல் நிலை போல இயல்பிலமைந்திருப்பதாகிய தோரணக்கல் இருக்குமிடத்திற்குச் சற்றுத்தூரத்தில் இம்மரம் இருப்பதாகவும், தாம் பார்க்கும்போது இம்மரத்தைச்சுற்றிலும் இருபது முழதூரம்

ஒளிவீசியிருந்ததாகவும் சில நாளைக்குமுன் வெளிவந்த இவ்வூர் வாராந்தப் பத்திரிகை ஒன்றில் வெளியிட்டிருக்கிறார்.

இனி இம்மரத்தைப் போலவே ஒளிவிடும் கொடியும் ஒன்று உண்டுளனவும், அது சோதியங்கோடி யெனப்படும் எனவும் சிவப்பிரகாசசுவாமிகள் வாக்கினால் அறிகிறோம்.

அது-

தொடையுடைத் திரடோள் சமன்புறத் துடலம்
தொலைக்குமுன் னகத்துட றொலைத்துத்
தடையறத் திகழ்பே ரறிவுரு வாகத்
தமியனேற் கருளுநா ளுளதோ
புடையினிற் கரிக்கோ டிளம்பிறை கடுப்பப்
பொங்குசோ திபங்கொடி விரித்த
சடையெனப் பரந்து கிடந்தொளிர் சோண
சயிலனே கயிலைநா யகனே

என்னும் சோணசயிலமாலைப் பாடலாம்.

இவற்றைப்பற்றி ஓடதிவருக்கநூலார் (Botanists) கூறுவது:-

'காளான் வருக்கத்தைச் சேர்ந்த சில படர்பொருள்களாகிய பாக்டேரியா' (Bacteria) என்பவை, சில மரங்களின் புறத்துப்பட்டையிலும், சில கொடிகளின் புறத்துத் தோலிலும் பற்றிப்படரும். இம்மரங்களைச் சுற்றிலும் பிராணவாயு இருக்கும் வரையும் இப்படர்பொருள்கள் ஒளிவீசிக் கொண்டிருக்கும். இவை இப்பிராணவாயுவையுட்கொள்ளும்போதுதான் ஒளிகிளம்பும் என்பதாம்.

இவற்றால் சோதிமரத்தின் நிலை யினைத்தென அறிந்தாம்.